மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை MANNA

பொழிவு - 7
குவிப்பு - 06
பக்கங்கள் - 14
விலை ரூபா 15.00
ஜூன், 2004

THE ONLY TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, Mannar, Sri Lanka. T. P: 023 - 2232377

புலம் பெயர் தமிழ்க் கத்தோலிக்க மக்களின் பெருவிழா

பிரான்ஸ் சார்ட் மாதா திருத்தல விழா

பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் வருடந்தோறும் திருப்பயணம் மேற்கொள்ளும் திருத்தலம்

(பிரான்சிலிருந்து மன்னா செய்தியாளர் திரு. ஜெயரெட்னம்)

பிரான்ஸ் வாழ் இலங்கைத் தமிழ் கத்தோலிக்க மக்களின் பெருவிழாவாகக் கொண்டாடப்படும் சார்ட் திருத்தல திருயாத்திரை விழா இவ்வருடம் வைகாசி மாதம் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியில் இருந்து மாலை 7.00 மணிவரை வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பிரான்சில் உள்ள இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் இவ்விழாவுக்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தது. இவ்விழா தமிழ் கத்தோலிக்க மக்கள் மட்டுமன்றி இலங்கைத் தமிழ் மக்கள் அனைவரும் பங்கெடுக்கும் பெருவிழாவாகும். இம்முறை 5000 ற்கும் மேற்பட்ட மக்கள் இவ்விழாவில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

கி. பி. 743ல் கட்டப்பட்டதாகக் கருதப்படும் சார்ட் திருத்தலப் பேராலயத்தின் தோற்றம்

பேராலயத்தின் கீழ் மண்டபத்தில் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டுள்ள மரியன்னையின் திருத்துகில்

இவ்விழாவிற்கு சார்ற்றஸ் (CHARTRES) நகரப் பேராயர், நகர மேயர், உயர் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் போக்குவரத்து அதிகாரிகள் ஆகிய யாவரும் தங்கள் பூரண ஒத்துழைப்பை நல்கியிருந்தனர். இப்பேராலயம் பிரான்ஸ் நாட்டில் மிகவும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆலயமாகும். கி.பி. 743 இல் இது கட்டப்பட்டதாக சரித்திரம் கூறுகின்றது. இம்மரியன்னை பேராலயம் "சார்ட்" நகரில் இருப்பதால் "சார்ட் மாதா திருத்தலம்" என்று இது அழைக்கப்படுகிறது. இது பாரிஸ் மத்தியில் இருந்து 50 கி. மீ. தொலைவில் இருக்கிறது. பிரான்ஸ் வாழ் மக்கள், தங்கள் விண்ணப்பங்களையும் வேண்டுதல்களையும் சார்ட் மாதா பாதத்தில் வைத்தால் அது நிட்சயம் கிடைக்கும் என்ற அசையாத நம்பிக்கையுடையவர்களாக இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த 20 வருடங்களுக்கு மேலாக தமிழ் மக்கள் பிரான்ஸ் மக்களுடன் இணைந்து யாத்திரை செய்து வந்தனர். பின்னர் கடந்த 10 வருடங்களாக தமிழ் மக்கள் தனித்து திருயாத்திரை செய்ய பிரான்ஸ் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் சகல ஏற்பாடுகளையும் செய்து வருகிறது.

செவாலியர் வேதம் பெல்டானொ

தனது 100வது வயதில் காலமானார்

பேசாலையைச் சேர்ந்த பாப்பரசரின் செவாலியர் விருது பெற்ற திரு. ஜேம்ஸ் வேதநாயகம் பெல்டானொ அவர்கள் தனது 100வது வயதில் காலமானார். 27. 05. 2004ம் திகதி அன்று தனது 100வது பிறந்த நாளை பேசாலையிலுள்ள தனது இல்லத்தில் கொண்டாட இருந்த வேளையில் 20. 05. 2004 அன்று காலமானார்.

இவர் 27. 05. 1905ல் பிறந்தார். 1949 ம் ஆண்டு மரண விசாரணை அதிகாரியாகவும் 1950ம் ஆண்டு J.P.U.M. என்ற பட்டத்தையும் பெற்றுள்ளார். இவரது வாழ்நாட்களில் இவர் திருச்சபைக்கு அளப்பரிய சேவையாற்றியதால் பாப்பரசர் 12ம் பத்திநாதரால் 1952ம் ஆண்டு "புறோ எக்கிளேசியார் எற் பொண்டுவிச்சே" அதாவது "திருச்சபைக்காகவும் பாப்பரசருக்காகவும் அயராது உழைத்தவர்" என்ற கௌரவப் பட்டத்தை பெற்றுள்ளார்.

மேலும் 1954ம் ஆண்டு எலிசபேத் மகாராணியால் "M.B.E" என்ற பட்டத்தையும் 1956ம் ஆண்டு மீண்டும் பாப்பரசரால் "K.S.G" அதாவது செவாலியர் என்ற பட்டத்தையும் பெற்று சிறந்த விசுவாசியாக வாழ்ந்து வந்தார். தனது தள்ளாத வயதிலும் நாளாந்தம் திருப்பலிக்கு சென்று நற்கருணை அருந்தும் பழக்கத்தை கொண்டிருந்த இவர் திருச்சபையின் வளர்ச்சிக்காக ஆலயக் கட்டுமானங்களுக்காக தாராளமாக உதவியர் என்பது குறிப்பிடத்தக்கது. அன்னாருக்கு மன்னார் திருச்சபை சார்பாக மன்னா தனது ஆழ்ந்த அஞ்சலியையும் அவரது குடும்பத்தவருக்கு அனுதாபத்தையும் தெரிவித்து நிற்கின்றது. இறைவனில் இவர் நித்திய அமைதி பெறுவாராக!

புதிய கிறிஸ்தவ விவகார அமைச்சர்

புதிய கிறிஸ்தவ விவகார அமைச்சராக திரு. மில்றோய் பெனாண்டோ அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த ஏப்ரல் மாதம் 20ம் திகதி கொழும்பு பேராயரைச் சந்தித்து உரையாடினார். அண்மையில் ஆயர் பேரவையினரையும் இவர் சந்தித்தார். இவரது பணி சிறக்க மன்னா தனது வாழ்த்துக்களை கூறிநிற்கின்றது.

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையினர்

அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகளை சந்தித்தனர்

இலங்கை ஆயர் பேரவையினர் கண்டியில் தமது அமர்வை முடித்துக்கொண்டு வெசாக் தினத்தை முன்னிட்டு அஸ்கிரிய மல்வத்த பீடாதிபதிகளைச் சந்தித்து வெசாக் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர். சிங்கள மொழியில் நடைபெற்ற இச்சந்திப்பானது ஒரு மகிழ்வான நிகழ்வாக அமைந்திருந்தது. இச்சந்திப்பின்போது யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்கள் இப்பீடாதிபதிகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டனர்.

மல்வத்த பீடாதிபதியை சந்தித்தபோது யாழ் ஆயரும் அஸ்கிரிய பீடாதிபதியைச் சந்தித்தபோது மன்னார் ஆயரும் விசேட உரையாற்றி தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

வவுனியாவில் விவிலியக் கற்கை நெறி

சான்றிதழ் வழங்கும் விழா

மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் 2003ம் ஆண்டு வவுனியாவில் நடாத்தப்பட்ட புதிய ஏற்பாடு 6 மாத விவிலிய கற்கை நெறியில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் சித்திரை மாதம் 24ம் திகதி மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் வண பிதா அ. சேவியர் குரூஸ் அடிகளாரின் தலைமையில் வவுனியா புனித அந்தோனியார் ஆலய மேய்ப்புப்பணி நிலையத்தில் இடம்பெற்றது. அன்றைய தினம் பழைய ஏற்பாடு 6 மாத விவிலிய கற்கைநெறி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இக்கற்கை நெறிக்கு பொறுப்பான பொதுநிலையினர் ஆணைக்குழு இயக்குனர் அருட்பணியாளர் விக்டர் சோசை அவர்கள் இவ்விழாவுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார்.

மன்னார் மறைமாவட்டக் குருக்களுக்கான

புதிய நியமனங்கள்

அருட்பணி.. அ மரியதாஸ் லியோன்	- பங்குத் தந்தை	- பண்டிவிரிச்சான்
அருட்பணி ஏ. ஜெயசீலன்	- உதவிப் பங்குத்தந்தை	- ஆட்காட்டிவெளி
அருட்பணி. எல். சுரேந்திரன் றெவல்	- உதவிப் பங்குத்தந்தை	- மன்னார்
அருட்பணி. எஸ். சத்தியராஜ்	- உதவிப் பரிபாலகர்	- மடுத்திருப்பதி
அருட்பணி.. எஸ். அன்ரன்	- உதவிப் பங்குத்தந்தை	- பேசாலை
அருட்பணி. பிரான்சிஸ் மரி டி கோல்	- உதவிப் பங்குத்தந்தை	- வவுனியா
அருட்பணி.. நிகால் ஜிம்பிறவுன் (யாழ்)-	உதவிப்பங்குத் தந்தை	- மன்னார்

புதிய பணிப்பொறுப்புக்கனை ஏற்கும் அருட்பணியாளர்களுக்கு மன்னா தனது மனம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவிக்கின்றது. கடந்த ஒரு வருடமாக மன்னார் பேராலயத்தில் உதவிப் பங்குத்தந்தையாக இருந்து தற்போது மிருசுவில் உதவிப் பங்குத் தந்தையாக புதிய நியமனம் பெற்றிருக்கும் அருட் பணி. வசந்தசீலன் அவர்களுக்கு நன்றியையும் வாழ்த்துக்களையும் மன்னா சார்பாக தெரிவிக்கின்றோம். (பதிப்பாசிரியர்)

இந்திய மீனவர் நல்லெண்ணத் தூதுக்குழுவின்

மன்னார் விஜயம்

இந்திய மீனவர்கள் நல்லெண்ணத் தூதுக்குழுவினருக்கும் மன்னார் பிரதேச மீனவர்களுக்கிடையிலும [illegible]ந்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது.

"நான் வாழும் நாளெல்லாம் ஆண்டவரைப் போற்றிப் பாடுவேன்" (தி.பா 105 : 33)

மன்னா

மனப்பொழிவு பதிப்பாசிரியர் பகர்வது

வாசிப்பை நேசிப்போம்

இன்று மனித வாழ்க்கை தொடர்ச்சியான ஒரு ஓட்டமாக மாறிவிட்டது. ஓடி ஓடி உழைக்கும் மனிதன் இன்று ஆற அமர இருந்து வாழ்வின் அர்த்தங்களை அசைபோட நேரமில்லாது தவிக்கின்றான். தனது சுய சிந்தனைகளை மட்டும் வைத்துக்கொண்டு தனது வாழ்வின் எல்லைக்கோடுகளை தீர்மானிக்க முயலும்போது அது சாதாரண சிந்தனைகளாகவே அமைந்து விடுகிறது. அதனால் வாழ்வில் எந்த முன்னேற்றமும் ஏற்பட வாய்ப்பில்லாமல் போய் விடுகிறது.

வாசிப்பை மனிதன் நேசிக்கும்போது மனித இதயம் புத்தெழுச்சி பெறுகிறது. புதிய கருத்துக்கள் சிந்தனைகள் அவனுக்குள் ஊற்றெடுக்கின்றது. அப்புதிய சிந்தனைகள் செயல்வடிவம் பெறும்போது அவனது வாழ்வு வளம்பெறுகிறது.

வெறும் கதையில் காலம் கரைகிறது

வேலை காலங்களில் நமது மக்கள் மிகவும் சுறுசுறுப்பாக இருப்பார்கள். அது வெள்ளாமை வேலையாக இருக்கலாம் அல்லது மீன்பிடி வேலையாக இருக்கலாம். ஆனால் நமது ஊர்களில் கிராமங்களில் அரிவு வெட்டுக்காலம் முடிந்து விட்டால் அல்லது மீன்பாடு இல்லை என்றால் வீதிகளிலும் சந்திகளிலும் நின்று வெறும் கதையளப்பதில் காலத்தை கரைக்கின்றனர். இப்படியான நமது வாழ்வு வெறும் வரட்சியான சிந்தனைகளைக் கொண்ட வாழ்வாகவே காணப்படுகிறது. எழுத்தறிவு மிக்க நமது சமுகங்கள் ஓய்வு நேரங்களை வாசிப்பதில் செலவளிக்க முன்வரவேண்டும்.

நேரத்தை நாசப்படுத்தும் ரி. வி. தொடர்கள்

நேரத்தை நாசப்படுத்தும் ரி. வி. தொடர்கள் இன்று நமது இல்லங்களையும் அங்கே உறையும் உள்ளங்களையும் வசப்படுத்தி வைத்திருக்கின்றன. வாசிப்பின் மூலம் தனது ஆழுமையை வளர்த்துக்கோள்ள வேண்டிய மனிதன் வெறும் உணர்ச்சிகளையே மூலதனமாகக் கொண்ட ரி. வி. தொடர்களுக்குள் தன்னை இழந்துகொண்டிருக்கிறான். கதையோட்டத்திற்கிடையே காட்டப்படும் தனக்குக் கொஞ்சமும் சம்மந்தமில்லாத விளம்பரங்களைப் பார்க்க கட்டாயப்படுத்தப்படுகிறான். இதனால் காலமும் நேரமும் வீணே விரையமாகிக்கொண்டிருக்கிறது.

இறக்குமதிக் குப்பைகளை இனம்காணுவோம்

இன்று இந்தியாவில் இருந்து ஏராளமான சஞ்சிகைகளும் புத்தகங்களும் இறக்குமதி செய்யப்படுகின்றன. இவற்றில் பெரும்பான்மையானவை வெறும் குப்பைகள். பொழுதுபோக்கிற்கும் மேலோட்டமான இரசனைக்கும் தீனி போடுபவை. இவற்றை நாம் சரியாக இனம் கண்டு ஒதுக்க வேண்டும். இவை பெரும் திரளான வாசகர்களை போதையில் ஆழ்த்தியுள்ளன. இந்தப் புதைசேற்றில் விருப்பத்துடன் புரள்வோர் பெரும் எண்ணிக்கையினர். எனவே எதை வாசிக்க வேண்டும் என்பதில் அவதானம் தேவை. தேர்ந்த தெளிந்த வாசிப்புத் தேவை. விலை கொடுத்து வீண் குப்பைகளை வாங்கி நமது பணத்தையும் நேரத்தையும் வீணடிப்பது அறிவீனமாகும். இன்று நமது தாய் மண்ணிலேயே ஏராளமான தரமான நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் வெளிவருகின்றன. இவற்றை நாம் வாசித்து யோசித்து பயன் உள்ள வாழ்வை வாழ நாம் நம்மையே பயிற்றுவிக்க வேண்டும்.

தனிமையைப்போக்கும் நண்பன் வாசிப்பு

தனிமை ஒரு கொடுமை. வாசிப்புப் பழக்கம் தனிமையை விரட்டியடிக்கும் சிறந்த தோழன். சிலருக்கு பொழுது போகவில்லையே என்பதுதான் பெரிய கவலை. கவலையைப்போக்கும் கைகண்ட மருந்து காலடியில் இருக்கும்போது நாம் ஏன் கலங்க வேண்டும். சிறந்த பத்திரிகைகளை, சஞ்சிகைகளை, நூல்களை நமது நிரந்தர நண்பனாக்கிக்கொள்வோம். வாசிப்பை நேசிப்போம். வாழ்வை வழப்படுத்துவோம்.

மீண்டும் மறு மடலில் வந்து சந்திக்கும்வரை

அன்புடன் – அருட்பணியாளர் நே[illegible]

வாசகர் எண்ணங்கள்

எளிய நடையில் காத்திரமான படைப்பு!

ஆசிரியர் அவர்களுக்கு, மன்னா பத்திரிகையின் ஒவ்வொரு இதழும் எளிய நடையில் காத்திரமான படைப்பாக வெளிவருகிறது. பல்வேறு ஆக்கங்கள், மாணவர்களுக்கான விடயங்கள், சிரிக்கவும் சிந்திக்கவும் கூடிய துணுக்குகள் போன்றவற்றின் மொத்தத் தொகுப்பாய் எம் கரங்களில் தவழ்ந்து மகிழ்விக்கின்றது. கடந்த 2004 சித்திரை மன்னாவில் பிரசுரமாகிய யாழ் ஆயரின் முயற்சியினால் ..... கிழக்கிலங்கையில் பதற்றம் ..... போன்ற ஈழத்திருநாட்டின் பிற மறைமாநிலச் செய்திகளுக்கும் மன்னாவில் இடம் ஒதுக்குவது வரவேற்கத்தக்கது. மன்னார் மறை மாநிலத்திற்குள் மட்டுமல்ல எமது ஏனைய மறைமாநிலங்களுக்கும் ஏன் கடல் கடந்து வாழும் கத்தோலிக்கருக்கும் ஆன்மீக தாகம் தணிக்கும் பானமாக, மருந்தாக நல் உணவாக மன்னா தொடர்ந்து பொழிந்திட வாழ்த்துகின்றேன்.

பாலையூர் தேவா, திருகோணமலை

அறிவுப் பசிபோக்கும் பெட்டகம்!

மிகவும் அற்புதமான முறையில் பல்வேறு தகவல்களைத் தன்னகத்தே தாங்கி வரும் "மன்னா" என்னும் அறிவுப் பசிபோக்கும் உணவுப் பெட்டகமே நீ. வாழ்க வளர்க உன் பணிசிறக்க வாழ்த்துக்கள் *நன்றி.* *ம. ஜெனி*

உள்ளங்களைக் கவர வைக்கும் ஆக்கங்கள்!

மாதம் ஒரு முறை பூத்துக்குலுங்கும் மன்னாவே, எமது உள்ளங்களைக் கவர வைக்கும் குறுக்கெழுத்துப் போட்டி, பெரியப்பா பதில்கள், கவிதைக் களம், மறைக்கல்விச் செய்தி மடல், வாழ்வு தரும் வார்த்தைகள், விளையாட்டும் மதமும் ஆகிய அம்சங்கள் மூலம் வாசகர் எம்மைப் படிக்கத் தூண்டுகிறீர்கள். அதற்கு எனது பாராட்டுக்களை உரித்தாக்குகின்றேன். உங்கள் இதழில் உள்ள செய்திகள் ஒவ்வொன்றும் எம்மைச் சிந்திக்க வைக்கின்றன. இலங்கையில் நடக்கும் நிகழ்ச்சிகளை உங்கள் மன்னா இதழ் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. மென்மேலும் மன்னா வளர்ச்சியடைய எனது வாழ்த்துக்கள்.

துரைசிங்கம் லூட்ஸ் மரீனா, அரிப்பு, முருங்கன்

மண்ணின் மணம் வீசும் மன்னா!

மன்னி நகரின் மண்ணின் மணம் கமழ
மறைச் செய்தியோடு எம் தளச் செய்திகளும்
தரமிக்க கவிதையோடு, நகச்சுவையமுதும்
தந்திடும் தரங்குறையாத மாதப்பிறப்பே
நீடுழி வாழ்கவென வாழத்துவதில்
நிகரில்லா ஆனந்தம் அடைகின்றேன்.
புலம்பெயர் நாட்டில் புகழிடம் கொண்டிருக்கும்
புதியவர், பூவையர், முதியோர் சிறியரும் - எம்
புதினம் அறியாமல் புலம்புபவர், புழுகுபவர்க்கும்
தளத்தின் செய்தியோடு தவத்திரு மறைவழியும்
தரமாய்த் தந்திடும் தங்கத் தமிழ் இதழே – நினை
புலத்தில் வாழும் எம் புகலிடந்தேடி தரும் - எம்
ஆசிரியர், நிர்வாகி, அனைத்து உதவியாளர்க்கும்
மண்ணின் மைந்தர் யாம் மட்டில்லா மகிழ்ச்சியுடன்
நன்றி நன்றியென நவில்கின்றோம் நன்றி பல.
மாதமொரு தரம் மலர்ந்திடும் எம் மன்னா
காலக்கிரமத்தில் கருத்தாளமிக்கதுமாய்
வாரமொருதரமெம் கரங்களில் வந்தமர
எல்லாம் வல்ல ஈசன் யேசு பிரான் - நல்
ஆசி பொழிந்திட தாசன் யான் வேண்டுகின்றேன்

புலம் பெயர் நாட்டு மன்னா வாசகி ,
மதிவதனா ஜெராட், ஜேர்மனி

இந்திய மரியாயின் சேனையாளர்கள்

"கிறிஸ்துவுக்காக அனைச்சல்" எனும் திட்டத்தின் கீழ்

மன்னார் மறைமாவட்டத்தில் மேற்கொண்ட தூதுரைப்பணி

மரியாயின் சேனைக் கைநூலை ஆராய்கின்றபொழுது ஆன்மாக்களுடன் தொடர்புகொள்ளும் ஆவல் பற்றிய பின்வரும் விடயத்தை நாம் நினைவு கூர வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அருகிலிருக்கும் ஆன்மாக்களுடன் தொடர்பு கொள்வதன் வழியாகத் தொடங்கி சாதாரண வாழ்க்கைச் சூழலுக்கு அப்பால் வெகு தொலைவு வரைக்கும் இந்த ஆவல் தொடர்ந்து செல்லுதல் வேண்டும். உரோமை சாம்ராஜ்ய வீழ்ச்சியுடன் விழ முனைந்த நம் திருமறையின் விசுவாசத்தைப் புதுப்பித்தவாறே மக்கள் திரள் ஆறாம் ஏழாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் அலைந்தது. சேனைக் கை நூலில் கூறப்பட்டுள்ள இந்த நிகழ்ச்சியானது இந்திய மரியாயின் சேனையாளர்களுக்கு தூண்டுகோலாக அமைந்தபடியினால் *கிறிஸ்துவுக்காக அலைச்சல்* எனும் பணியை மேற்கொண்டு 3.5.2004ந் திகதியன்று அவர்கள் இலங்கைக்கு வருகை தந்தனர்.

சென்னை சினாத்துஸ் தலைவர் சகோதரர் எம். தோமஸ் அவர்களின் தலைமையில் ஆன்ம இயக்குநர் மத்தியூ கொட்டப் பரம்பில் அவர்களின் வழிகாட்டுதலின்கீழ் 29 மரியாயின் சேனையாளர்கள் இலங்கைக்கு வருகை தந்திருந்தனர். இவர்களுள் 20 சேனையாளர்கள் யாழ்ப்பாணம், திருமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்குச் சென்றனர். மிகுதியான 9 மரியாயின் சேனையாளர்கள் சென்னை சினாத்துஸ் தலைவர் சகோதரர். எம். தோமஸ் அவர்களின் தலைமையின் கீழ் மன்னாருக்கு வருகை தந்திருந்தனர். மன்னார் மரியாயின் சேனை ஆன்ம இயக்குநர் அருட்தந்தை விக்டர் சோசை அடிகளார் அத்தருணம் இந்தியாவிலிருந்த காரணத்தினால் அருட்தந்தையர்களான மரியதாஸ், தேவராஜா கொடுதோர் ஆகியோர் சேனையாளர்களின் பிரயாண ஒழுங்குகளை கவனித்து வந்தனர்.

4.5.2004ந் திகதி பிற்பகலில் கொழும்பிலிருந்து மன்னாருக்கு வருகை தந்த சேனையாளர்கள் அன்றிரவே தங்கள் பணிகளை மேற்கொள்வதற்காக தலைமன்னார், பேசாலை, தோட்டவெளி, கீரி, தாழ்வுபாடு, மன்னார், வங்காலை, பள்ளிமுனை, நொச்சிக்குளம் ஆகிய இடங்களுக்கு உள்ளூர்ச் சேனையாளர்களால் அழைத்துச் செல்லப்பட்டனர். 5ம் திகதி முழு நாளும் தமது பணியிலீடுபட்டிருந்த சேனையாளர்கள்

6ந் திகதி காலையில் மடுப்பதிக்குச் சென்று மடு அன்னையைத் தரிசித்த பின்னர் அங்கிருந்து மாலையில் வவுனியா அந்தோனியார் ஆலயத்தைச் சென்றடைந்தனர். 7ம் திகதி பகல் முழுவதும் வவுனியா மறைக்கோட்டத்தைச் சேர்ந்த வவுனியா, இலுப்பைக்குளம், வேப்பங்குளம், செட்டிகுளம், முருங்கன் ஆகிய இடங்களில் சேனையாளர்கள் தமது பணிகளை மேற்கொண்டிருந்தனர். மாலையில் பணிகளை முடித்துக்கொண்ட சேனையாளர்கள் அன்றிரவு வவுனியாவில் இருந்து புறப்பட்டு மறுநாள் 7ம் திகதி அதிகாலை 2 மணிக்கு கொழும்பைச் சென்றடைந்து அங்கிருந்து விமான மார்க்கமாக இந்தியா திரும்பினர். இவர்கள் மன்னார் மறைமாவட்டத்தில் தங்கியிருந்த காலத்தில் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர்கள் என்ற பாகுபாடு காட்டாமல் அனைத்து இல்லங்களையும் தரிசித்து அங்குள்ள மக்களோடு உறவாடி இறையன்பை பகிர்ந்து கொண்டார்கள்.



கத்தோலிக்க திருச்சபை கொள்கைகளுக்கு எதிராக எழுப்பப்படும் பிரச்சினைகளுக்கு இவர்கள் விரிவான விளக்கமளித்தனர். தரிசித்த இல்லங்களில் உள்ளவர்களோடு ஒன்று சேர்ந்து செபித்து இறைவார்த்தையை பகிர்ந்துகொண்டனர். பிரசிடியக் கூட்டங்களைச் சிறப்பாக நடாத்துவது பற்றி சேனையாளர்களுக்கு அறிவுரை நல்கினார்கள். தமது விருத்தாப்பிய வயதையும் பாராமல் சேனையாளர்களை மன்னாருக்கு அழைத்து வந்த சினாத்துஸ் உதவி செயலாளர் சகோ. அருளானந்தையா அவர்களுக்கும் மன்னார் கொமிசிய கடிதர். சகோ. பெனடிக்ற் தார்சியஸ் அவர்களுக்கும் மன்னார் கொமிசியம் தனது உளம் தோய்ந்த மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

[illegible]தர் பொன்மொழி

[illegible]தை தேடுகிறவன் மரத்தை அணுக [illegible]ண்டும். இயேசுவைத் தேடுகிறவன் மரியாளிடம் போக வேண்டும்"

- புனித அல்போன்ஸ் லிகோரி -

புனிதர் பொன்மொழி

"நான் பெற்ற துன்பங்களுக்கு நன்றி இறைவா! உமது இரக்கம் என்னைத் தூய்மைப்படுத்தட்டும்"

- புனித ஸ்கொட்லாந்து மார்க்கரீத்தம்மாள் -

பாப்பரசரின் அங்கீகாரம் பெற்ற சர்வதேச சபையுடன்

இலங்கையின் முதல் சுதேச துறவற சபையாக புனித சூசையப்பர் சபை இணைந்தது!

இலங்கையில் உருவாக்கப்பட்ட துறவற சபைகளில் முதலாவதான புனித சூசையப்பர் சபை (S.S.J) பாப்பரசரின் அங்கீகாரம் பெற்ற ஓர் சர்வதேச சபையுடன் இணைந்தது. கடந்த 140 வருட காலமாக இலங்கையின் பல்வேறு பகுதிகளில் அளப்பரிய சேவைகளை ஆற்றிவந்த இச்சபை, பாப்பரசரின் அங்கீகாரம் பெற்ற சபையான அன்புச் சகோதரர்கள் சபையோடு இணைந்தது.

மேற்படி புனித சூசையப்பர் சபை ஓர் மறைமாநிலத்திற்குட்பட்ட சபையாக இயங்கி வந்ததால் இதன் வளர்ச்சிக்குத் தடையாக அமைந்த நிலைமையைக் கருத்திற் கொண்ட மட்டக்களப்பு – திருமலை மறை மாவட்ட ஆயர் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை எடுத்த நடவடிக்கையின் பயனாக, இச்சபை அன்புச் சகோதரர்கள் சபையோடு இணைவதற்கான உத்தியோக பூர்வ அனுமதியைப் பாப்பரசர் வழங்கியுள்ளார்.

இதன்படி, புனித சூசையப்பர் சபை, சர்வதேச சபையான அன்புச் சகோதரர்கள் சபையோடு இணையும் உத்தியோகபூர்வ வைபவம் ஏப்ரல் 26ம் திகதி திங்கட்கிழமை கோலாகலமாக நடைபெற்றது. மட்டக்களப்பு – திருமலை மறைமாவட்ட ஆயர் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தலைமையில், மட்டக்களப்பு, புளியந்தீவு புனித மரியாள் பேராலயத்தில் இந்த வைபவம் நடைபெற்றது. இந்த வைபவத்தில் கண்டி மறை மாவட்ட ஆயர் கலாநிதி வியானி பெர்னாண்டோ கலந்துகொண்டதுடன் அன்புச் சகோதரர்கள் சபைத்தலைவர் கலாநிதி றொனோஸ் ரொக்மன் இவ்வைபவத்தில் கலந்துகொண்டு, புனித சூசையப்பர் சபையை அன்புச் சகோதரர்கள் சபையுடன் உத்தியோக பூர்வமாக இணைத்துக்கொண்டார். (தொடர்ச்சி 10ம் பக்கம்)

வாழ்வுதயத்தின் அனுசரணையுடன் மன்னார் மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை இயக்குனர் நோபட் அடிகளாரின் தலைமையில் மன்னார், முருங்கன் மறைக் கோட்டங்களைச் சேர்ந்த 50 பாலத்துவ சிறார்களும் அவர்களின் ஊக்குவிப்பாளர்களும் தென்னிலங்கை நோக்கிய சமாதானப் பயணத்தை மேற்கொண்டிருந்தபோது.

பங்குத் தள சங்கதிகள்... பங்குத் தள சங்கதிகள்...

செட்டி குளத்தில் முதியோர் தின விழா

செட்டிகுளம் பங்குக்கு உட்பட்ட சகல சிற்றாலயங்களிலிருக்கும் 60 வயதிற்கு மேற்பட்ட அனைத்து முதியோர்களையும், கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 04. 04. 2004 அன்று இடம்பெற்றது. இம்முதியவர்கள் கடந்த காலங்களில் ஆற்றிய பணிகள் நினைவு கூறப்பட்டது. சிறப்புத் திருப்பலியை அருட்தந்தை விக்டர் சோசை அடிகள் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார். அன்றைய தினம் அனைத்து முதியோர்களுக்கும் திருச்செபமாலை அணிவிக்கப்பட்டது. ஏறத்தாள 55 முதியோர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்கள். அதில் இந்து, முஸ்லிம் பெரியார்கள் ஒருசிலரும் கௌரவிக்கப்பட்டனர்.

ஆலய சபை செயலர், அ. அமல்ராஜ

முதலியார் குளத்தில் அடிக்கல் நாட்டு விழா

செட்டிகுளப் பங்கின் முதலியார்குளம் கிராமத்தில் புதிதாக அமைக்கப்படவிருக்கும் புனித அந்தோனியார் ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் 31.03.2004 அன்று காலை 11.30 மணியளவில் இடம்பெற்றது. பங்குத்தந்தை ஸ்ரீபன்ராஜா அவர்களும் பங்குமக்களும் சேர்ந்து இம்முயற்சியில் ஈடுபட்டனர். மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா.யோசேப்பு ஆண்டகை அவர்களினால் அடிக்கல் நாட்டப்பட்டது. இவ்வைபவத்திற்கு இந்து மதத் தலைவரும், இஸ்லாம் மதத் தலைவரும் கௌரவ வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். கட்டிட நிர்மாணப்பணிகள் யாவும் பங்கு மக்களின் அயராத உழைப்பினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஏ. ரெனிக்ஷன், சென் அன்ரனீஸ் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம், முதலியார்குளம்

வழிபாட்டுக் குழுவினருக்கான பயிற்சி

மன்னார் மறைமாவட்ட வழிபாட்டுக்குழுவினருக்கான இரண்டு நாள் பயிற்சிப் பாசறை முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலய வளாகத்தில் 2.5.2004 தொடக்கம் இரு நாட்கள் நடைபெற்றது. அருட்பணி ச. கிறிஸ்ரியன் வாஸ் அவர்களின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இப்பயிற்சிப் பாசறையில், தாழ்வுபாடு, செட்டிகுளம், அளவக்கை, முருங்கன் போன்ற பங்குகளிலிருந்து வந்திருந்து வழிபாட்டுக்குழுவினரோடு அருட்பணி ஸ்ரிபன்ராஜ், முருங்கன் அருட்சகோதரி சயந்தினி ஆகியோரும் கலந்து பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

தேவா அல்மேடா

இளைஞர்களுக்கான ஆளுமை விருத்தி பயிற்சிக்களம்

மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய செயற்குழுவினருக்கான ஆளுமை விருத்திப் பயிற்சிக்களமானது சேவா லங்கா பணிப்பாளர் திரு. நியூட்டன் அவர்களால் ஏப்ரல் மாதம் 15,16,17ம் திகதிகளில் வவுனியாப் பங்கில் நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் 45க்கும் மேற்பட்ட செயற்குழு உறுப்பினர்கள் பங்குபற்றியதுடன் பங்கு இளைஞர் ஒன்றியங்களின் போசகர் இருவரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். இந்நிகழ்வானது நான் யார் என்று அறிய உதவியதுடன் ஒவ்வொருவரும் தமது ஆளுமையை பரிசிலிப்பதற்கு தக்கதொரு சந்தர்ப்பமாகவும் அமைந்திருந்தது.

எஸ். றெஜி, எ. அருண்.

முருங்கனில் பீடப்பணியாளர் ஒன்றுகூடல்

முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலய பீடப்பணியாளர்களின் தேவ அழைத்தலை பொட்டிய ஒன்று கூடல் 2.5.2004 அன்று முருங்கன் ஆலய வளாகத்தில் சிறிய குருமட அதிபர் அருட்பணி எஸ். தேவராஜா கொடுதோர் அடிகளாரின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. பங்குத்தந்தை தேவசகாயம் பிள்ளை அடிகளார் பாப்பரசரின் கொடியை ஏற்றிவைத்து நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார். பின்பு ஒன்றுகூடலும், கலை நிகழ்வுகள், விளையாட்டு என்பனவும் நடைபெற்று திருப்பலியுடன் இந்நிகழ்வு நிறைவு பெற்றது.

தகவல்: தேவா அல்மேடா.

பிச்சைகுளத்தில் அன்பிய ஊக்குவிப்பு

அன்பிய பொறுப்பாளர் அருட்தந்தை யூட்குரூஸ் அடிகளார் தலைமையில் அன்பியப் பணியாளர்கள் பிச்சகுளம் கிராமத்தில் 5.5.2004 அன்று குழுக்குழுவாகச் சென்று வீடுகளைத் தரிசித்தனர். இறுதியில் 6.30 மணியளவில் மாதா ஆலயத்தில் அன்பிய வழிபாட்டுடன் அன்பியக் குழுக்கள் அமைத்து திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.

அ. அலெக்சாந்தர், ஆலயசபை தலைவர்.

கன்னாட்டியில் ஆலய விழாவும் தொழிலாளர் தினமும்

கன்னாட்டியில் தொழிலாளர் தினமும் திருநாள் திருப்பலியும் 01.05.2004 அன்று சிறப்பாக இடம்பெற்றது. மறைமாவட்டத்தில் பல பாகங்களிலும் இடம்பெயர்ந்திருந்த கிராம மக்கள் ஒன்றுகூடி இவ்வருடம் மிகச் சிறப்பாக இவ்விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவை பங்குத்தந்தை ஸ்ரீபன்ராஜா அடிகளார் வழிநடத்த அருட்தந்தையர்கள் ம. ஜெயசீலன், சத்தியராஜ் ஆகியோரின் உதவியுடன் கூட்டுத் திருப்பலி நிறைவேற்றப் பட்டது. திருச்சுரூப பவனியுடன் விழா இனிதே நிறைவெய்தியது.

திரு. வ. அந்தோனிப்பிள்ளை, கன்னாட்டி

புலமைப் பரிசில் பரீட்சையில் நானாட்டான் முசலிக் கோட்டத்தில் முதலிடம்

2004ல் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மன்/அரிப்பு.றோ.க.த.க. பாடசாலையைச் சேர்ந்த செல்வி இருதயதாசன் ஜென்சிலா லோகு என்பவர் பெறுபேறு அடிப்படையில் 153 புள்ளிகள் பெற்று நானாட்டான் முசலிக் கோட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார். இவர் மன்னார் மாவட்டத்தில் 5ம் இடத்தையும் பெற்றுள்ளார். எமது பாடசாலையில் இருந்து புலமைப் பரிசில் பரீட்சையில் 5 மாணவர் சித்தியடைந்துள்ளனர். அத்துடன் முசலி, நானாட்டான் கோட்ட ரீதியான பாடசாலைகளில் 2004ல் இ[illegible] அ[illegible]டிய எண்ணிக்கையாகும். இம்மாணவியை ஆ[illegible] யேசுநேசன் அந்தோனியா லியோன் ஊக்குவி[illegible] தந்தை அ. இருதயதாசன் லோகு. தாய் இ. மறிஸ்[illegible] ஆவர். ஜென்சிலாவுக்கும் அவரது வெற்றிக்கு உறுது[illegible] விளங்கிய அனைவருக்கும் மன்னா தனது மனம் நிறை[illegible] பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றது.

ஜூன் 27ந் திகதி

உலக சமூகத் தொடர்பு தினத்தன்று

மன்னார் மறைமாவட்டப் பங்குகளில்

மன்னா ஞாயிறு தினம்

ஜூன் 27ந் திகதி உலக சமூகத் தொடர்பு தினம். அன்று மன்னார் மறைமாவட்டத்தில் மன்னா ஞாயிறு தினமாக அனுஸ்டிக்கப்பட உள்ளது. இது தொடர்பான விளக்கமான கடிதங்களும் துண்டுப்பிரசுரங்களும் போஸ்டர்களும் பங்குத் தந்தையர்களுக்கும் பங்குகளில் உள்ள மன்னா விநியோகஸ்தர்களுக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. மன்னார் மறைமாவட்டத்தின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க பத்திரிகையாகிய மன்னாவை மறைமாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பங்களும் வாங்கி வாசித்து பயனடையும்படி ஊக்குவிப்பதும் மன்னா பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதுமே இந்த மன்னா ஞாயிறு தினத்தின் நோக்கமாகும்.

அமல மரித் தியாகிகளின்

ஆன்மீகக் கல்வி மையம்

OBLATE CENTER FOR RELIGIOUS STUDIES

"ஞானோதயம்", மன்னார்

தேசிய மட்டத்தில் இலங்கையிலுள்ள எல்லா மறை வட்டங்களிலுமுள்ள தமிழ் இறைமக்கள் துறவியர் ஆகியோரின் விசுவாச உருவாக்கத்திற்கு உறுதுணையாக விளங்குவது இம் மையத்தின் நோக்கமாகும். ஆசிய சூழமைவில் இறை வெளிப்பாட்டை விளங்கி, துறவியர், பொதுநிலையினருக்கு ஆன்மீகக் கல்வியையும், பயிற்சிகளையும் அளித்து ஆசிய இறையியலை வளர்த்தலுக்கு ஆவன செய்வதிலும் இம்மையம் முயற்சி எடுக்கும்.

- விவிலிய கருத்தரங்குகள் நடாத்துதல்
- பொதுநிலையினருக்கான ஆன்மீகப் பயிற்சிகள் அளித்தல்
- எழுச்சி மகாநாடுகள் நடாத்துதல்
- தேசிய மட்டத்தில் ஒன்றிப்பை வளர்த்தல்
- ஆசிய இறையியலை, சிந்தனைகளை வளர்த்தல்
- துறவியர், குருக்களுக்கான கருத்தமர்வுகள்
- 40 பேர் தங்கியிருந்து பயிற்சி பெறும் வசதிகள் உண்டு.
- விரும்பியவர்கள் தியானங்கள், ஒன்றுகூடல்கள், கருத்தரங்குகளை இங்கு நடத்தலாம். எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
- ஆவணி 2004 தொடக்கம் பயிற்சிகள் ஆரம்பமாகவுள்ளன. இது பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: பணி. ஸ்ரனி அன்ரனி அ.ம.தி.
பயிற்சி இணைப்பாளர், "ஞானோதயம்", தாழ்வுபாடு வீதி, கீரி, மன்னார். தொ.பே.இல. 023-2232969

முருங்கனில் அன்பியத்திற்கு புத்தூக்கம்

முருங்கன் பங்குக்குட்பட்ட இடங்களில் இயங்கி வந்த அன்பியங்கள் சிறிது காலமாக செயலிழந்துவிட்ட நிலையில் அதனை மீண்டும் இயங்க வைக்க பங்குத்தந்தை அருட்பணி தேவசகாயம் பிள்ளை அடிகளார் எடுத்த முயற்சியின் பயனாகக் கடந்த 4.5.2004 தொடக்கம் அன்பியப் பொறுப்பாளர் அருட்பணி யூட் குரூஸ் அன்பிய மத்திய குழு உறுப்பினர்கள் இப்பங்குக்கு விஜயம்செய்து, மீண்டும் அன்பிய வாழ்வின் அவசியத்தை வலியுறுத்தி வீடுதோறும் சென்று மக்களைச் சந்தித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினர். அதற்கிணங்க அன்பிய வலயங்கள் பிரிக்கப்பட்டு 7.5.2004 தொடக்கம் மீண்டும் இப்பங்கில் அன்பிய விளக்கு ஏற்றப்பட்டு செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. முன்னைய உயிலங்குளம் பங்குத்தந்தையும், தற்போது யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளருமான அருட்பணி மத்தாயஸ் அடிகளார், தமது குழுவினருடன் முருங்கன் ஆலயத்தில் நடைபெற்ற அன்பிய ஒன்றுகூடலில் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

தேவா அல்மேடா.

முத்தரிப்புத் துறையில் பொன்விழா மேதின நிகழ்வுகள்

2004ம் ஆண்டு முத்தரிப்புத் துறையில் மேதினக் கொண்டாட்டமானது பொன்விழா ஆண்டு சிறப்பு மேதினமாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்விற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகள் எனப் பலர் அழைக்கப்பட்டிருந்தனர். புனித சூசையப்பர் விளையாட்டுக்கழகம் உருவாகி 50 வருடங்கள் பூர்த்தியாகும் நிகழ்வை ஒட்டி பொன்விழாவாக இந்நிகழ்வு அமைந்திருந்தது. இக்கழகத்தை உருவாக்க கனவு கண்ட காலம் சென்ற முத்துக்களான பெரியவர்களுக்கும் வாழ்கின்ற சொத்துக்களான பெரியவர்களுக்கும் இந்நிகழ்வில் நன்றி தெரிவிக்கப்பட்டது. கலைநிகழ்வுகளும் விளையாட்டு நிகழ்வுகளும் பரிசளிப்பு [illegible]கழ்வுகளும் இடம்பெற்றன. கழகப் போசகரும் முத்தரிப்புத் [illegible]றைப் பங்குத் தந்தையுமான அருள்பணியாளர் மாக்கஸ் [illegible]டிகளார் இந்நிகழ்வுகளுக்கு ஆதரவும் அனுசரணையும் [illegible]ருந்தார்.

சிறுவர் வாழ்வு

தெய்வத்தின் தரிசனம்!

சிறுவர் சிந்தனைக் கதை

நல்லூர் என்னும் ஒரு சிறிய கிராமத்தில் ஏராளமான குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. அதிலே ஒரு தாயும் மகளும் மிகவும் அன்போடு வாழ்ந்து வந்தனர். ஒருசில நாட்களில் அந்தத் தாய்க்கு வருத்தம் வந்தது. அந்த வருத்தத்தில் அவள் மரண அவஸ்த்தைப்பட்டாள். அங்கே இருந்த அவளது மகள் உள்ளறைக்கு ஓடிச்சென்று, "ஆண்டவரே எனது தாயைக் காப்பாற்றும்" என்று ஒரு தடவையல்ல பலதடவைகள் உரத்த குரலில் வேண்டினாள். உடனே அங்கே ஒரு வானதூதர் தோன்றினார். மூன்று மாம்பழங்களை அந்தச் சிறுமியிடம் கொடுத்து "பக்கத்தே இருக்கும் ஆலயத்தில் இவற்றை காணிக்கையிடு" என்று கூறினார்.

இந்தச் சிறுமியும் அவ்வாறே அவற்றைக் கொண்டு சென்றாள். வழியில் பிச்சைகார மனிதர் ஒருவரைக் கண்டு அவருக்கு ஒரு மாம்பழத்தைக் கொடுத்துவிட்டு சென்றாள். கோவில் வாசலை அடைந்ததும் அங்கே இரண்டு பிச்சைக்காரர்கள் பிச்சை எடுப்பதைக் கண்டாள். அவர்களுக்கு மிகுதி இரண்டு மாம்பழங்களையும் கொடுத்துவிட்டு ஆலயத்திற்குள் சென்றாள். அங்கே சென்று "ஆண்டவரே உனக்குக் காணிக்கையிட கொண்டுவந்த மூன்று மாம்பழத்தையும் வழியில் இருந்த ஏழைகளுக்கு கொடுத்து விட்டேன்" என்றாள்.



ஆண்டவர் அங்கே தோன்றி "மகளே உனது வீட்டிற்குச் செல். அங்கே உனது தாய் குணமடைந்து இருப்பதை நீ பார்ப்பாய்" என்று கூறினார். அக்குழந்தையும் அவ்வாறே மிகவும் சந்தோசமாக வீடு சென்று பார்த்தது. அங்கே அவளது தாய் மிகவும் நல்ல சுகத்தோடு இருந்தாள்.

ஆக்கம் : ஆ. சுமித்ரா றெவல், வங்காலை.

புனிதர் என்றால் யார் தெரியுமா?

தம் அந்தஸ்தை உணர்ந்தவர் | கொண்டாடத் தெரிந்தவர் | அன்பு செய்யப்படுவதை நம்புபவர் | நெகிழ்ந்து கொடுக்கும் ஆற்றல் அவருக்கு உண்டு.

சிரிக்க நீங்க ரெடியா?

ஆசிரியர்:- தமிழில் சிறந்த மொழி எது?
மாணவன்:- உங்க மகள் தேன்மொழி சார்.

ஆசிரியர்:- கவிஞர் வர்ணித்ததுபோல் நம் நாட்டில் பாலும் தேனும் பெருகி ஓடினால் எப்படி இருக்கும்?
மாணவன்:- எறும்புக்கடி தாங்க முடியாது சார்.

இறந்த ஒருவரின் ஆவி மோட்சத்தின் கதவைத் தட்டியது. புனித பேதுருவானர் கதவைத் திறந்தார்.
பேதுரு:- உனக்கு என்ன வேண்டும்?
ஆவி:- மோட்சத்தில் எனக்கு இடம் வேண்டும்.
பேதுரு:- அதற்கு உனக்கு என்ன தகுதி உண்டு?
ஆவி:- இறப்பதற்குமுன் ஒரு பிச்சைக்காரனுக்கு 10 ரூபா காசு போட்டேன்.
பேதுரு: வேறு ஏதாவது செய்தாயா?
ஆவி:- இல்லை.
பேதுரு:- (தன் உதவியாளரைப் பார்த்து) அந்தப் பத்து ரூபாக் காசைக் கொடுத்து இவனை நரகத்திற்கு அனுப்பு.

காதலி:- கல்யாணம்தான் கட்டிக்கிட்டு ஓடிப்போலாமா?
காதலன்:- அப்ப சீதனம்.....?

ஆசிரியர்:- இயேசு பல பேய்களை ஓட்டினார். இதிலிருந்து என்ன தெரிகிறது?
மாணவன்:- பேய்கள் ஓடும் என்பது தெரிகிறது?

அ. அருண், 7ம் வட்டாரம், விடத்தல்தீவு

கடைக்காரன்:- என்ன வேண்டும்?
வாடிக்கையாளர்: கடனுக்குப் பொருட்கள் கொஞ்சம் தருவீர்களா?
கடைக்காரன்:- உங்கள முன்ன பின்ன பார்த்ததில்லயே...!
வாடிக்கையாளர்:- அதுவா! (வாடிக்கையாளர் அவருடைய முன் பக்கத்தையும் பின் பக்கத்தையும் காட்டி விடுகிறார்) இப்ப தருவீங்களா?

நோயாளி:- டாக்டர், காதில இரயில் ஓடுரமாதிரி சத்தம் கேட்குது
டாக்டர்:- காதில மருந்து விடுறன் (மருந்து விடுகிறார்)
நோயாளி:- இப்ப சத்தம் கேட்கவில்லை.
டாக்டர்:- எந்த ஸ்டேஷன்லையாவது நின்றிருக்கும்...விடுங்க.

மனைவி:- ஏங்க நிஜமாவே நீங்க இன்னிக்கு ஒவ்விசுக்குத் தான் போனீங்களா?
கணவன்:- என்னடி இப்படிக் கேக்கிறா?
மனைவி:- நல்லாத் தூங்கி ரெஸ்ட் எடுத்த ஆள் மாதிரி உங்களப்பார்த்தா தெரியலயே?

சங்கர்:- அவர் பயங்கரமான சந்தேக பேர்வழி!
குமார்:- எப்படிச் சொல்லறே?
சங்கர்:- டாட்டா காட்டிய பிறகு விரலை எண்ணிப்பார்ப்பார்ண்ணா பார்த்துக்கேயன்.

சாந்தி :- புடவைல தீப்பிடிச்சிகிட்ட உம் மாமியாரை காப்பாத்த நினைச்சதுக்கு உம்மேல கொலப்பழி விழுந்துச்சா? என்னடி சொல்லுறா?
சுமி : தீயை அணைக்க நான் அவங்கள கிணத்துக்குள்ள தள்ளினது தப்பா?

குடும்பப் பெண்: கலோ!..... இது போலீஸ் ஸ்டேஷனா..... இங்க டி.வி. யில தொடர் பாக்க விடாம ஒருத்தர் குறுக்கும் நெடுக்குமாக என் வீட்டுல நடந்து தொலைக்கிறான்.
போலீஸ்: யார்னு விசாரிச்சீங்களா!
குடும்பப் பெண்: யாரோ திருடனாம்.

எஸ். ஜேன்ஸ் பெனாண்டோ, , உப்புக்குளம், மன்னார்

ஆசிரியர்: வானொலியைக் கண்டு பிடித்தவர் யார்?
மாணவர்: திருடியவனுடைய பெயரைச் சொல்லுங்க சார். நான் கண்டு பிடிச்சு சொல்லுறேன் சார்.

சி. றிஜேந் றினுசன், ஆலங்குளம், வட்டக்கண்டல்.

ஒருவர் : இளவரசன் ஏன் போர்க்களத்துக்கு சீப்போடு போகிறார்.
மற்றவர் : போர்க்களத்தில் பத்துப்பேர் தலையாவது சீவிட்டு வரணுமுண்ணு மன்னர் உத்தரவிட்டிருக்கிறார்.

சி. எ. பிரியங்கா, ஆலங்குளம், வட்டக்கண்டல்.

தரகர்: பொண்ணுக்கு வாய் கொஞ்சம் நீளம்
மாப்பிள்ளை வீட்டார்: மாப்பிள்ளைக்கு கை நீளம். ஜோடி பொருத்தம் சும்மா நல்லா இருக்கு. ஆக வேண்டியதைப் பா[illegible]

[illegible]1: விவசாயப் பகுதிக்கு வந்த கடிதத்தைப் பார்த்து [illegible]ந்து போயிட்டீங்க?
[illegible]ளர்2: கஞ்சாப் பயிருக்கு ஊடு பயிரா பிரவுன் சுகர் [illegible]யிரிடலாமான்னு ஒருத்தர் கேட்டு இருக்காரு...!

கி. மஞ்சுலாவதி, மறைக்கல்வி நிலையம், மன்னார்

இப்பவும் அரைவாசியுடன்தான்

ஒரு தாய் பஸ்ஸில் ஆறு பிள்ளைகளுடன் பயணம்செய்து கொண்டிருந்தாள். அப்போது அதில் பிரயாணம் செய்த பயணிகளுக்கு இடைஞ்சலாக அந்தப் பிள்ளைகள் சத்தமிட்டு அழுதுகொண்டிருந்தார்கள். தாய் இறங்கும் இடம் வந்தவுடன் ஆறு பிள்ளைகளுடன் தாயும் இறங்கினாள்.

பஸ்ஸின் சாரதி : (அந்த தாயை நோக்கி) அம்மா இனி வரும்போது அரைவாசியுடன் வாங்க.

தாய் : இப்பவும் அரைவாசியுடன்தானே வந்திருக்கிறேன்.

சி. அனற் கீர்த்தனா, ஆலங்குளம், வட்டக்கண்டல்.

கவிதைப் பூக்கள்

மாதா ஆசிக்கும் செபமாலை

மரியன்னையுடனும் பரம தேவனுடனும்
மக்களைப் பிணைக்கும் அருந்தழை - அதுவே
மரியாயின் மாலையாகிய செபமாலை.
இப்பெயரை உச்சரித்தால் தேன் சொட்டும்
அன்பும் பக்தியும் ஆறாய்ப் பெருகும்.
அது பல மணிகளாகிய மாலையாகினும்
அதில் பொதிந்திருக்கும் ஆழந்தான் எத்தனை?
இந்த மதிக்கத்தக்க மணியாரத்தை
ஆர்வத்துடனும் பிரமாணிக்கத்துடனும்
நம்முடன் வைத்துச் செபித்திடுவோம்.
செபமாலை அபூர்வமான ஒரு ஆயுதம்!
நாம் எங்கு இருப்பினும் என்ன செய்தாலும்
செபமாலை தரித்த ஆயுதபாணிகளாவோம்.

செ. ரஞ்சி, பெரிய கோமரசன்குளம், வவுனியா.

மனிதம் மலருமா?

சின்னஞ்சிறு சிட்டுக்களாய்
சிங்கார நடைபயிலும்
சிறுவர்கள் நம் ஆசை நிறைவேற
மனிதம் மலருமா?
பாடித்திரியும் பள்ளிச் சிறார்கள் - நம்
உள்ளமதில் குடிகொண்டு இருக்கும்
உணர்வலைகள் வெற்றிபெற
மனிதம் மலருமா?
குடும்பம் என்ற கோர்வையில்
குலவிளக்காய் நின்று
பொறுப்புடனே பல பணிகள்
பொறுமையுடன் செய்யும்
பெற்றோரின் ஆசைகள் நிறைவேற
மனிதம் மலருமா?
படிகள் தட்டி விழுந்தாலும்
பலகை கொட்டி நகைத்தாலும்
முதுமை நரையை அடைந்தாலும்
முடியும்வரை திடமாக
விருப்புடனே செயலாற்றும்
முதியவர் பார்வையில்
மனிதம் மலருமா?

ம. தட்சாயினி, தரம் 10, திருக்குடும்ப கன்னியர் மடம், இறம்பைக்குளம், வவுனியா.

எனது உறவு

இரத்தத்தைப் பாலாக்கி ஊட்டி வளர்த்த அம்மா
நோயுற்றபோது என் பக்கத்திலிருக்கும் அம்மா
எனது துன்ப வேளை என்னை அன்புடன் பாதுகாக்கும் அம்மா
ஆ... அன்பான ஆண்டவரே! என் அம்மாவைக் காத்தருளும்.
வியர்வை சிந்தியே கஷ்டப்படும் அப்பா
வாழ்நாள் முழுவதையும் எனக்காக அர்ப்பணிக்கும் அப்பா
எனது நலனுக்காய் தம்மையே தியாகம் செய்யும் அப்பா
ஆ.... ஆண்டவரே என் அப்பாவைக் காத்தருளும்.
சுகம் பெற வேண்டும் எனது பெற்றோர்கள்
துன்பமெல்லாம் புல் நுனிப்பனிபோல் மறைய வேண்டும்
சுக செல்வமுடனே நீடுழி வாழ்ந்திடவே
ஆ.... ஆண்டவரே எனது பெற்றோரைக் காத்தருளும்.

நீ. பிறிஜிற் நிரோஜா, இசைமாலைத்தாழ்வு, கற்கிடந்தகுளம் பங்கு

தேவனின் பண்பு

வானிலிருந்து இறங்கி வரும் என் தேவன்
கையசைத்தால் பட்ட மரம் பூத்து விடும்
என் தூயவன் பார்வை பட்டால்
பாதையெல்லாம் பூத்து விடும்
என் தேவனின் பேச்சைக் கேட்டால்
மொட்டுக்களெல்லாம் பூத்துவிடும்
என் தேவன் நடந்து வந்தால்
கடல் பிளந்து வழி பிறக்கும்
என் இறைவன் சிரிப்பினிலே
பாலைவனம் சோலையாகும்.
என் தேவன் அரவணைப்பில்
மழலை உள்ளம் மகிழ்ந்திடும்
என் தேவன் அன்பிருந்தால்
கருணை மழை பொழிந்திடுமே
என் தூய தேவன் துணையிருக்க
இன்பம் வாழ்வில் என்றுமுண்டு.

அ.றோகினி, தரம் 11, பொன்தீவுகண்டல்

கல்வி கற்றிட வேண்டும்.

புகழ் எங்கும் பரவிட கல்வி ஏற்றமுற வேண்டும்
உருக்குலைந்து சிதறுண்டு சிறப்பிழந்து
உயில் வாழும் உழைப்பாளி மக்கள் தங்கள்
உரிமையினை கடமையினைப் பெற்றிடவே
கல்விதனைக் கற்றுத் தேறிடல் வேண்டும்.
உலகிலுள்ள மக்களெல்லாம் உயர்ந்திட வேண்டுமெனில்
வளமான கல்விதனை கற்றிடவே வேண்டும்
நலனெல்லாம் பெற்றுலகு நல்லின்பம் பெருகிடவே
நம்புகழ் பரப்பும் கல்வி கற்றிடுவோம்.

ஜே. நிலோஜினி, பொன்தீவு கண்டல்,அளவக்கைப்பங்கு

வழிபாட்டில் திரு இசை.... வழிபாட்டில் திரு இசை.... வழிபாட்டில் திரு இசை... வழிபாட்டில் திரு இசை...

வழிபாட்டில் திரு இசை

அருட் சகோ. அ. லக்ஸ்ரன் சில்வா, (தலைமன்னார்)
புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

பொதுவாக இசையாலே எல்லா மக்களுமே ஈர்க்கப்படுகின்றனர். ஏனென்றால் இசை செவிக்கு இன்பத்தைத் தரும் ஓர் அரிய கலை. உணர்வுகளைத் தூண்டுகின்ற, தேவைகளை வெளிப்படுத்துகின்ற, தொடர்பை உறவை வளர்க்கின்ற ஓர் ஊடகமாக இசை அமைந்துள்ளது. இசை உளப் பாதிப்புகளில் இருந்து மனிதனை மீட்கின்ற, அவனை வெளிக்கொணர்கின்ற ஓர் மொழி ஊடகமாக - சாதனமாக இருக்கின்றது. இதனால்தான் மனிதனுடைய பிறப்பிலிருந்து இறப்புவரை இசை அவன் வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்துவதோடு புரையோடியும் உள்ளது.

இசை ஒரு மொழியாக மனித உள்ளத்து உணர்வுகளை துல்லியமாக வெளிப்படுத்த முடியும். நமது கருத்துக்களை வார்த்தைகள் இல்லாமல் இசை மூலம் வெளிப்படுத்தலாம். அதாவது காலத்தின் தேவையை அறிந்து அதற்கு ஏற்ற இராகங்களை நாம் பயன்படுத்துகிறோம். அதனால்தான் ஆயக்கலைகள் அறுபத்திநான்குகளுக்குள்ளும் இசையும் இடம்பிடித்துள்ளது. இதனை உய்த்துணர்ந்தவராக புனித அகுஸ்தீனார் சொல்லுவார், "ஒருமுறை பாடுவது இருமுறை செபிப்பதற்குச் சமன்" என்று.

எனவே, இசையின் ஊடாக நாம் இறைவனோடு உறவை வளர்க்கலாம், சங்கமமாகலாம், ஐக்கியமாகலாம்.

மனிதன் இவ்வுலகில் எதிலுமே நிறைவான மகிழ்ச்சியை சந்தோசத்தை, முழுமையை, திருப்தியைக் காணாதவனாக இருக்கிறான். அந்த நிறைவை மனிதன் இறைவனில் காண முற்படுகின்றான். அதற்கு மனிதன் இசையை ஊடகமாக பயன்படுத்தி இறைவனை அடைகின்றான். ஏனென்றால் இசை மனித உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற சிறந்த சாதனமாகும். ஆகவே ஒட்டுமொத்தமாக பார்க்கின்றபோது, மனிதன் இசையைக் கற்று பயன்பெறுவதன் மூலம் ஆன்மீகத்தின் சுவையை அனுபவிக்கின்றான். இதே இசை அவனைச் சமூகத்தில் சிறப்புடையவனாக்கி வாழ்வில் ஒழுக்க கட்டுக்கோப்புடன் வாழப் பயிற்றுவிக்கின்றது.

சங்க ஏட்டின் பார்வையில் திரு இசை

வழிபாட்டில் இசை எதற்கு?

1. இறை மாட்சியை வெளிப்படுத்த.
2. மனித மீட்புக்காக.

இசை - தனித்தன்மை வாய்ந்தது. பிற கலைகளைவிடச் சிறந்தது. சொல்லோடு இயைந்த இசை இறைபணிக்கு ஆடம்பரமூட்டி அதன் முழுமைக்குத் துணை செய்கின்றது.

வழிபாட்டில் திரு இசையின் பங்களிப்பு

1. செபத்தை மிக இனிமையாக எடுத்தாளுகின்றது.
2. உள ஒன்றிப்பை வளர்க்கின்றது.
3. திருச்சடங்குகளுக்கு ஆடம்பரமூட்டி அர்த்தமுள்ள தாக்குகின்றது.
4. வழிபாட்டோடு எந்த அளவு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதோ அந்த அளவுக்கு, இசை புனிதமாகப் போற்றப்படுகின்றது.

திருச்சபையின் மரபு, ஒழுங்குமுறை, விதிகள், சட்டங்கள், விசுவாச உண்மைகளைப் பின்பற்றி, *கடவுளுக்கு மாட்சி மனிதருக்கு மீட்பு* என்பதைத் திருவழிபாட்டில் திரு இசையின் நோக்காகக் கொண்டு சங்கம் பின்வரும் கருத்துக்களை எமக்கு முன்வைக்கின்றது.



(1) திருவழிபாட்டு நிகழ்ச்சியைக் கொண்டாடுதல்

குருக்களோடு (திருப்பணியாளர்கள்) இறைமக்களும் இணைந்து வழிபாடுகளில் பங்காளிகளாக - பாடப்படுகின்ற பாடல்களில் அனைவரும் சேர்ந்து பாடி ஆடம்பரமாகக் கொண்டாடும்போது திருவழிபாடு ஒரு தனி மேன்மை பெறுகின்றது. (இல. 113)

(2) பாடகர் குழுக்களை ஊக்குவித்தல்

திரு இசையைப் பெருங்கவனத்துடன் காத்து வளர்க்க வேண்டியதன் அவசியத்தையும், பங்குகளில் முக்கியமாக மறைமாவட்டப் பேராலயங்களில் பாடகர் குழுக்களை ஊக்குவித்து வளர்க்க வேண்டியதன் தேவையையும் இல. 114 சுட்டிக்காட்டுகின்றது. திருவழிபாடு ஒழுங்கமைய நிறைவேற பாடகர் குழாம் தமது பொறுப்பை கடமையை நிறைவேற்ற வேண்டும்.

(3) இசைப் பயிற்சி அளித்தல்

ஆண், பெண் இருபாலாருக்கும் திருப்பணிப் பயிற்சி நிலையங்களிலும், துறவற மடங்களிலும், கத்தோலிக்க நிறுவனங்களிலும், பாடசாலைகளிலும் இசைக்கல்விக்கும், இசைப் பயிற்சிக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். திரு இசைக்கென உயர்நிலை நிறுவனங்கள் அமைப்பது வரவேற்கத்தக்கது. இசை அமைப்பாளர்களுக்கும் பாடகர்களுக்கும், சிறுவர்களுக்கும் உண்மையான திருவழிபாட்டுக் கல்வி ஊட்ட வேண்டும் என்ற கருத்தை இல. 115 முன்வைக்கின்றது.

(4) கிரகோரி இசையும் பல்லிசையும் ஏனைய வகைகளும்

உரோமை வழிபாட்டு முறைக்கு உரிய இசையாகத் திருச்சபை கிரகோரி இசையை ஏற்றுக்கொண்டுள்ளது. அதேவேளை எமது இசைக்கும் அதாவது கர்நாடக இசைக்கும் கிரகோரியன் இசைக்கும் மிக நெருக்கமான தொடர்பு உள்ளது. இல. 116 திரு இசையின் ஏனைய வகைகள் திருவழிபாட்டு நிகழ்ச்சியின் உள்ளுணர்வுக்கு இயைந்தவையாக இருக்குமானால் திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் பயன்படுத்தலாம் எனக் கூறுகிறது.

(5) சமயம் சார்ந்த மரபு வழிப்பாடல்களை ஊக்குவித்தல்

பக்தி முயற்சிகளிலும், திருவழிபாடுகளிலும் திருச்சடங்கு விதிகளின் ஒழுங்கு விதிமுறைகளுக்கு ஏற்ப நல்ல ஆயத்தங்களுடன் மக்களிடையே வழக்கத்திலுள்ள மரபு வழிப்பாடல்களை ஊக்கத்துடன் ஆதரிக்க வேண்டும்.(இல 118, 119)

பங்குகள் எதிர்நோக்கும் திரு இசை சார்ந்த சில சிக்கல்கள்

ஆலயங்களில் பாடகர் குழாமிடையே மனக்கட்டுப்பாடு இன்மை, இறைமாட்சியை முதன்மைப்படுத்தாத மனநிலை போன்றவை பங்குகள் எதிர்நோக்கும் திரு இசை சார்ந்த பொதுவான சிக்கல்கள் ஆகும். இவை வழிபாட்டின் புனிதத் தன்மையைப் பேணாது திருவழிபாட்டின் அருள்நிலையை குழப்புகின்ற செயல்களுக்கு அவர்களை இட்டுச்செல்லும். இதன் ஒரு பரிணாமமே சக ஆலயங்களுடன் போட்டியாக திரு இசையை பயன்படுத்துகின்ற நிலைப்பாடு ஆகும்.

தகுதியான, திறமையான, நல்ல குணநலன்களையுடைய பாடகர்களைத் தெரிவுசெய்வது அவசியமாகும். பாடகர் குழாமின் சிலரை முதன்மைப்படுத்தி பக்கம் சார்ந்து நிற்பது வரவேற்கத்தக்கதல்ல. தகுதியான ஒருவர் விருப்பத்தோடு வரும்பொழுது அவருக்கு இடம் அளிப்பது கிறிஸ்தவத்தின் நல்ல பண்பாகும். பாடகர் குழாம் தேர்வில் பங்குத்தந்தை முதன்மை வகிப்பார்.

திருவழிபாட்டின் காலத்திற்கும் நேரத்திற்கும் ஏற்ற வகையில் பாடல்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும். தற்போதைய மிக முக்கிய குறைபாடு பங்குகளில் பாடல் தேர்வில் கவனம் செலுத்தாமையும் பாடல் பயிற்சி எடுக்காமையுமாகும். குறிப்பாக திருப்பாடல்களைப் படிப்பதற்குப் பதிலாக வேறு பாடல்களை பாடுவது மற்றும் இசைக்கருவிகள் (பண் இசை, மிருதங்கம், வயலின், வீணை, புல்லாங்குழல்) மீட்டுவோர் பயிற்சியின்றி இருத்தல் என்பன தவிர்க்கப்பட வேண்டும். வழிபாட்டில் இசையானது மக்களை ஒன்றிப்பு நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டும். பயிற்சியற்றவர்கள் இசைக்கருவிகளை மீட்டும்போது வழிபாட்டில் இடையூறுகள் ஏற்பட வாய்ப்புண்டு. இசைக்கருவிகள் மீட்ட திறமையுடையவர்களுக்கு சந்தர்ப்பம் அளித்து, பங்குக் குடும்பமாக ஒன்றிணைந்து, சாதி பேதம் மறந்து கிறிஸ்துவில் ஒன்றிணைவது கிறிஸ்தவ விழுமிய வாழ்வாகும்.

மாறாக ஆலய மேடையில் எனது பிள்ளை ஒகன் வாசித்தால் போதும் என்ற மனநிலை பங்கில் பிரிவினைகளும் சண்டைகளும் உருவாக வழிவகுக்கும்.

எம்மத்தியில் ஒருவர் ஆலய விடயங்களில் ஈடுபாடு உடையவராக இருந்தால் அதற்காக அவரைப் பாராட்டி அவர் மேலும் முன்னேற வழி செய்ய வேண்டும். இதற்கு எதிர்மாறாக தேவையற்ற விமர்சனங்களையும் பழிச்சொற்களையும் கூறி அவரைப் பணி வாழ்வில் இருந்து விலகி இருக்கச் செய்கின்றோம். இப்படியான மனநிலைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

சுதேசக் கலைகளை வளர்த்தல்

ஒவ்வொரு இடத்திற்கும் ஏற்ற வகையில் அந்தந்தப் பண்பாட்டுக்கு உகந்த முறையில் - பாணியில் அரிய கலைகள் வளர்க்கப்பட்டிருப்பது நாம் அறிந்த உண்மை. விஷேடமாக நாட்டுக்கூத்து எமது இடங்களிலே அரிய பெரிய தொன்றுதொட்டு போற்றப்பட்டு வளர்க்கப்பட்டு வருகின்ற பழங்காலத்து பாரம்பரியக் கலையாகும். இதனை அழியவிடாது, வளர்த்து, அதனூடாகக் கிறிஸ்துவின் நற்செய்தியை நாம் கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு எடுத்துக்காட்டி எமது வாழ்விலும் பிரதிபலிக்கச் செய்ய வேண்டும்■

திருக்குடும்ப சபை முதல்வர் வருகையும்

பொது நிலை அங்கத்தவரின் மகிழ்வும்

அன்று பங்குனி 11ம் நாள்! எம் வாழ்வின் பொன் நாள். எமது சபைத் தலைமையக முதல்வர் குழு, மன்னார் திருக்குடும்ப சபைச் சகோதரரைத் தரிசிக்க வந்த நன்நாள். காலையிலேயே மன்னார் திருக்குடும்ப கன்னியர் இல்லம் அழகுறப் பொலிவுடன் மிளிர, இல்ல வாயிலில் திருக்குடும்பம் அனைவரையும் வரவேற்க, ஒன்பது அயல் குழுக்களிலுமுள்ள அருட்சகோதரிகளுடன் பொதுநிலை அங்கத்தவர்களாகிய நாமும் எம் ஸ்தாபகர் பியன்வெனுவின் குடும்ப உறுப்பினர் என்ற உரிமையுடன் ஒன்றிணைந்து நின்றோம்.

கன்னியரும் நாம் வெவ்வேறு இடங்களில் இருந்து வந்திருந்தாலும் வேற்றுமையின்றி, எம்மை அன்புறவோடு தம்முடன் ஏற்றுக்கொண்டனர். குறுகிய சந்திப்பு! அரை மணி நேரம் மட்டுமே!

மன்னார்த் தீவு, பெருநிலப்பரப்பு ஆகிய இடங்களில் இருந்து வந்த 8 குழுவிலிருந்து 88 பேர் வரிசையில் நின்றோம். கன்னியரின் அடையாளச் சங்கிலியுடன் சிவந்த மேனியுடன் முவர் "வணக்கம்" எனக் கூறியவாறு புன்முறுவலுடன் வருகை தந்தனர். நாமும் எம் தமிழர் பண்பாட்டுப்படி வரவேற்று "நன்றியால் துதி பாடு" என்ற கீதத்தோடு வரவேற்பறைக்கு அவர்களை அழைத்துச் சென்றோம்.

மன்னார்க் குழுவினரின் வரவேற்புரையைத் தொடர்ந்து ஏனைய குழுவினரும் தம் வாழ்வு, வளர்ச்சி, பணி பற்றிய அறிக்கைகளைச் சமர்ப்பித்தனர். அவ்வேளையில் அவர்களின் உன்னிப்பான செவி மடுத்தலின் உணர்வினைக் கண்டுணர

முடிந்தது. பின்னர் தேசியத் தலைவி சகோதரி அலிஸ் நன்றியுரை கூறி, ஆசியுரை வழங்குமாறு தலைவியரை வேண்டிக்கொண்டார். அவர்களும் உடனே "என் அன்புச் சகோதரங்களே [illegible]னை எழுந்து, "நான் இன்று இடங்களையல்ல, உங்கள் [illegible]ன் அன்புள்ளங்களை நேரில் காண்பதில் பெ[illegible] அடைகிறேன். நீண்ட உங்கள் இடப்பெயர்வின் பின்ன[illegible] சபையிற் கொண்டிருக்கும் பற்றுறுதி உங்கள் [illegible] குழுக்களில் சூழலில், தலத் திருச்சபையில் ஆற்றிவரும் [illegible] மனப்பான்மையைப் பாராட்டுகின்றேன். எம் தந்தை பீற்றர் பியன்வெனுவின் கனவை நனவாக்க, குடும்ப உணர்வோடும், இறைவன் மாத்திரமே என்ற ஆன்மீகத்தோடும் இறையரசைக் கட்டி எழுப்ப உழைக்கும் உங்களது உயர்ந்த குறிக்கோளை மெச்சி இறைவனுக்கு நன்றி கூறுகிறேன். இவ் ஆர்வம் தொடர்ந்து செயற்பட இறைவனின் ஆசியையும் அருளையும் வேண்டுகிறேன். எனவே முன்னேறிச் செல்லுங்கள்" என்று உரையாற்றி அமர்ந்தார்கள்.

சபை முதல்வரின் தரிசிப்பும், பிரசன்னமும் அவரது ஓரிரு வார்த்தைகளும் எம்மை அன்புறவில் வாழ, இறை அன்பில் வளர, மனிதத்தை மதிக்க, பண்போடு பழக, மகிழ்வுடன் பகிர்ந்து சாட்சியம் பகிர எம்மைத் தூண்டின. அனைத்திற்கும் மேலாக அவரின் இனிய பேச்சு, திறந்த மனம், செவிமடுக்கும் தன்மை எம் இனமொழி கலாச்சாரத்தையே தாண்டிச் செல்ல நேரமும் பறந்து சென்றது.

இத்தகைய நற்பண்புகளை எம்மில் விதைத்து, இத்தரிசிப்பினை நேரில் கண்டு அனுபவித்து எம் அர்ப்பண வாழ்வினை ஆழப்படுத்த வழி வகுத்த இறைவனுக்கு முதற்கண் நன்றி கூறுகின்றோம். அடுத்து எம்மைத் திருக்குடும்ப பொதுநிலை அங்கத்துவ குழுவில் இணைத்து அந்த உறவினைச் சுவைக்க வழி சமைத்த அனைத்து உள்ளங்களுக்கும் எம் நன்றியோடு [illegible]ய அன்பையும், வணக்கத்தையும் எம் குழுவினர் சார்பில் [illegible]ரிவித்து நிற்கின்றேன். இறைவா போற்றி!

திருமதி. ஜோதினி அன்ரன்,
திருக்குடும்ப பொது நிலை அங்கத்தினர், மன்னார்

கலை இல[illegible]ச் சாளரம்

கவிதைக் களம்

வண்ண வண்ண சொல்லெடுத்து

வண்ண வண்ண சொல்லெடுத்து
வரைந்தேன் ஒரு கவிதையாய்
வாசமுள்ள மலரைக் கொண்டு
வரைந்தேன் ஒரு கவிதையாய்
ஏழை எந்தன் எண்ணத்தினை
வரைந்தேன் ஒரு கவிதையாய்
எங்களுக்கும் வாழ்வு வரும் என்று
வரைந்தேன் ஒரு கவிதையாய்.

அ. சிறோமி குரூஸ், ஆண்டு 10 ஏ,
4ம் வட்டாரம், பேசாலை.

நட்பு

மானிடா உன் நட்பின் பொருள் என்ன?
மானிடா உன் நட்பின் விலை என்ன?
நட்பின் பெயரில் ஏமாற்றா?
உன் உள்ளத்தில் ஒன்று உதட்டில் ஒன்றா
இதுதான் உண்மை நட்பின் இலக்கணமா?
உன்னைப் படைத்த யேசு உத்தம நண்பன்
உன் பாவங்களுக்காக அடிபட்டவர்
அவஸ்தைப்பட்டு சிலுவை சுமந்தவர்.
நட்பின் பெருமைக்கு இலக்கணமானவர்
கேள் நண்பா கேள்! நம் யேசுவின் நட்பை
"நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதைவிட
மேலான அன்பு யாரிடமும் இல்லை"
எத்தனை நண்பர் இப்படி உண்டு?
யேசுவின் நட்பு உன்னதமானது
உயிர் உள்ள பொக்கிஷம் அது.
நட்பின் நண்பன் நம்பிக்கையின் நண்பன்
மானிடா யேசுவின் வார்த்தைகளை
உன் உள்ளத்தில் விதையாக விதை.
நீயும் உண்மை நண்பனாவாய்
நட்பின் உட்பொருளை
நன்றாக உணர்வாய்.

கே. எம். உண்மை நண்பன்,
யோசவ்வாஸ் நகர், தோட்டவெளி.

ஆதங்கம்

உருவத்தில் சிறியவர்கள் இவர்கள், ஆனால்
உள்ளத்தால் என்றும் உயர்ந்து நிற்பர்!
பருவமது பாங்காக மாற மாற
பண்பான பலசெயல்கள் செ(ய்)யத் துடிப்பார்.

பெருமனசு கொண்டு இந்தப் பிஞ்சு நெஞ்சப்
பூங்காவில் நுழைவதற்கு யார் துணிவர்?
கருவிழிகள் மலர்ந்து செயல் புரிவதற்கு
கண்ணியமாய் வழிகாட்ட எவர் வருவார்?

தூது சென்று நீதியதை இடித்துச் சொல்ல
கிருஸ்ணபர மாத்மாக்கள் பிறக்க வேண்டும்.
நாதியின்றிப் பரிதபிக்கும் பாலகர்க்கு
நகை முகங்கள் காட்டுபவர் பெருக வேண்டும்

எவராலும் செயற்கரிய அரும்பணியாம்
ஆசிரியப்பணிக் கடலில் அமிழ்ந்து நிற்போர்
புவிபோற்றும் அரும்பணிகள் செய்வதெப்போ?
பூஞ்சோலை என இவரை நினைப்பதெப்போ?

ஆழத்தே புதைந்துள்ள நல்ல முத்தை
நலமாக முன்னெடுத்துச் செல்வதெப்போ?
உள்ளத்தே உண்மை ஒளி நாளும் பெற்று
உவகையுடன் தம் பணியைப் புரிவதெப்போ?

புரிந்துணர்வு நாட்டினிலே மலர்ந்த போதும்,
புரியாத உணர்வுநிலை மறைவதெப்போ?
பரிந்திவரில் அன்புதனைப் பொழிந்து பாசப்
பிணைப்புடனே பணிகளைச் செய்வதெப்போ?

சீர்திருத்தம் என உரைத்து ஆர்ப்பரிப்போர்
சீராகத் தம் பணியில் திளைப்பதெப்போ?
பார் புகழும் முழுமனிதம் நிறைந்தோராக,
பாரினிலே பாலரை யாம் காண்பதெப்போ?

மன்னார் அமுது.

தொடர் கட்டுரை - அங்கம் 17

கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்

- அருள்பணியாளர் விக்ரர் பிலேந்திரன் -

பகுதி 1 வியாகுல பிரசங்கம் - பன்முகப்பார்வையில்

வியாகுல பிரசங்க ஆசிரியர் பயன்படுத்திய வேதாகமப் பகுதிகள்

'தந்தையே' (இச்சொற்பதம் ஒத்தமை நற்செய்திகள் எல்லாவற்றிலும் காணப்படுகின்றது. மத் 26/39, மாற் 14/35, லூாக் 32.'.42) 'என் தந்தையே' (இச்சொற்பதம் மத்தேயு நற்செய்தியில் மட்டும் இடம்பெறுகின்றது. மத் 26/39) 'அப்பா பிதாவே' (என்னும் சொற்பதம் மாற்கு நற்செய்தியில் மட்டும் இடம்பெறுகின்றது. மாற் 14.'.26) 'துன்பக்கலம்' (என்பது ஒத்தமை நற்செய்திகளில் இடம்பெறுகின்றது. மத் 26/36, மாற் 14/35, லூாக் 22/42) 'இரண்டாம் முறை முழந்தாட்படியிட்டு' (என்னும் சொற்பதங்கள் எந்த நற்செய்தியிலும் குறிப்பிடப்படவில்லை. இரண்டாம் முறை சென்று செபித்தார் என்பது மட்டும் மத்தேயு, மாற் நற்செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. மத் 26/42, மாற் 14/39)

'அவர்கள் தூக்கமாக இருப்பதைக் கண்டு இராயப்பரிடம் கூறினார். (மத்.26/40, மாற் 14/37) 'ஒருமணிநேரம் விழித்திருந்து செபிக்க உங்களால் முடியவில்லையா?' (மாற் 14/37, இங்கு கிறிஸ்துவின் தொனியில் சற்றுக் கண்டிப்புக் காணப்படுகின்றது) 'சோதனைக்கு உட்படாதபடி விழித்திருந்து செபியுங்கள்' (ஒத்தமை நற்செய்தியில் காணப்படுகின்றது. மத் 26/41, மாற் 14/38, லூாக் 22/46) 'என் தந்தையே நான் குடித்தாலொழிய இத்துன்பக்கலம் அகல முடியாது எனின் உமது விருப்பப்படியே ஆகட்டும்' (மத் 26/42) 'இரண்டாம் முறையாக கிறிஸ்து தம் சீடர்களிடம் வந்தபோது அவர்கள் தூங்குவதைக் கண்டார். ஏனெனில் அவர்கள் கண்கள் தூக்க மயக்கமுற்றிருந்தன. அவர்களை விட்டு மீண்டும் சென்றார்' (இங்கு மத்தேயு நற்செய்தி மிக நெருக்கமாகப் பின்பற்றப்படுகின்றது. : மத் 26/43-44)

'அப்பொழுது வானதூதர் ஒருவர் அவருக்குத் தோன்றி அவரைத் திடப்படுத்தினார்.' (லூாக் 22/43, இங்கு கொன்சால்வெஸ் அடிகள் தமது இறையியல் கருத்தை வலியுறுத்த இச்சொற்பதங்களைப் பயன்படுத்தாமல் விட்டுவிடுகின்றார். (அதாவது, கிறிஸ்து ஏனையோருடைய பாவங்களுக்காகத் தாம் துன்பங்களை ஏற்றுப் பரிகாரம் செய்யவேண்டும் என்பது) ஆயினும் புதிய ஏற்பாட்டு ஆவணங்களில் இச்சொற்பதங்கள் இடம் பெறவில்லை)

கொடிய வேதனைக்குள்ளாகவே மேலும் உருக்கமாகச் செபித்தார். அவருடைய வியர்வை பெரும் இரத்தத் துளிகளாக நிலத்தில் விழுந்தது. (லூாக் 22/44: இச் சொற்பதங்களைப் பயன்படுத்தி தமது இறையியல் இலக்கை அடைய முனைந்துள்ளார். ஆயினும் அவருடைய வியர்வை பெரும் இரத்தத் துளிகளாக நிலத்தில் விழுந்தது. என்னும் பகுதி காலத்தால் முற்பட்ட மூலச்சுவடிகளில் இடம்பெறவில்லை. இப்பகுதியை விபரித்த பின்பு வியாகுல பிரசங்க இலக்கிய ஆசிரியர், கபிரியேல் தூதர் தோன்றி துன்ப வேதனைப்பட்ட கிறிஸ்துவிற்கு ஆறுதல் அளித்ததாகக் கூறுகின்றார்) அப்போது வானதூதர் ஒருவர் அவரு[illegible]ன்றி அவரைத் திடப்படுத்தினார். (லூாக் 22/43: இப்பகுதியும் சில முக்கிய மூல[illegible]ம்பெறவில்லை. ஆயினும் வியாகுல பிரசங்க ஆசிரியர் லூக்கா நற்செய்தி[illegible] நிகழ்வுகளின் ஒழுங்க முறையை மாற்றி அமைத்துள்ளார். லூக்கா [illegible] வானதூதர் இரத்த வியர்வை சிந்த முன்பு தோன்றி கிறிஸ்துவிற்கு ஆறுதல்[illegible]யாகுல பிரசங்கத்தில் வானதூதர், கிறிஸ்து இரத்த வியர்வை சிந்திய பின்பு[illegible]நீண்ட உரையாடல் நடத்தி, நிலத்திலிருந்து அவரைத் தூக்கி முகத்தைத் துடைத்[illegible] சிலுவையைக் காண்பிக்கின்றார்.)

(தொடரும்)

மன்னா சிறுகதை

சிலுவை ஆரங்கள்

இராயப்பு இக்னேசியஸ்,
இலுப்பைக்குளம் பங்கு.

இயற்கை எழில் கொஞ்சி விளையாடும் பூஞ்சோலைக் கிராமத்தில் பிறந்தவர்கள்தான் ஜெரோம், ஜெனிபர் ஆகிய இருவரும். இரத்த பந்த உறவிருந்ததால் இருவரும் அன்பாகப் பழகினார்கள். ஆடினார்கள், ஓடினார்கள், பாடினார்கள். கால ஓட்டத்தின் சுழற்சியால் ஜெனிபர் வளர்ந்து பருவப் பெண் ஆனாள். ஜெரோம் வளர்ந்து வாலிபனானான். இதனால் இருவரும் தங்கள் விளையாட்டுக்களையும் கேளிக்கைகளையும் நிறுத்திக்கொண்டனர். ஒரு நாள் ஜெரோம் ஜெனிபரைப் பாடசாலை செல்லும் வழியில் மறித்து, "ஏன் ஜெனி! இப்ப நீ என்னோட கதைக்கிறதே இல்ல..... என்னால இதைத் தாங்க ஏலாது... ப்பிளீஸ்....... என்னோட கதை ஜெனி" என்று கெஞ்சினான். "இல்ல ஜெரோம் நாம ரெண்டு பேரும் முந்தி சின்னப்பிள்ளைகள். ஓடி ஆடி விளையாடினம். ஆனா இப்ப இயற்கை நமக்கு நடுவில வாலிபம் எண்ட தடைச் சுவர எழுப்பிவிட்டிருக்கு. அதனால என்ன.... நீ என்னச் சந்திக்கிற நேரம் நம்மட சுகங்களைப்பற்றிப் பேசிக் கொள்ளலாமே" என்றாள் ஜெனிபர். "என்ன முட்டாள்த்தனமாக் கதைக்கிறாய்... நான் என்ர உயிரைவிட உன்ன மேலாக நேசிக்கிறது உனக்குப் தெரியவில்லையா ஜெனி?" என்றான் ஜெரோம்.

"இல்ல ஜெரோம் என்ர மனதில அப்படியான ஆசைகளும், அபிப்பிராயங்களும் இல்ல. நான் உன்ன என்ர சகோதரனாத்தான் நினைச்சன். அன்பு செய்தன், பழகினன், மூண்டு சகோதரிகளுடன் கூடப்பிறந்த எனக்கு நீ ஒரு சகோதரனாக இருக்கவே நான் விரும்புறன். சிலுவையில எங்களுக்காக மரித்த இயேசுவுக்காக என்ர வாழ்வை அர்ப்பணிப்பதாக முடிவெடுதிற்றன் நான் சிஸ்ரராகப் போகப் போறன். தயவு செய்து இன்றோடு உன்ர எண்ணத்த மாற்றிக்கொள்" என்றாள் ஜெனிபர்.

ஜெரோமால் இவ்வார்த்தைகளை ஜீரணிக்க முடியவில்லை. "இவளுக்கு என்ன பயித்தியமா பிடிச்சிற்று. இப்படி அழகான பெண்.. காலம் முழுக்க இப்படியே இருந்துவிடுவாளா?" என்று பலமுறை தன் மனதிலேயே பல கேள்விகளைக் கேட்டான்.

கால ஓட்டத்தின் சுழற்சியால் ஜெனிபர் வளர்ந்து உயர்தரக் கல்வியை முடித்திருந்தாள். ஜெரோம் படிப்பையும் அரைவாசியில் நிறுத்திவிட்டு தன் தந்தையுடன் விவசாயத்தில் ஈடுபட்டான். பரீட்சை முடிவுகள் வெளியாகிவிட்டன. ஜெனிபர் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்லக்கூடிய அனுமதியும் கிடைத்தது. ஜெனிபர் அன்று இரவு அம்மாவிடம், "அம்மா நான் ஒரு சிஸ்ரராக வரவேணுமெண்டு எனக்கு ஆசையா இருக்கு.. ப்ளீஸ் அம்மா... என்னப் புரிஞ்சிகொள்ளுங்க" என்று தாயின் கரங்களைப் பற்றிக் கெஞ்சினாள்.

ஜெனிபரின் தாய் அமலியால் இந்த வார்த்தைகளை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. விக்கி, விக்கி அழுதாள். "ஏனம்மா அழுறீங்க.. நான் பிழையாக ஒன்றும் சொல்ல இல்லைத்தானே" என்றாள் ஜெனிபர். "இல்ல மகளே உங்கட அப்பாவை இழந்து இந்தப் பத்து வருசங்களும் நான் படாத கஸ்ரமெல்லாம் பட்டு உங்க நாலுபேரையும் வளத்தன். நீ எனக்கு ஒரு ஆண் பிள்ளயப்போல இருந்து என்ர இயலாமையில எனக்கு உதவி செய்வாயென்று நினைச்சன். உன்ன உயர்தரம் வர படிக்க வைச்சன். ஆனா இண்டைக்கு நீ வேறுவிதமா முடிவெடுத்திருக்கிறாய் 'இச் சின்னஞ்சிறிய சகோதரர் ஒருவருக்குச் செய்த போதெல்லாம் எனக்கே செய்தீர்கள்' என்று ஆண்டவர் கூறியுள்ளாரே மகளே. உன்ர தாயிட துன்பத்தில - உன்ர சகோதரிகள வளர்க்கும் பொறுப்பில நீ பங்கெடுக்காம விலகிச் செல்ல விரும்பினா போ மகளே. இறைவன்ர சித்தம் அதுவானா நாம என்ன செய்ய முடியும்" என்று தேம்பி அழுதாள் தாய்.

'உயிர்தரும் உணவு நானே. என்னிடம் வருபவருக்குப் பசியிராது. என்னில் நம்பிக்கை கொள்வோருக்குத் தாகமிராது' என்று கூறிய ஆண்டவர் என்ர குடும்பத்துக்கும் போஷனமளிப்பார். நம்பிக்கை தருவார் என்று நம்பினாள் ஜெனிபர். "அம்மா ராவைக்கு நல்லா யோசியிங்க" என்று கூறிவிட்டுப் படுக்கச் சென்றாள்.

நித்திரை வராது புரண்டபோது தன்னருகே படுத்துறங்கும் தன் மூன்று சகோதரிகளையும், ஆவலுடன் பார்க்கின்றாள். "மூத்த தங்கை ஏஞ்சல், O/L படித்துக்கொண்டிருக்கின்றாள். இளைய தங்கை லாரா தரம் 9, கடைசித்தங்கை ஜெட்றூட் தரம் 6 படித்துக்கொண்டிருக்கிறாள். அம்மாவுக்கும் வயசு போய்விட்டது. நான் இந்த முடிவெடுத்தா இவங்க எல்லாற்ற வளமான எதிர்காலம் எப்படி அமையும். இதற்காக நான் என்ன செய்யணும்? இயேசுவே என் மீட்பரே எனக்கு ஒரு நல்ல வழியைக்காட்டும்" என்று உருக்கமாகச் செபிக்கின்றாள். பின்பு உறங்கி விட்டாள்.

காலதேவன் வரைந்த விதியாலும், தன்னால் இனியும் த்னிமையில் குடும்பப் பொறுப்பைச் சுமக்க முடியாதென்ற மனச் சோர்வினாலும் அன்று அதிகாலையில் அவள் அன்பிற்கினிய அன்னை கண்விழித்து எழுந்திருக்கவேயில்லை. சுற்றங்கள் சூழ, சொந்தங்கள் ஒன்று சேர ஜெனிபரின் தாயாரின் இறுதி யாத்திரை முடிவடைந்தது. சொந்தங்கள் எல்லாம் மூன்றே நாளில் விலகிச் சென்றன.

ஜெரோம் மீண்டும் ஜெனிபரிடம் வந்து "ஜெனி இனியும் உன்னால உன்ர இலட்சியத்த நிறைவேற்ற முடியாது. ஓம் எண்டு ஒரு வார்த்தை சொல்லு. உன்ர குடும்பத்தைத் தாங்கும் தூணாக உன்ர வலது கரமாக இருப்பன்" என்று அவள் அன்பிற்காக யாசிக்கின்றான். "இல்ல ஜெரோம், இப்ப இப்படிச் சொல்ற நீ பிறகு உனக்கெண்டு குடும்பம் பொறுப்பெண்டு வரும்போது சிலநேரம் நீ மாறலாம். என்ர சுயநலத்திற்காக என்ர சகோதரிகள்ற எதிர்காலம் வீணாகியிரக்கூடாது. உன்ர முடிவ மாற்றி, உனக்கெண்டு ஒரு நல்ல வாழ்வைத் தேடிக்கொள்" என்றாள்.

தாய்ப் பறவையை இழந்த குஞ்சுகள் ஒண்டுவதற்கு இடந்தேடி மூத்த பறவையின் இறகுகளின் நிழலில் இளைப்பாறின. ஜெனிபர் சிந்திக்கின்றாள். "இறைவா இதுதான் உன்ர அழைப்பா? இதுதான் என் பணியா? நீ போட்ட கோடு இதுதானா?" இறை ஞானத்தின் சில துளிகள் அவள் காதில் எதிரொலிக்கின்றது. சகோதரிகளின் வாடிய முகங்கள். "எங்களை வாழவைக்க முடியுமா?" என்று கேட்பதுபோல் இருக்கின்றது. "இதுவும் இறைவனின் அழைப்புத்தான். இவர்கள் மூவரின் வாழ்வும் சிறக்க நான் எல்லாவற்றையும் தாங்கிக் கொள்வேன்." என்று மனதில் உறுதி எடுக்கின்றாள். அவளுடைய காதோரங்கள் உப்பு நீரால் நனைகின்றன. "நான் என்ர கரங்கள இயேசுவிட கரங்களோடு இணைத்து நான் நடக்க வேண்டிய பாதையில அவரோடு கூடவே நடப்பன்" என்று ஆணித்தரமாக முடிவெடுக்கின்றாள்.

ஜெனிபரின் அன்னை இறந்து மூன்று மாதங்கள் சென்றன. ஒருநாள் பங்குக் குருவானவரிடம் சென்று ஜெனிபர் தங்கள் நிலமைகளைக் கூறுகின்றாள். அவரின் உதவியுடனும், ஆசீர்வாதத்துடனும் ஒரு தனியார் நிறுவனத்தில் தட்டச்சு வேலையில் சேர்ந்தாள். தன் தாயைவிட மேலான அன்புடன் அக்கறையுடன், தன் தங்கைகளைக் கவனித்து வந்தாள். பணத் தேவை ஏற்பட்டபோது தனக்காகத் தாயார் சேமித்துவைத்த பணத்தை எடுத்துச் செலவு செய்தாள்.

காலம் விரைவாக ஓடிச் சென்றது. தங்கைமாரும் படித்துப் பட்டங்கள் பெற்று பெரிய தங்கை ஏஞ்சல் ரீச்சராகவும், இளைய தங்கை லாரா விரிவுரையாளராகவும், கடைக்குட்டி ஜெட்றூட் டொக்ரராகவும் ஆனார்கள். அவர்கள் மூவரின் படிப்பிற்கும் ஏற்றதுபோல் அவர்களுக்கு வாழ்க்கையும் அமைத்துக் கொடுத்தாள் ஜெனிபர். (தொடர்ச்சி 12ம் பக்கம்)

இறைவனின் திருவுளச் சபை 45 வருட நிறைவைக் காண்கிறது!



திருவுளச் சபையின் ஆன்மீகம்

பயிற்சிகள்	மனநிலைகள்	செயல்கள்
இறைவார்த்தை	இறைபிரசன்னம்	அன்புச் செயல் - 1
தியானம்	குறைகூறாமை	அன்புச் செயல் - 2
நற்கருணை - பலிவிருந்து	முறையிடாமை	அன்புச் செயல் - 3
நற்கருணை - சந்திப்பு	பிறருக்கு உதவும் மனம்	அன்புச் செயல் - 4
திருச்செபமாலை	சமாதானச் சாயல்	அன்புச் செயல் - 5

வாழ்த்துகிறேன் இறையாசீர் வேண்டுகிறேன்

மன்னார் ஆயர்

திருவுளச் சபையின் இலங்கை உறுப்பினர்கள் தமது சபையின் 45 வது ஆண்டு நிறைவு விழாவை இவ்வருடம் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். "உமது சித்தப்படியே ஆகட்டும்" என்ற மங்கள வார்தையின்போது தேவதாய்க்கு இருந்த மனநிலையைத் தமது அன்றாட வாழ்வில் பெற்று இயேசு கிறீஸ்துவில் சகோதரத்துவத்தையும் சமாதானத்தையும் கட்டியெழுப்பி "அமல மரி வழி இறைசித்தம்" என்ற விருதுவாக்கோடு இச்சபையினர் வாழ்கின்றனர். இன்றைய உலகின் சவால்களின் மத்தியில் கிறிஸ்து யேசுவின் சாட்சிகளாக வாழ குருக்கள், மணத்துறவு ஏற்ற ஆண்கள், திருமணத்தம்பதிகளை உறுப்பினர்களாகக்கொண்டு எமது பங்குத் தளங்களில் இச் சபை இயங்கி வருவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றும் உயிருடன் வாழ்கின்ற அமல மரித்தியாகிகளின் சபையைச் சேர்ந்த இச்சபையின் ஸ்தாபகர் அருட்தந்தை லூயி மரி பரான் அடிகள் தனது இடைவிடாத செபங்களாலும், தியாக மனப்பான்மையாலும் உருவாக்கிய திருவுளச்சபை உலகின் மத்தியில் உப்பாக, ஒளியாக, புளிக்காரமாக விளங்கி கிறிஸ்து யேசுவின் நற்செய்திக்குச் சான்று பகர்ந்து அதன் பணியைப் பாரெங்கும் பரப்பிட எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் இறை ஆசீரையும் வேண்டி நிற்கின்றேன்.

அன்புடன் இராயப்பு யோசப், மன்னார் ஆயர்.

இலங்கையில் திருவுளச்சபை

அருட்பணியாளர் எஸ். அன்ரன் மரியதாஸ் (IVD)

கென் முல்ல, கொச்சிக்கடை, நீர்கொழும்பு.

இறைவனின் திருவுளச்சபை ஓர் கத்தோலிக்க உலகுசார் சபை ஆகும். திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் அவரவர் அழைத்தலுக்கேற்ப குருக்கள், மணத்துறவு ஏற்ற ஆண்கள், திருமணத்தம்பதிகள் என அழைக்கப்படுகின்றார்கள். இவர்கள் சிறிய கத்தோலிக்க குழுக்களாக உலகின் பல்வேறு சவால்களின் மத்தியில் வாழ்ந்து புனித நிலையை அடைவதற்கு தமக்குக் கொடுக்கப்படும் பல்வேறு ஆன்மீகப் பயிற்சிகளினூடாக உலகின் மத்தியில் உப்பாக, ஒளியாக, புளிக்காரமாக வாழ்ந்து கிறீஸ்து யேசுவில் சகோதரத்துவத்தையும், சமாதானத்தையும் தாம் வாழும் சூழல்களில் பரப்பி கத்தோலிக்க திருச்சபைக்குச் சான்று பகர்கின்றார்கள்.

கத்தோலிக்க உலகுசார் சபைகளை பரிசுத்த பாப்பரசர் 12ம் பத்திநாதர் 1947ம் ஆண்டு முழுக்கத்தோலிக்க திருச்சபைக்குமுரிய ஆன்மீக வழிகாட்டும் சபைகளில் ஒன்றாக ஏற்றுக்கொண்டார். *அமல மரி வழி இறை சித்தம்* என்ற விருதுவாக்கைக் கொண்ட இறைவனின் திருவுளச் சபையானது 1958ம் ஆண்டு அமல மரித்தியாகிகள் சபையைச் சார்ந்த - இன்னும் உயிருடன் வாழ்கின்ற கனடா நாட்டின் குபேக் மாகாணத்தில் வாழ்ந்த வண பிதா லூயி மரி பரான் அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்டு, 1965ம் ஆண்டு மறைவட்ட அந்தஸ்தையும், தற்போதைய பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் அவர்களால் 1988ம் ஆண்டு பாப்பரசரின் அங்கீகாரத்தையும் பெற்று உலகில் 16 நாடுகளில் பரவியிருக்கின்றது.

மங்கள வார்த்தையின்போது மரியன்னைக்கு இருந்த மன நிலையை தமது அழைத்தலுக்கேற்ப ஏற்று, வானகத் தகப்பனின் திருவுளத்தை நிறைவேற்றும் யேசுக்கிறீஸ்துவின் கருவிகளாய் வாழ்ந்து திருச்சபைக்கு உலகின் மத்தியிலே சாட்சிகளாகச் சான்று பகர அதன் அங்கத்தவர்களைச் சபை கேட்டு நிற்கின்றது. ஐந்து ஆன்மீகப் பயிற்சிகள், ஐந்து ஆன்மீகப் போக்குகள், ஐந்து ஆன்மீகச் செயற்பாடுகள் என்ற மூன்று ஐந்து (5 - 5 - 5) ஆன்மீகத்தை உலகின் சவால்களின் மத்தியில் வாழக்கூடியதாக சபை நிறுவுனர் அமைத்துக் கொடுத்துள்ளார். சபையின் உறுப்பினர்கள், ஆயத்த நிலை, ஆரம்பநிலை, ஆக்க நிலை, அர்ப்பண நிலை, நிரந்தர நிலை ஆகிய ஐந்து பயிற்சிப்படிகளைப் பின்பற்றி புனித நிலையை அடைகின்றனர். இந்தப் பயிற்சிப்படிகளில் இவர்கள் முழுமை அடைய சபையின் குழுவாழ்க்கை இவர்களின் பயிற்சிப் பாடசாலையாக அமைகின்றது. அன்புடன் ஒருவர் ஒருவரைப் புரிந்துகொள்ளவும், ஒருவர் ஒருவருக்கு உற்சாகமூட்டவும், சகோதரத்துவத்தையும், சமாதானத்தையும் வளர்க்கவும் குழுவாழ்வு உதவிபுரிகின்றது.

சபையின் ஸ்தாபகர் பரான் அடிகளார் இலங்கையை நான்கு தடவைகள் தரிசித்தார். முன்னைநாள் யாழ் ஆயர் மேதகு எமிலியானுஸ்பிள்ளையுடன் நெருங்கிய தொடர்பும் நட்பும் கொண்டிருந்த அவர் 1963ம் ஆண்டு யாழ் புனித மாட்டினார் குருமடத்தில் பயிற்சி பெற்ற சில மாணவர்களையும், மணத்துறவு ஏற்ற ஆண்கள் இருவரையும், தன்னுடன் கனடா தேசம் எடுத்துச் சென்று பயிற்றுவித்தார். 1967ம் ஆண்டிலிருந்து இலங்கை திரும்பிய திருவுளப் பணியாளர்கள் யாழ் மறைவட்டப் பங்குத்தளங்களில் இலைமறை காய்களாகப் பணிபுரிந்தார்கள். 1976ம் ஆண்டு முன்னை நாள் யாழ் ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் இச்சபையின் மத்திய பயிற்சி இல்லம், யாழ் முகமாலை என்னும் இடத்தில் (தற்போது இலங்கை இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுச் சேதமாக்கப்பட்டுள்ளது) ஆரம்பிக்கப்பட்டது. பரான் அடிகளாரின் தாராள மனத்தாலும், இடைவிடாத செபங்களாலும் அடித்தளமிடப்பட்ட இவ் இல்லம் பரான் இல்லம் என அழைக்கப்பட்டது. காலப்போக்கிலே மன்னார், கொழும்பு, கண்டி, நீர்கொழும்பு ஆகிய இடங்களிலும் இச்சபை தனது அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது.

இச்சபையின் தனி வரம்

எங்கெங்கெல்லாம் கிறீஸ்துவுக்கு உரிமையுண்டோ, அங்கெல்லாம் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றும் கிறீஸ்துவின் கருவியாய் மங்கள வார்த்தையின்போது மரியன்னைக்கு இருந்த மனநிலையோடு இக்கணப்பொழுதில் [illegible] வாழ்வோம்.

"இறைவன் நம்மை அன்பு செய்வதுபோல் [illegible] அன்பு செய்தால் நாம் அப்போஸ்தலிக்க பணியின் உட்[illegible] அறிந்து கொள்வோம்"

அமலமரி வழி இறைசித்தம்

நன்றி கூறுகிறேன் கனிதர ஆசிக்கின்றேன்

மாகாண அதிபர்



கத்தோலிக்க திருச்சபையில் திருவுளச் சபையானது 45 ஆண்டுகளைப் பூர்த்தி செய்வதையடைந்து பெருமகிழ்ச்சி கொள்கிறேன். இறைவன் எமது சபைக்கு வழங்கி வரும் அளவற்ற ஆசிகளுக்காகவும் பராமரிப்புக்காகவும் நன்றி கூறுகின்றேன். அதே வேளையில் எமது சபை தனது கிளைகளை இன்னும் பல நாடுகளுக்கும் பரப்பி கனி தரவேண்டுமென்று ஆசிக்கின்றேன். உலக சவால்களின் மத்தியிலும் கிறீஸ்தவ ஒளியாக உப்பாக புளிக்காரமாக வாழ்ந்து, இறைவன் திருவுளப்படியே எமக்கு ஆகட்டும் என்று நற்சான்று பகரும் மன்னார் மறைமாவட்ட திருவுளச்சபை அங்கத்தவர்களின் சேவை மனப்பான்மையையும், அவர்கள் பங்குகளில் ஆற்றும் பணியையும் கண்டு மகிழ்ச்சி கொள்கின்றேன். எமது சபை மன்னார் மறைமாவட்டத்திலே வளர எமது மன்னார் ஆயர் அவர்கள் எமக்குக் காட்டிவரும் ஒத்துழைப்புக்கும் அன்புக்கும் எனது செபங்களுடன் கூடிய நன்றிகளையும் இத்தருணத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். இறைவன் எமது சபையை இன்னும் நிறைவாக ஆசீர்வதித்து, அது பன்மடங்காகப் பயன்தர அருள் புரிய வேண்டுமென்றும், ஆல்போல் விழுது பரப்பித் தாய்த்திருச்சபைக்கு துணை புரியவேண்டுமென்றும் வாழ்த்துகின்றேன்.

அருட்திரு. லொயிட் சாந்திக்குமார்
மாகாண அதிபர், திருவுளச்சபை, இலங்கை.

தோழமையில் நிறைவடைகின்றேன்

அமதிகளின் யாழ் முதல்வர்

அமலமரித் தியாகி அருட்திரு லூயி மரி பரான் என்பவர் நிறுவிய திருவுளச் சபையினரது பிரசன்னம் திருச்சபையில் 45வது வருட நிறைவைக் காண்கிறது. இது எமக்கு பெரு மகிழ்ச்சியைத் தருகிறது. பொதுநிலையினரது ஆன்மீகம் இறையரசினது பண்புகளை ஆல்போல விழுது பரப்பி உயரிய கிறீஸ்தவ சமூகத்தை உருவாக்க திருவுளச் சபையினர் தமது தியாகம் பொருந்திய வாழ்வாலும் அன்புச் சமூக உறவாலும் உழைத்துவருகின்றனர். இச்சபையினருடன் உறவாடுபவர் பூவோடு சேர்ந்த நார்போல தம் ஆன்மீக வாழ்வில் நிச்சயம் பெரும் எழுச்சி கண்டு உளம் மகிழ்வார்கள். அனைத்துலகிலும் பரந்து வாழும் அமதிகள் குடும்பம் சார்பில் திருவுளச் சபை அன்பர்களை வாழ்த்துவதும் தோழமை கொள்வதும் எமக்கு நிறைவைத் தருகின்றது.

அருட்திரு. அ. ஜீவேந்திரா போல் அ.ம.தி
அமலமரித் தியாகிகளின் யாழ் மாகாண முதல்வர்

நற்கனி கொடுக்கும் மரமாக மாறட்டும்

நானாட்டான் பங்குத்தந்தை

திருவுளச்சபை தனது 45வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். இறைவன் எமது சபைக்குச் செய்துவரும் அருங்கொடைகளுக்காக நன்றி கூறுகின்றேன்.

நாளுக்கு நாள் அதிகரித்துவரும் இன்றைய உலகின் பிரச்சினைகள் மத்தியிலும் எமது நாளாந்த சவால்களுடன், விண்ணரசின் விழுமியங்களை எமது குடும்பங்களில் வேலைத்தளங்களில் பங்குகளில் இலகுவாக வாழ எமது சபையின் ஆன்மீகம் எமக்குப் பெரிதும் உதவுவதையிட்டு மனம் மகிழ்கின்றேன். *இறைவனின் திருவுளப்படியே எனக்காகட்டும்* என்ற மங்கள வார்த்தைக் கன்னியின் மனநிலையோடு, சகோதரத்துவத்தையும் சமாதானத்தையும் கிறீஸ்து யேசுவில் கட்டி எழுப்பி பணிபுரிய எமது ஆயர் அவர்கள் எமக்குத் தரும் ஒத்துழைப்புகளுக்கும் வழிகாட்டுதலுக்கும் இத்தருணத்தில் எமது சபை சார்பாக நன்றி கூறுகின்றேன்.

இறைவன் எமது சபையைத் தொடர்ந்து ஆசீர்வதித்து இன்றைய உலகின் தேவைகளுக்கேற்ப பாரெல்லாம் பரந்து தாய்த்திருச்சபைக்குத் தம்மாலான பணிகளைத் தாராள மனத்தோடு புரிந்து நற்கனிகொடுக்கும் மரமாக மாற இறையாசிகளுடன் எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

அருட்திரு செபஸ்ரியன் குரூஸ், திருவுளச் சபை,
பங்குத் தந்தை, நானாட்டான்.

ஆன்மீகத்தில் மகிழ்கிறேன்

மன்னார் பொதுநிலை குடும்பம்

இன்றைய உலகின் தேவைகளை அறிந்து ஏற்ற ஆன்மீகத்தில் வாழ பொதுநிலையினரின் முக்கியமான மறைபரப்புச் சபையாக திருவுளச் சபை விளங்குகிறது. கத்தோலிக்க உலகுசார் சபை குருக்கள், பொதுநிலையினரோடு இணைந்து ஒரு குடும்பமாக திருச்சபையில் அங்கம் வகிப்பதற்கு எமது ஸ்தாபகர் பரான் அடிகளார் உருவாக்கித் தந்த ஆன்மீகப்பயிற்சிப் படிகள் சமூகத்திற்கு வழிகாட்டும் கலங்கரை விளக்காக இருக்கிறன. இச்சபையின் ஆன்மீகம் இறையரசின் பாதையிலே எங்களை வழி நடாத்துகின்றது. இது எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. உலகெங்கும் வாழும் திருவுளச் சபைக் குடும்பங்கள் உலகின் மத்தியில் கிறிஸ்து யேசுவுக்குச் சான்றாக வாழ எமது வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றோம்.

செ. சகாயன் லோகு, திருவுளச்சபை
குடும்பங்கள் - மன்னார்.

இலங்கையில் திருவுளச்சபை

1.	குருக்கள்	- 7
2.	மணத்துறவு ஏற்ற ஆண்கள்	- 4
3.	திருமணத் தம்பதிகள் (குடும்பம்)	- 40
4.	குருமட மாணவர்கள்	- 32

உலகில் திருவுளச் சபை

1.	ஆயர்	- 1
2.	குருக்கள் (சபையின் முழுநேர உறுப்பினர்)	- 107
3.	குருக்கள் (மறைமாவட்டங்களில்)	- 41
4.	தியாக்கோன்கள் (முழுநேர உறுப்பினர்)	- 9
5.	தியாக்கோன் (மறைமாவட்டங்களில்)	- 3
6.	குருமட மாணவர்கள்	- 132
7.	திருமணத் தம்பதிகள் (குடும்பங்கள்)	- 518

பல்வேறு நாடுகளில் திருவுளச்சபை

1. பொலிவியா	2. கனடா
3. சிலி	4. கொலம்பியா
5. கியூபா	6. இக்கவாடோர்
7. யுனைட்டட் ஸ்ரேற்ஸ்	8. ஸ்கொட்லட்
9. கௌதலோப்பே	10. கெய்ரி
11. இந்தியா	12. இத்தாலி
13. லாவோஸ்	14. டொமினிக்கன் ரிபப்லிக்
15. இலங்கை	16. பிலிப்பைன்ஸ்

திருமறைப்பணி நிலையச் செய்தி மடல்

மறைக்கல்வி கல்வி விவிலியப் பணிகள்

தேசிய மட்ட மறையாசிரியர் தேர்வு முடிவுகள்

வி. சி - விசேட சித்தி,
தி. சி - திறமைச்சித்தி,
சா. சி - சாதாரண சித்தி,

சித்தி அடையாதவர்களின் விபரம் இங்கே பிரசுரிக்கப்படவில்லை. அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது என்பதை கவனத்தில் கொள்ளவும். இயக்குனர்.

மறையாசிரியர் தேர்வில் பங்கேற்ற அனைவருக்கும் மற்றும் சித்தி பெற்றோருக்கும் எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் மகிழ்வோடு தெரிவிக்கின்றோம். இத்தேர்வானது உங்கள் பணி வாழ்வை இன்னும் ஆழப்படுத்துவதாகவும் செழுமைப்படுத்துவதாகவும் அமைய வேண்டும் என ஆசிக்கின்றோம்.

மறையாசிரியர் தேர்வு - 1, - 2003

பெயர்	பங்கு	சுட்டெண்	பெறுபேறு
01. ஜோண்சன் நிரோஜனா	தலைமன்னார்	2003001	தி.சி
02. அ. வெ. தர்ஷினி குரூஸ்	தலைமன்னார்	2003002	தி.சி
03. சூசை பிரிமலா	கீரியன்குடியிருப்பு	2003003	தி.சி
05. ப. மேரி சகிலா	பேசாலை	2003006	சா.சி
06. ம. அ. சுகந்தன் குரூஸ்	பேசாலை	2003007	தி.சி
07. தா. சு.றீகன் பச்சேக்	பேசாலை	2003008	சா.சி
08. லெ. ஜெ. சிறோமி குரூஸ்	பேசாலை	2003009	தி.சி
09. கி. டெல்ரின் குரூஸ்	பேசாலை	2003010	சா.சி
10. ம. அ. டயானா பெரேரா	பேசாலை	2003011	தி.சி
11. அ. வில்டாமேரி சிராய்வா	பேசாலை	2003012	சா.சி
12. சூ. கொண்செப்ரா துரம்	தாழ்வுபாடு	2003013	சா.சி
13. செ. எ. பாணு பெரேரா	தாழ்வுபாடு	2003014	தி.சி
14 அ. சகாயசீலி குரூஸ்	தாழ்வுபாடு	2003015	சா.சி
15. ம. கிறிஸ்ரின் மேரி குரூஸ்	தாழ்வுபாடு	2003017	சா.சி
16. லூ. சொர்ணதா குரூஸ்	தாழ்வுபாடு	2003022	தி.சி
18. இம்மனுவேல் டயாழினி	மன்னார்	2003024	தி.சி
19. அ. பியூலா குரூஸ்	மன்னார்	2003025	தி.சி
20. இம்மனுவேல் டக்ஷினி	மன்னார்	2003026	வி.சி
21. லோ. யூட் பென்சியா	மன்னார்	2003027	தி.சி
22. பெனடிக்ற் மிதிலா	மன்னார்	2003028	தி.சி
23. ச.மேரி எட்வீசியா றோச்	பள்ளிமுனை	2003029	தி.சி
24. ஸ்ராலின் டொன்சி சோசை	வங்காலை	2003030	சா.சி
25. லூ. செல்வராணி சோசை	வங்காலை	2003031	தி.சி
26. இ. றியன்சி மிராண்டா	வங்காலை	2003032	தி.சி
27. இ. றோ. மெற்றில்டா லெம்பேட்	வங்காலை	2003033	தி.சி
28. சூ. மேரி மெரியா குலாஸ்	வங்காலை	2003034	தி.சி
29. தே.ஜெனார்த்தனி குலாஸ்	வங்காலை	2003035	தி.சி
30. அ. வாணி சோசை	வங்காலை	2003036	தி.சி
31. செ. சசிஸ்ரெலா	உயிலங்குளம்	2003037	தி.சி
32. செ. அனிஷா	உயிலங்குளம்	2003038	தி.சி
33. மடுத்தீன் மதுரா	உயிலங்குளம்	2003039	சா.சி
34. ஞா. கரோலின் கிருஷாந்தி	உயிலங்குளம்	2003040	தி.சி
35. சா. ஜெயசீலன்	உயிலங்குளம்	2003041	தி.சி
36. ச. க. அன்னம்மா கொடுதோர்	உயிலங்குளம்	2003043	சா.சி
37. ப. நெறுஜின்	உயிலங்குளம்	2003044	தி.சி
38. அ. மேரி யுஸ்ரினா	வஞ்சியன்குளம்	2003045	சா.சி
39. சீமான் சந்தியோகு	வஞ்சியன்குளம்	2003048	தி.சி
40. ஞா. பிரான்சிஸ்கா ஜீவதி	வஞ்சியன்குளம்	2003049	தி.சி
41. இரா. யோ. விஜேந்திரன்	நானாட்டான்	2003050	சா.சி
42. அமிர்தநாதர் யூடிற் கவிதா	நானாட்டான்	2003051	சா.சி
43. செ. பெப்பேற்றுவா	நானாட்டான்	2003052	தி.சி
44. அ. அகஸ்ரா பிரசாந்தி சில்வா	நானாட்டான்	2003053	சா.சி
45. அ. அனெற்றாக்கினி குரூஸ்	நானாட்டான்	2003054	சா.சி
46. பிரகாசம் றோசலினா	முருங்கன்	2003055	தி.சி
47. யே.ஸ்ரெலா டிலானி	முருங்கன்	2003056	தி.சி
48. சகோ. மேரி பிரகாசினி அ.கா	முருங்கன்	2003057	தி.சி
49. ஜே. ரஞ்சன் அக்னஸ் சுவர்ணா	முருங்கன்	2003058	தி.சி
50. அ. திவ்வியராணி பர்னாந்து	அரிப்பு	2003061	சா.சி
51. செ. பிரான்சிஸ் பர்னாந்து	அரிப்பு	2003062	சா.சி
52. புறுனோ மதன் பர்னாந்து	அரிப்பு	2003063	சா.சி
53. அ. அனற்மேரி லெம்பேட்	அரிப்பு	2003064	தி.சி
54. திருமால் தேவநேசன்	அரிப்பு	2003065	தி.சி
55. எஸ். மேரி ரெபேக்கா லியோன்	அரிப்பு	2003066	தி.சி
56. செ. மே.மாக்கிறேற் சம்பாய்வா	கற்கிடந்தகுளம்	2003068	தி.சி
57. பிலிப் கத்தரின் சில்வா	கற்கிடந்தகுளம்	2003069	தி.சி
58 எஸ். கிறிஸ்ரலின் யூஜின்	கற்கிடந்தகுளம்	2003071	தி.சி
59. ஏனோக் கனிஸ்ரெலா	கற்கிடந்தகுளம்	2003072	தி.சி
60. பா. யேசு அந்தோனி	முள்ளிக்குளம்	2003073	சா.சி
61. தீத்துஸ் அனித்தா	தேவன்நகர்	2003076	சா.சி
62. பங்கிராஸ் சுகப்பிரியா	தேவன்நகர்	2003077	சா.சி
63. சகாய அன்ரனி ஜெயச்சித்திரா	தேவன்நகர்	2003078	சா.சி
64. தவநேசன் மேபில் கெறின்	விடத்தல்தீவு	2003080	சா.சி
65 முருகேஸ் தனமோகன்	அடம்பன்	2003085	சா.சி
66. முருகேஸ் புவனமோகன்	அடம்பன்	2003086	சா.சி
67. சந்தான் மரிய செபஸ்ரியம்மா	அடம்பன்	2003088	சா.சி
68. கைத்தான் மேரி ஜென்சா	அடம்பன்	2003089	தி.சி
69. அருளப்பு ஜெஸ்மின்	அடம்பன்	2003091	தி.சி
70. ச. சயாசினி	ஆட்காட்டிவெளி	2003096	சா.சி
71. செ. மேரி ஜோசப்பின்	ஆட்காட்டிவெளி	2003099	தி.சி
72. தி. கெமல்டா	ஆட்காட்டிவெளி	2003101	சா.சி
73. நி. மேரி மெடோனா	ஆட்காட்டிவெளி	2003102	தி.சி
75. எ. வரோணிக்கா	ஆட்காட்டிவெளி	2003104	சா.சி
76. சூ. செலஸ்ரீனா	ஆட்காட்டிவெளி	2003105	சா.சி
77. செ. பிரான்சிஸ்கா	ஆட்காட்டிவெளி	2003106	தி.சி
78. செ. கிறிசில்டா ரொசாந்தி	பண்டிவிரிச்சான்	2003110	தி.சி
79. யோ. கிறிஸ்ரினா ஜென்சி	பண்டிவிரிச்சான்	2003111	சா.சி
80. அ. டொறின் நிஷாந்தினி	பண்டிவிரிச்சான்	2003112	சா.சி
82. சூசைப்பிள்ளை கமிலஸ்	செட்டிகுளம்	2003116	சா.சி
83. அல்பிரட் அமல்ராஜ்	செட்டிகுளம்	2003117	சா.சி
84. அ.அலைக்ஸ் யூட்	செட்டிகுளம்	2003120	தி.சி
85. மு. சே. ஜெஸ்மினி	செட்டிகுளம்	2003121	சா.சி
86. ஜே. அ. ஜேசுதாஸ் றோய்	செட்டிகுளம்	2003[illegible]	சா.சி
87. பெ. ஜறின் மஞ்சுளா	செட்டிகுளம்	2003[illegible]	சா.சி
88. சூ.அன்ரனற் றூஷா	செட்டிகுளம்	2003[illegible]	சா.சி
89. வி. ஏஞ்சல் தாரினி	பம்பைமடு	2003126	சா.சி

மறையாசிரியர் தேர்வு - 1, - 2003

பெயர்	பங்கு	சுடெண்	பெறுபேறு
90. கு. அன்ரனிற்றா பாலினி	பம்பைமடு	2003127	தி.சி
91. பு. ஜெயதர்சினி	பம்பைமடு	2003128	தி.சி
92. தே. நொயலின்	பம்பைமடு	2003129	தி.சி
93. மு. ரோஸ்லின் ரெஜினா	பம்பைமடு	2003130	தி.சி
194. செ.மேரி சுகந்தினி	பம்பைமடு	2003131	தி.சி
95. இ.ஜெ.கெளசல்யா	பம்பைமடு	2003132	தி.சி
96. ச. பெனிஸ்ரா	கோமரசன்குளம்	2003133	சா.சி
97. ம. சகாய வின்சலா	கோமரசன்குளம்	2003134	தி.சி
98. பா. கிறின்சி	கோமரசன்குளம்	2003135	சா.சி
99. அ. ஜெயசீலி	கோமரசன்குளம்	2003136	தி.சி
100. ம. இமல்டா வதனி	வவுனியா	2003137	தி.சி
101. க. கலைப்பிரியா	வவுனியா	2003138	தி.சி
102. ச.சேலி வின்ரஸ்	வவுனியா	2003139	தி.சி
103. சீ. ஆன் காமல்	வவுனியா	2003140	சா.சி
104. ச. சகாயராணி	வவுனியா	2003141	சா.சி
105 பி. றோசலின்	வவுனியா	2003142	சா.சி
106. ஜே. எவிஸ் சுவிற்றா	வவுனியா	2003143	சா.சி
107. பி. ரொபின்சியா	வவுனியா	2003144	சா.சி
108. இ. விஜிதா	வவுனியா	2003145	சா.சி
109. பி. மேரி நிமால்சியா	வவுனியா	2003146	சா.சி
110. ம. கில்டா	வவுனியா	2003147	சா.சி
111. ச. ஜெயரொக்சினி	வவுனியா	2003148	தி.சி

மறையாசிரியர் தேர்வு - 2, - 2003

பெயர்	பங்கு	சுட்டெண்	பெறுபேறு
01. ஜே. சிசிலியா துரம்	தலைமன்னார்	20321680	சா.சி
02. ஞா. மேரி மெற்றில்டா	கீ. குடியிருப்பு	20321682	சா.சி
03. ய. அமலநாயகி	கீ. குடியிருப்பு	20321683	சா.சி
04. ச. ஆரோக்கிய அமலி	பேசாலை	20321684	சா.சி
05. பி. மே. பிறைனி பெரேரா	பேசாலை	20321685	தி.சி
06. ய. ஆ. சுபாசினி குலாஸ்	பேசாலை	20321686	தி.சி
07. தி. மே. லிசிற்றா பீரிஸ்	பேசாலை	20321687	சா.சி
08. ஆ. சு.சிராணி லோகு	பேசாலை	20321688	சா.சி
09.. எ. கிளன்சி மிராண்டா	பேசாலை	20321689	சா.சி
10. ஒ. டயானா பறுனாந்து	பேசாலை	20321690	வி.சி
11. செ. திருசா பச்சேக்	பேசாலை	20321691	வி.சி
12. அல்பிரட் வகுணா குரூஸ்	பேசாலை	20321692	சா.சி
13. அ.ச.மாக்மில்லன் குரூஸ்	பேசாலை	20321693	சா.சி
14. ம.யோ.சுகுமாரன் குரூஸ்	பேசாலை	20321694	திசி
15. அன்ரனி மில்ரன் குரூஸ்	பேசாலை	20321695	வி.சி
16. ச. மேரி நியூமி	பேசாலை	20321696	தி.சி
17. யோ.பியதாஸ் சுஜாத்தா	பேசாலை	20321698	சா.சி
18. அ. குயினா குலாஸ்	பேசாலை	20321700	தி.சி
19. செ. அனுஜா	மன்னார்	20321701	தி.சி
20. நே. சுபாஜினி	மன்னார்	20321702	தி.சி
21. அ.சகோ. யூ. சுரேந்தினி	மன்னார்	20321703	தி.சி
22. செ. நிர்மலா லோகு	மன்னார்	20321704	தி.சி
23. ம. மரியகொறஸ்ரியன்	மன்னார்	20321705	சா.சி
24. வி. மேரி ஸ்ரெலா	மன்னார்	20321706	சா.சி
25. வெ. திருமகள்	மன்னார்	20321707	வி.சி
26. மே. எவரெஸ்ரா பெரேரா	பள்ளிமுனை	20321708	தி.சி
27. அ. லக்ஸ்மாலா குரூஸ்	வங்காலை	20321712	தி.சி
28. இதயசாந்தா பெனாண்டோ	வங்காலை	20321713	தி.சி
29. யே. கீதாஞ்சலி சொய்சா	வங்காலை	20321714	தி.சி
30. டே. பெனிற்றா லெம்பேட்	வங்காலை	20321715	வி.சி
31. தொ. மேரி டொனிற்றா	உயிலங்குளம்	20321717	தி.சி
32. மே.அன்ரனிற்றா பெரேரா	உயிலங்குளம்	20321719	சா.சி
33. யே. லியூறின்	உயிலங்குளம்	20321720	சா.சி
34. றோ. மேரி ஜாக்குலின்	வஞ்சியன்குளம்	20321721	தி.சி
35. யே. கிளாறிஸ் சுவர்ணா	வஞ்சியன்குளம்	20321722	தி.சி
36. கை. அசோதா	வஞ்சியன்குளம்	20321723	தி.சி
37. யே. அன்ரனிதாஸ்	நானாட்டான்	20321724	வி.சி
38. அ. அசெம்ரா	கற்கிடந்தகுளம்	20321727	தி.சி
39. அ. ஆ. விஜிதா	கற்கிடந்தகுளம்	20321728	தி.சி
40. சீ. தேவ துஸ்யந்தி	கற்கிடந்தகுளம்	20321729	தி.சி
41. அ. சுமைத்திரா	கற்கிடந்தகுளம்	20321730	வி.சி
42. கி. பிரமிளா பறுனாந்து	அரிப்பு	20321732	தி.சி
43. செ. பத்மநாதன்	அரிப்பு	20321733	தி.சி
44. சகாயநாதன் லெம்பேட்	அரிப்பு	20321734	தி.சி
45. யோ. அ. யூட் பறுனாந்து	அரிப்பு	20321735	தி.சி
46. அ.அனற்பிறீடா லெம்பேட்	அரிப்பு	20321736	சா.சி
47. இ. லோறன்ஸ்	தேவன்பிட்டி	20321740	சா.சி
48. செ. அருள்ஜோதி	தேவன்பிட்டி	20321742	சா.சி
49. ம. மேரி கில்டா	விடத்தல்தீவு	20321744	சா.சி
50. செ. குமுதா	விடத்தல்தீவு	20321745	சா.சி
51. அ. [illegible]ழினி	அடம்பன்	20321747	சா.சி
[illegible]	ஆட்காட்டிவெளி	20321753	சா.சி
[illegible]சிப்பிரியா	பம்பைமடு	20321759	தி.சி
[illegible] ஜெனிடா	வவுனியா	20321761	சா.சி
[illegible].யனுசி	வவுனியா	20321762	சா.சி
கே. கார்த்தினி	வவுனியா	20321763	சா.சி
57. எ. றொக்சன்	கோமரசன்குளம்	20321764	சா.சி
58. சு. ஆன் சோபனா	கோமரசன்குளம்	20321765	சா.சி
59. அ. விமலதாஸ்	கோமரசன்குளம்	20321766	சா.சி

மறையாசிரியர் தேர்வு - 3, - 2002

2002ல் மறையாசிரியர் தேர்வு 3ல் தோற்றி எழுத்துப் பரீட்சை, ஆய்வுக்கட்டுரை, செயன்முறைத் (கற்பித்தல்) தேர்வு ஆகிய மூன்று நிலைகளிலும் சித்தி பெற்று இவ்வருடம் சான்றிதழ் பெறுவோர் விபரம் இங்கே தரப்படுகிறது. இப்பெறுபேறுகள் தேசிய மறைக்கல்வி நிலையத்தினால் உரியவர்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

பெயர்	பங்கு	பெறுபேறு
அ.லூ.றொபின்ரா லெம்பேட்	தலைமன்னார்	திறமை சித்தி
ச. நெவில் பர்னாந்து	பேசாலை	திறமை சித்தி
தா. ச. சுதா பச்சேக்	பேசாலை	திறமை சித்தி
நீ.மே. டெனிஸ்ரா பர்னாந்து	பேசாலை	திறமை சித்தி
நீ. பெ. ரஜனி பச்சேக்	பேசாலை	திறமை சித்தி
பி. மே. மெக்லி பெரேரா	பேசாலை	திறமை சித்தி
அ. ஜீ. யசோதா பீரிஸ்	பேசாலை	திறமை சித்தி
கி. விஜீதா பல்டானோ	பேசாலை	திறமை சித்தி
தே. நீ. பிராங் துரம்	பேசாலை	திறமை சித்தி
ஸ்.பொன்சியாபெர்ணான்டோ	பேசாலை	திறமை சித்தி
தே.ச.றூமிலா குரூஸ்	தாழ்வுபாடு	திறமை சித்தி
லூயிஸ் சுதனி	மன்னார்	திறமை சித்தி
பூ. அனற் பிறிடா	மன்னார்	திறமை சித்தி
நே. சாந்தினி	மன்னார்	திறமை சித்தி
செ. யூ. வளர்மதி	மன்னார்	திறமை சித்தி
மி. நீ. ஜான்சன்	பள்ளிமுனை	திறமை சித்தி
சூ. திரேசம்மா பிகிறாடோ	பள்ளிமுனை	திறமை சித்தி
அ. செபமாலை பிகிறாடோ	பள்ளிமுனை	சாதாரணசித்தி
ச.மே.எடல் குயின	பள்ளிமுனை	திறமை சித்தி
சூ.ஆ.றொசான்சலின் பெரேரா	பள்ளிமுனை	திறமை சித்தி
ஒ. யுஸ்ரீனா குரூஸ்	வங்காலை	சாதாரணசித்தி
கி. எ.பாரதி சோசை	வங்காலை	திறமை சித்தி
சே.செல்வசோதி	வங்காலை	திறமை சித்தி
பீ.யூ. வெலிசியா மிராண்டா	வங்காலை	திறமை சித்தி
அ. லூக் குரூஸ்	வங்காலை	திறமை சித்தி
ம. டென்சில் நியோமி	விடத்தல்தீவு	விசேட சித்தி
ஜோ. மேரி சுஜாதா	விடத்தல்தீவு	விசேட சித்தி
சோ. மே. யூக்கறிஸ்ரா	விடத்தல்தீவு	திறமை சித்தி
கீ.மேரி அசெம்ரா	விடத்தல்தீவு	திறமை சித்தி
செ.யூஜின் கெனடி	விடத்தல்தீவு	திறமை சித்தி
பொ. மரியராணி	விடத்தல்தீவு	சாதாரணசித்தி
மா. டெல்சியா டயஸ்	பேசாலை	சாதாரணசித்தி
இ. குயின்ரன்	அளவக்கை	திறமை சித்தி
ம. ஜெசில்டா	அளவக்கை	திறமை சித்தி
அ.யூ. அமலினி	அளவக்கை	திறமை சித்தி
வ. வெரோமினி	நானாட்டான்	சாதாரணசித்தி
யோ.ஜெகதிஸ்வரி	நானாட்டான்	திறமை சித்தி
அ. கில்டா கலாவதி	நானாட்டான்	திறமை சித்தி
செ. க. ஆனந்தி	நானாட்டான்	திறமை சித்தி
ச. அ. ராகினி	கற்கிடந்தகுளம்	திறமை சித்தி
யே. ஜெ. தீபா	கற்கிடந்தகுளம்	சாதாரணசித்தி
பே. தேவமலர்	கற்கிடந்தகுளம்	சாதாரணசித்தி
றோ. அ. நிரோஜினி	கற்கிடந்தகுளம்	திறமை சித்தி
அ. அசம்ரா	அரிப்பு	திறமை சித்தி
தி. கரோலின் டயன்	அரிப்பு	திறமை சித்தி
ச. எவறஸ்ரா	உயிலங்குளம்	திறமை சித்தி
ம. பாலலோஜினி	உயிலங்குளம்	திறமை சித்தி
அ. திரெசில்டா குரூஸ்	உயிலங்குளம்	திறமை சித்தி
பி. மெற்றலின் பர்ணாந்து	அளவக்கை	திறமை சித்தி
யா. அந்தோனியாப்பிள்ளை	தேவன்பிட்டி	திறமை சித்தி
அ.இ. றெபேக்கா	தேவன்பிட்டி	திறமை சித்தி
தே.கிறிஸ்றினம்மா	தேவன்பிட்டி	சாதாரணசித்தி
செ. யேசுதாசன்	ஆட்காட்டிவெளி	திறமை சித்தி
கி. மொறீன் கேமலதா	ஆட்காட்டிவெளி	திறமை சித்தி
செ. அ. டன்சன் குமார்	பண்டிவிரிச்சான்	திறமை சித்தி
அ.சகோ. நிர்மலரஞ்சினி	பெ.ப.விரிச்சான்	திறமை சித்தி
யா. சேரம் மரியவளன்	தெட்சனாமடு	திறமை சித்தி
அ.சகோ.இ.யோகராணி	செட்டிகுளம்	விசேட சித்தி
அ.சகோ. ஜேன்சித்திரா	பம்பைமடு	திறமை சித்தி
அ.மேரி கொன்சா	கோமரசன்குளம்	திறமை சித்தி
அ. அமலநாயகி	கோமரசன்குளம்	திறமை சித்தி
ந. டெனிஸ்ரலா	கோமரசன்குளம்	திறமை சித்தி
அ.சகோ.ஞா.ஆன்றோகினி	கோமரசன்குளம்	திறமை சித்தி
அ.சகோ. ஜறின் டொறத்தி	வவுனியா	திறமை சித்தி
யோ. மா. சுதர்ஷினி	வவுனியா	திறமை சித்தி
ஆ. விக்ரோ அமலினி	வவுனியா	திறமை சித்தி

இறையாட்சி மலர் ஒன்று மலர்ந்துள்ளது

அருட்பணியாளர் போல் றொபின்சனின் வாழ்வு பணி பற்றிய ஓர் பார்வை

கனிலன், முருங்கன் பங்கு



"இறையாட்சி நெருங்கிவிட்டது, மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்" என்ற இறைவார்த்தையைப் பறைசாற்றிக்கொண்டிருக்கிறார் தந்தை போல் றொபின்சன். மட்டக்களப்பு தேத்தாதீவில் அமைந்துள்ள புனித யூதா ததேயு திருத்தலம் வல்லமையின் வெளிப்பாடாக காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. அமைதி, அருள், மனதுக்கு நிம்மதி தரும் இடமாக அது அமைந்துள்ளது.

கடவுளுடைய வல்லமையின் பாதையில் இறையாட்சிப் பயணத்தில் பயணித்துக்கொண்டிருக்கிற தந்தை போல் றொபின்சன் இறைவனுடைய வல்லமையின் அடையாளமாக விளங்குகிறார். *'வல்லமை கீதங்கள்'* என்னும் அவருடைய பாடல்கள் இன்று எல்லா இடங்களிலும் காதுக்கு இனிமையும், மனதுக்கு ஆறுதலும் தருகிறது. இப்பாடல்கள் உள்ளத்தின் காயங்களைக் குணப்படுத்துவனவாக அமைந்துள்ளது.

மட்டக்களப்பு மாநகரம் இன்று இறையாட்சி நறுமணத்தினால் சுகம் பெறுகின்றது. அங்கு இறையாட்சிக்காக உழைக்கின்ற மனிதர்களை ஏராளமாகக் காணக்கூடியதாக உள்ளது. குணமாக்கல் வழிபாடு, மனமாற்ற சடங்குகளும் நடைபெறும் வேளைகளில் கூடுகின்ற மக்கள் வெள்ளம் கட்டுப்படுத்த முடியாததாக இருக்கின்றது. பேய்களை ஓட்டவும், நோய்களைக் குணமாக்கவும் யேசு தேர்ந்துகொண்ட ஒரு மனிதனாகத்தான் இந்த மண்ணில் தோன்றியுள்ளார். இவருடைய தியாகங்கள், அர்ப்பண சிந்தனைகள், கடவுளோடு கொண்ட உறவு- இவைதான் தந்தை போல் றொபின்சனைக் கடவுள் இவ்வாறு வல்லமையோடு பயன்படுத்துவதற்குக் காரணமாக அமைகின்றது. வல்லமை கீதங்கள் அமைகின்றது. வல்லமை கீதங்கள் பாடல் ஒலி நாடாவை உருவாக்கம் செய்வதற்கு தான் செய்த தியாகங்கள் பற்றி குறிப்பிடுகையில் இந்தியாவில் பாடல்களை ஒலிப்பதிவு செய்வதற்காக எத்தனையோ மைல்கள் நடந்து தான் பட்ட கஸ்ரங்கள் வேதனைகளைக் குறிப்பிடுகின்றார்.

உண்மையில் இப்பாடல்கள் சாதாரண முயற்சியால் தோன்றியவை அல்ல. இவை தியானத்திலும் தியாகத்திலும் உருவானவை என்பதால்தான் மக்கள் மனங்களை இப்பாடல்கள் ஊடுருவிச் செல்கின்றன. "என்னுடைய கண்களுக்குத்தான் தெரியும் எத்தனை இரவுகள் கண் விழித்திருந்தேன் என்று. என்னுடைய கால்களுக்குத்தான் தெரியும் எத்தனை மையில்கள் நான் நடந்திருப்பேன் என்று" அத்தனை தியாகங்களுக்கும் கடவுள் அவரோடுகூட இருந்து வழிநடத்துவதை அவருடைய நற்கருணைப் பிரசன்ன வழிபாட்டில் கண்டுகொள்ள முடியும். I Love You Jesus என்ற உருக்கமான வேண்டுதல் அவர் இந்த உலகத்தில் எதற்குமே கொடுத்திராத முதன்மையான உறவை துல்லியமாகக் காட்டுகின்றது.

தந்தை போல் றொபின்சன் யேசுவின் சாயலிலே தோன்றுகின்ற காட்சி பார்ப்பவரைத் திகைப்புற வைக்கின்றது. கட்டை உருவம் புகழ்ச்சியும் பெருமையும் தன்னகத்தே ஏற்றுக்கொள்ள மறுக்கும் சுபாவம். இம்மைந்தனுக்கு கடவுள் போதியளவு ஞானத்தைக் கொடையாகக் கொடுத்துள்ளார். யேசு வாழ்ந்த காலத்தில் மக்கள் கூட்டம் அவர்பின் சென்று திரள் திரளாக அவருடைய போதனைகளைக் கேட்டதுடன் தாங்கள் நினைத்த காரியங்கள் நிறைவேறவும் வயிறாற உண்ணவும் இரக்கம் கிடைத்ததுபோல தந்தை போல் றொபின்சன் மக்கள் அவரைத் தேடிச்செல்ல சட்டங்கள் போடவில்லை. மனிதர் எவரேனும் உலகை வெறுத்து தன்நலம் துறந்து கடவுளோடு அதிக நேரம் ஒன்றித்திருப்பானோ அவனைக் கடவுள் கண்ணோக்காமல் விடமாட்டார் இதனைச் செய்து காட்டியவர்தான் தந்தை போல் றொபின்சன். அவர் வளர்க அவர் பணி தொடர்க.

குடும்பக் குவலயம்

அம்மா

அருட்சகோதரன் ஜோசப் செல்வன் செ.தா.

ரோசேரியன் கல்வியகம், 226/5, மீக்கணுவ, அம்பிட்டிய, கண்டி.



"உன் தந்தையை உன் முழு உள்ளத்தோடு மதித்து நட. உன் தாயின் பேறுகால துன்பத்தினை மறவாதே. அவர்கள் உன்னை பெற்றெடுத்தார்கள் அதற்கு ஈடாக உன்னால் எதனையும் செய்ய முடியாது என்பதனை நினைவில் இருத்து" (சீராக் 7 : 27 – 28) இன்றைய உலகில் ஒவ்வொரு பிள்ளைகளும், இளைஞர், யுவதிகள் அனைவரும் மனப்பாடம் செய்து என்றுமே நினைக்க வேண்டிய வசனங்கள் இவைகள். இன்றைய நவீன யுகத்தினில் நாம் காண்பது என்ன? பெற்ற தாயை அடித்து உதைக்கும் மக்கள், பிச்சைக்கு அலைய விடும் பிள்ளைகள். இன்னும் வீட்டு வேலைக்காரியாக தங்கள் தாயை வைத்திருக்கும் பல்வேறு பட்ட மனநிலை கொண்ட மனிதர் நிறைந்த உலகம் இது. இன்று வயோதிப மடங்கள், சாலை ஓரங்கள், மரங்களின் நிழல்களில் கைவிடப்பட்டு, பசியில் நோய்களால் பீடிக்கப்பட்டு நாளாந்தம் கண்ணீர் வடிக்கும் தாய்மார்கள் எத்தனை பேர்? மனிதன் மட்டும் தான் சிந்திக்கத் தெரிந்த பிராணியாம். எங்கே போனது அவனது சிந்தனை. பெற்ற தாய்மார்களுக்கு ஏன் இந்த இழிநிலை?

நாங்கள் வளர்ந்துவிட்டோம், எங்களுக்கு அறிவு இருக்கின்றது நீ யார், எங்களை கேள்வி கேட்க? என்று எத்தனை தடவைகள் கேட்டிருப்போம்? ஏன் இந்த நிலை? நாங்கள் சிந்திக்கத் தெரிந்தவர்களா? அம்மா என்ற இந்த ஆழமான வார்த்தைக்கு அர்த்தங்கள் தெரியுமா? இல்லை ஒரு அன்னையின் அன்பை அவளது உள்ளத்தினை எம்மால் அளக்கத்தான் முடியுமா? சிறு வயதினில் என்ன தேவையென்றாலும் அம்மா, அம்மா என்று அழைத்தது எப்படி மறந்து போனது? ஏன் இன்றுகூட ஏதாவது அடிபட்டால் அல்லது காயம்பட்டால் உடனே எம்மை அறியாமலே அம்மா என்று அலறுகின்றோமே! அதை ஏன் எம்மால் மாற்ற முடிவதில்லை. பிதாவையும் மாதாவையும் கனம் பண்ணுவாயாக இது கடவுள் கொடுத்த கட்டளைகளில் நான்காவது. அதிலும் முதல் மூன்று கட்டளைகளும் கடவுளை போற்றக் கேட்டுக் கொண்டு மனிதரைப் பற்றிய கட்டளை தொடங்கும்போது பிதாவையும் மாதாவையும் கனம்பண்ணு. அதுவே கடவுளுக்கு பின்னர் உனக்கு உயர்வு தரும் என்று கூறாமல் கூறி நிற்கின்றது அந்தக் கட்டளை.

அம்மா என்றால் யார்

நீ உருவாகும் நாளின் முன்னரே உன்னைப்பற்றிக் கனவு காண்பவள் காத்திருப்பவள், தவம் புரிபவள். பின்னர் நீ கருவான போது அவள் எத்தனை கவனமாக இருக்கின்றாள், மகிழ்ச்சி கொள்கின்றாள் என்பது யாருக்காவது புரியுமா! அது அன்னைக்கு மட்டுமே உரியது! அதுதான் அன்று மரியன்னையின் வழியாக சிறந்த பாடலாக உருவானது!

ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப் படுத்து கின்றது.....(லூக்கா 1: 46-55) நீ கருவாகும் வரை கணவனுக்கு மட்டுமே பணி செய்தவள் அதையும் தவிர்த்துக் கொள்கின்றாள். தனது உணவு, உறக்கம் எல்லாம் தியாகம் செய்வாள். கருவான தன் பிள்ளைக்காக தொட்டில், கட்டில், சீப்பு, சோப்பு இன்னும் என்ன என்ன செய்யலாமோ அதிலேதான் அவளது சிந்தனை சுழலும். இவையெல்லாம் குழந்தை உலகிற்கு வரும் முன்: நீ பிறந்து வரும் அந்த வேளையின் வேதனை வார்த்தைகளில் வடிக்க முடியுமா? அது இன்றும் விஞ்ஞானத்தால் அறிய முடியாதது! ஆனால் விஞ்ஞானிகளின் கருத்தின்படி ஆயிரம் கத்திகள் ஒரே இடத்தில் குத்தப்படுவது போன்ற உடல் வேதனையையும் பார்க்க அதிகமானதாம் ஓர் அன்னை படுகின்ற பிரசவ வேதனை! என்னைப் பொறுத்த வரையில் நாம் ஒரு முறை பிறந்து ஒரு முறை இறக்கின்றோம். ஆனால் ஒரு தாயானவள் ஒவ்வொரு குழந்தை பிறக்கும் போதும் இறந்து பிறக்கின்றாள்.

இன்னும் சொல்லப்போனால் ஒரு குழந்தை வளர்ந்து அதனது வாழ்க்கையினை அடையும்வரை அன்னையானவள் பல்லாயிரம் தடவைகள் இறந்து பிறக்கின்றாள்.

இன்று நாம் ஒவ்வொருவரும் சரியாக சிந்திப்போம் என்றால், நாம் வாழ்வது, சுகதேகியாக உலாவருவது, படிப்பது, பண்பானவர்கள் என்று மற்றவர்களால் புகழப்படுவது எல்லாம் எம் அன்னைமார்கள் தங்களின் இரத்தத்தை பாலாக்கி எமக்கு ஊட்டியதன் வெளிப்பாடு. தாய் அன்பின் சர்வ கலாசாலை. அவள் உயிரளித்த தெய்வம்- நீ கெட்டுப்போய் நின்றாலும் உன்னை வெறுக்காத ஒரே ஜீவன் அவள்தான். ஆனால் இன்று அன்பு மொழிந்த வாய்க்கு நல்ல உணவில்லை! அணைத்து நின்ற கரங்களுக்கு அசைக்க சக்தியில்லை. தன் உடலினைப் பல தடவைகள் உடையாக உனக்கு கொடுத்தவளுக்கு உடையில்லை, இது நியாயமா? தகுமா?

கவிஞர் கண்ணதாசன் அர்த்தமுள்ள இந்துமதம் எனும் புத்தகத்தில் கூறுவதுபோல் தாய்க்கும், தந்தைக்கும் நீ செய்யும் அநியாயம் உன் தலையைச் சுற்றி அடிக்கும். இது நடக்காது என்று எப்படி நம்பலாம்? இன்று இந்த நவீன உலகம் அதிலே ஏற்பட்ட அற்ப சினேகிதங்கள், பணம், பதவிகள் பெரிதாகி எம் தாயை நாம் பல்வேறு வகைகளில் தலைகுனிய வைக்கின்றோம். இதுதானா அவள் எமக்குக் காட்டிய தன்னலம் இல்லாத அன்புக்கு எமது பரிசு? அன்னையானவள் உன்னிடம், தான் காட்டிய பாசத்திற்கும், நீ குடித்த பாலுக்கும் கணக்கு கேட்டாலோ அல்லது அதனை திருப்பிக் கேட்டாலோ உன்னால் அதனைக் கொடுக்க முடியுமா? இந்த உலகினை விற்றால்கூட ஈடாகாதே!

இதனை வாசிக்கும் என் அன்பான சகோதரனே, சகோதரியே, அன்னை எம்மிடம் எதை எதிர்பார்க்கின்றாள்? காசா, பணமா செல்வங்களா இல்லையே அவள் அதிர்பார்ப்பது உண்மையான பொய்யில்லா அன்பு, அவளை என்றும் மகிழ்வோடு வைத்திருக்கும் பரிவு மட்டுந்தானே! எத்தனையோ எமக்கு கொடுத்தவளுக்கு இதனை எம்மால் கொடுக்க முடியாதா? முயன்றுதான் பார்ப்போமே!

இன்றிலிருந்து அன்னையரை தந்தையரை மதிக்கக் கற்றுக் கொள்வோம். கோயில்களில் வழிபாட்டுத் தளங்களில் பணத்தில் பதவியில் நாம் தேடி அலையும் சந்தோஷத்தை எம் அன்னையிலே கண்டு கொள்வோம். அன்னை தந்தையரை ஆதரவற்றோராய் அனாதை இல்லங்களில் வயோதிப மடங்களில் ஒதுக்கிவைப்பதனை தவிர்த்துக் கொள்வோம். ஏனென்றால் அவர்கள் தனிமையில் வடிக்கும் கண்ணீர் எம்மை வாழவிடாமல் செய்[illegible] என்பது உறுதி! "கடவுளுக்கு எல்லா இடங்களிலும் இரு[illegible] என்பதாலோ என்னவோ அம்மாக்களைப் படைத்[illegible] கூறுகின்றான் ஒரு ஆங்கிலக் கவிஞன். இதன்படி இன்று வா[illegible] அனைவரும் அன்னையரை மதிக்க வேண்டும் என்பதும் இ[illegible] சந்ததியினரையும் அவ்வாறு செய்ய படிக்க வேண்டும் என்பதுவே எனது இந்தக் கட்டுரையின் பணிவான வேண்டுகோள் ஆதங்கம் செய்வீர்களா?

சமூகப்பால் நிலை?

ச. பெல்மன அல்மெயிடன் ஆசிரியர்,
மன். பெரியமடு ம.வி

ஒரு பெண் பிள்ளைகளைப் பெற்றெடுத்து அவற்றிற்கு பாலூட்டுகிறாள். இவை அவளுடைய இயற்கை தொழில்கள். பெண்கள் மட்டுமே இவற்றைச் செய்யமுடியும். பெண்களது இயற்கை இயல்புகளாலே சமுதாயம் பெற்றெடுத்த பெண்பிள்ளையை அவளே பராமரிக்க வேண்டுமென கடப்பாட்டினை கொடுத்துள்ளது. இவற்றை இன்னும் ஆழமாக புரிந்து கொள்ள வேண்டுமேயானால் சமுதாயம் உருவாக்கிய முறையைக் கவனித்தல் வேண்டும்.

பிரசவம், பாலூட்டுதல் ஆகியவற்றின் காரணமாக ஒரு பெண் குறிப்பிட்ட காலத்திற்கு வீட்டுக்குள் கட்டுப்படுகிறாள். சமூகத்தில் வருத்தியான குடும்ப அமைப்பில் காலத்தின்போது குடும்பத்திற்கான உறவை அவளே தேடிச் செல்கின்றாள். பெண்ணானவள் தனது வீட்டிற்கு அருகில் வீட்டினுள், அல்லது வீட்டினருகில் செய்யக் கூடிய தொழில்களைச் செய்ய, மனிதன் வெளி வேலைகளில் ஈடுபட்டான். அது அப்படியாக ஒரு வாழ்க்கை முறையாக அமைத்தது மட்டுமல்ல, வீடும் வீட்டுத்திட்டமும் பெண்களுடையதெனவும் வெளித்தலம் ஆண்களுடையது எனவும் சமுதாயத்தினால் தீர்க்கப்பட்டது. இந்த வகையான வாழ்க்கை முறை ஆணுக்கு அதிகளவு செல்வத்தைக் கொண்டுவந்தது. அவன் வீட்டுக்கு வெளியே சுற்றித் திரிந்து தனக்காக ஒரு பிழைப்பைத் தேடிக்கொள்ள முடிந்தது. அவன் தேடிக்கொண்ட செல்வத்திலிருந்த காலக்கிரமத்தில் ஒவ்வொன்றையும் கட்டுப்படுத்த ஆரம்பித்தான். பெண்ணைவிட அவன் அதிகளவு அதிகாரம் கொண்டவனாக விளங்கியதுடன் ஆண்மீது தங்கியிருக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. காலப்போக்கில் பெண்ணைப் பாதுகாப்பதற்கு ஆண் தேவை என்று கருதப்பட்டது. பெண்ணானவள் வீட்டினுள் பலமற்றவள், மென்மையானவள், மிருதுவானவள், கீழ்ப்படிவானவள், சாதுவானவள் என்று கருதப்பட்ட அதே வேளை ஆணானவன் சக்தி வாய்ந்தவன், ஆக்கிரமிப்பாளன், வலிமையானவன், முரட்டுத்தன்மை வாய்ந்தவன், பிடிவாதக்காரன் என்ற வகையில் பாதுகாப்பளிப்பவன் என்றும் அவனுக்கு பொதுவாழ்வில் வகிப்பதற்கு ஒரு பங்கு உள்ளது என்றும் எண்ணப்பட்டது. படிப்படியாக பெண்மைக்குரிய குண இயல்புகள் ஆணுக்குரிய குண இயல்புகள் என இத்தகுதிகள் வகைப்படுத்தப்பட்டதுடன் இவை முறையே பெண்களுடனும் ஆண்களுடனும் இணைந்த தகுதிகளாக வந்தன. சக்தி, ஆக்கிரமிப்புத்தன்மை; பலம், பிடிவாதம் ஆகியன ஆண்களின் குண இயல்புகளாகவும் அதேவேளை சாதுவான தன்மை, மென்மையான தன்மை, தியாகம் செய்யும் மனப்பான்மை, கீழ்ப்படிவு, பொறுமை ஆகியன பெண்களின் சிறப்பியல்புகளாகவும் கணிக்கப்பட்டன.

வருடக் கணக்கில் சமுதாயத்தினால் வலியுறுத்தப்பட்ட இத்தகைய எண்ணப்பாடுகள், ஆண்கள்மீதும் பெண்கள்மீதும் சுமைகளைச் சுமத்தியுள்ளன. பெண்ணானவள் வலிமையற்றவள், மென்மையானவள் எனக்கருதப்படும்போது அவள் சுதந்திரமாக செயற்பட முடியாதிருக்கின்றது. ஏனெனில் சமூகமானது இதை அவளிடமிருந்து ஏற்றுக்கொள்வதில்லை. சுதந்திரமாக வாழ்வதற்கும் சுதந்திரமாக செயற்படுவதற்கும் தானே முடிவு எடுப்பதற்கான உரிமையையும் அவள் இழக்கிறாள். அவள் சுதந்திரமாகச் செயற்பட முயற்சித்தால் அவள் பெண் அல்ல என்றும் விசித்திரமானவள் என்றும் சமூகம் அவளைத் தள்ளி வைக்கின்றது. இதற்கு மாறாக ஆணானவன் [illegible]மையானவனாக பாதுகாப்பளிப்பவனாக கஷ்டமான [illegible]களைச் செய்யக்கூடியவனாக இருக்க வேண்டும் என்று [illegible]பார்க்கப்படுகின்றான். இந்த தகுதிகளை அவன் கொண்டிருக்காவிட்டால் ஆண் அல்ல என்ற நாமம் சூட்டப்படுகின்றது.

அன்பின் கங்கை அன்னை தெரேசா

விறு விறுப்புத் தொடர் 5

எழுத்துருவாக்கம்
சொல்லின் செல்வன்
இளவாலை அமுது

கண்டனள் கல்கத்தாவை!

அன்பை விதைப்பதும், புதுப்பிப்பதும் மனிதர்களை மதிப்பதுமே இந்த நூற்றாண்டின் தேசியத்தேவை – கவியரசர் வைரமுத்து.

கல்கத்தா, பாரத நாட்டின் தலை நகரமாக நீண்ட காலம் விளங்கியது. 1911ஆம் ஆண்டு டெல்லி இந்தியாவின் தலைப் பட்டினமாக மாற்றம் பெறும் வரையும் கல்கத்தாவே முதன்மை பெற்றிருந்தது. ஆய கலைகள் அறுபத்து நான்கும் சிறந்து விளங்கிய பூமி கல்கத்தா.

ஆனால் அந்த நகரம் பிறக்கும்போதே பொக்கிள் கொடியோடு சிக்கல்களும் தோன்றின. குபேரர்களுக்கும், வணிகர்களுக்கும், செல்வந்தர்களுக்கும் மாத்திரம் கல்கத்தா கதவு திறந்து விடவில்லை. புலவர்கள், அறிஞர்கள், அரசியல் புலிகள், ஓவியக்கலைஞர்கள், எழுத்தாளர்கள் என்போரையும் அது கட்டி அணைத்தது. வங்கம் இன்றைக்குச் சிந்தித்தால் இந்தியா நாளைக்குச் சிந்திக்கிறது என்றார் பண்டிதர் நேரு. அழகும்-அருவருப்பும், ஆடம்பரமும் - வறுமையும், மாடமாளிகைகளும் - சாக்குக் குடில்களும், பெருமையும் சிறுமையும் ஒன்றையொன்று பார்த்துப் பல்லைக் கடித்தன. பிச்சை எடுத்தல், விபசாரம், களவு, கொலை, கயமை என்பன அழையாமலே அங்கு வந்து அத்திவாரம் அமைத்தன. வறியவர்களையும், அன்னை திரேசாவையும் கல்கத்தா கைநீட்டி அழைத்தது. ஒருவர் இல்லாமல் மற்றவர் இருப்பதால் பலனில்லை. கல்கத்தா இல்லை என்றால் அன்புப் பணியாளர் சபையும் இல்லை.

இன்று நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் அன்னை திரேசாவின் அடியார் கூட்டம் விழுது விட்டிருக்க முடியாது. திரேசா கல்கத்தாவில் கால் வைத்து, என்ரலி என்ற இடத்தில் அமைந்த கன்னியர் மடத்துக்குச் சென்று விடியற் காலையில் கதவைத் தட்டினாள். அங்கே ஒடி வந்த இளம் கன்னியர்கள் சிரிப்புச் சிந்தியபடி திரேசாவைக் கட்டி அணைத்து முத்தமிட்டனர். கல்கத்தா குளவிக் கூடு போலச் சனநெருக்கமுள்ள பட்டினம். இவ்வாறு சனநெருக்கமுள்ள இன்னொரு பட்டினத்தை இந்தியாவில் காண்பது அரிது. சூரியன் பூமியை எட்டிப் பார்க்குமுன்பு, விடியற்காலையில் மேல்வீட்டின் விறாந்தையில் நின்றபடி 18 வயது இளம் பெண் திரேசா கண்களை விரித்து அந்த மாநகரத்தைப் பார்த்தாள்.

தோல் உரிந்த கட்டிடங்கள். வாதமின்றியே மடங்கிய மரங்கள். மழையாலும் வாகனப் பெருக்காலும் குன்றும் குழியுமான தெருக்கள். அந்தத் தெரு ஓரங்களில் அடக்கத்துக்குக் காத்திருக்கும் சடலங்கள் போல நித்திரையில் கிடக்கும் உடம்புகள். அவற்றின்மேல் இனி அழுக்கேற இடமில்லை என்று கூறும் மேற்போர்வைகள். கந்தல்கள், தடித்த கடுதாசிகளால் மூடப்பெற்ற சில மனிதப் பிறவிகள். ஒன்றுமே இல்லாமல் பிறந்த மேனியாக் கிடக்கும் சில உருவங்கள். மரணம் வந்து சுரண்டும் சில எலும்புக் கோவைகள். தெருநாய்கள் அவர்களோடு உறவு கொண்டாடிக் குளிருக்கு உடம்பை நீட்டிச் சுருக்கும். வேறு சில தோல் நாய்கள் அடுப்பு மூட்டிப் பெண்கள் ஆக்கும் கஞ்சிப் பானையைத் தேடி ஓடும். காகங்களின் முறையீடுகள் மரக் கொப்புகளின் ஒலி பெருக்கியாய் இருக்கும். அந்த ஓசையில் கல்கத்தாவின் பசியின் கொடுமை ஓரளவு கேட்கும். மோகனமாய்த் தொடங்கி முகாரியாய் முடியும் இராகம் சில தத்துவங்களும் நடைமுறைகளும் முட்டிமோதின. மடத்தின் வடக்குப் புறமாக வந்து சுற்று மதிலுக்கு அப்பால் பதிந்த நிலத்தில் உள்ள சேரியை (Slum) நோக்கிக் கண்களை வீசினாள். கண்களை மூட முடியவில்லை.

கொஞ்சம் கூர்ந்து நோக்கினால் சூரியனே தாடி வளர்க்கும். புதிய, மலைகளாகக் குவிந்து வரும் குப்பை மேடுகளில் இருந்து எழும்பும் புகையில் தெய்வத்தின் சாயல் ஒன்று கீறி இருப்பது போலத் தெரிந்தது. அந்தக் கல்வாரியில் அவள் நெஞ்சம் நசிந்தது. ஏழைகளைப் பற்றி அவள் உள்ளத்தில் எழுப்பிய சுவர், சீனமதிலாக விரிந்தது. அவள் உள்ளத்தில் இருந்து எழுந்த பெருமூச்சில் யப்பான் எரிமலைகளின் ஊசித் துவாரத்தால் வரும் அக்கினியில் பிம்பம் பொசிந்தது.

தாஜ்மகாலைப் பார்க்கிறவர்கள் சாஜகானின் கண்கொண்டு பார்க்க வேண்டும். கிளியோபத்திராவைப் பார்க்கிறவர்கள் அன்ரனியின் கண்ணால் பார்க்க வேண்டும். கல்கத்தாவைப் பார்க்கிறவர்கள் திரேசாவின் விழி வழியாகப் பார்க்க வேண்டும்.

(கங்கை தொடர்ந்து பாயும்)

Holy Family Priest Associates

திருக்குடும்ப சபை துணை அங்கத்துவக் குருக்களின் ஆசியப் பிராந்திய ஒன்று கூடல்

அருட்திரு. யே. நீக்கிலஸ், குருமுதல்வர், யாழ் மறைமாவட்டம்.

கடந்த மாசி மாதம் 17 - 20 ம் திகதிகளில் கண்டியிலுள்ள மொன்ரேபானோ (**Monte Fano**) என்னும் தியான இல்லத்தில் ஆசியப் பிராந்தியப் பிரதிநிதிகளாக இருபது திருக்குடும்பக் கன்னியர் சபையின் துணை அங்கத்துவக் குருக்கள் வரலாற்றிலே முதன்முறையாக ஒன்று கூடினார். உரோமை நகரிலிருந்து வருகை தந்திருந்த திருக்குடும்பக் கன்னியர் சபையின் பொதுமுதல்வர் அருட் சகோதரி மாகிறேற் முல்டூன், மற்றும் ஆலோசகர்கள், ஊக்குவிப்பாளர்கள் பலர் இந்த ஒன்றுகூடலை நெறிப்படுத்தினர். இந்தியா, இலங்கை, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும், துணை அங்கத்துவர்களுக்கான அனுபவத்தைப் பெறும் நோக்குடன் விசேட பிரதிநிதிகளாக தென் ஆபிரிக்காவிலிருந்து இரு குருக்களும் மேற்படி ஒன்றுகூடலில் பங்கெடுத்தனர்.

இவ் ஒன்றுகூடலிலே திருக்குடும்பக் கன்னியர் சபையின் துணை அங்கத்துவக் குருக்களின் அழைப்பு, வாழ்வு, பணி ஆகியவற்றை ஆழமாகத் தியானிக்க வாய்ப்பு எட்டியது. திருக்குடும்பக் கன்னியர் சபை நிறுவுனர் அருட்தந்தை பீற்றர் பியென்வெனு நோ ஆ அவர்களின் தூரநோக்கும், நசரேத்தில் வாழ்ந்த திருக்குடும்பத்தின் ஏழ்மை, எளிமை, கீழ்ப்படிவு, என்பன அவரின் வாழ்வை ஆட்கொண்டு வழிநடத்தியதையும் தெளிவாக அறியக்கூடியதாயிருந்தது.

திருக்குடும்பச்சபை முதல்வர் தனது ஆரம்ப உரையில், எவ்வாறு சபை நிறுவுனர் இறைவனையே அனைத்திற்கும் மேலாகவும், "இறைவன் மாத்திரமே, அனைத்தும் அவரின் மகிமைக்கே" என்ற குறிக்கோளோடு வாழ்ந்தார் என்பதை அழுத்தமாக எடுத்தியம்பினார். திருக்குடும்பம் எமக்குத் தரும் படிப்பினை இதுவே. இறைவனில் மாத்திரமே நம்பிக்கை கொண்டு அவரில் முழு ஆறுதலையும் ஒளியையும் பெற்று அவர் ஒருவரையே நாடித்தேடி அன்புசெய்வதே எமது குறிக்கோளாக இருத்தல் அவசியம் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

குருக்கள் ஏன் துணை அங்கத்தவர்களாக?

மறைமாவட்டக் குருக்கள் ஏற்கனவே தமக்கென ஓர் ஆன்மீகத்தைக் கொண்டுள்ளவர்கள். இந்த ஆன்மீகம் குறைபாடுள்ளது என்று கூறிவிட முடியாது. ஆனால் இதற்கு ஊன்றுகோலாக வலுவூட்டும் வகையில் திருக்குடும்ப ஆன்மீகம் விளங்க முடியும் என்பதை மறுக்க முடியாது. ஏனென்றால் அனேக குருக்கள் தனிப்பட்ட [illegible] ரீதியாகத் தமது ஆன்மீகத்தைக் கட்டியெழுப்ப முயலுகின்றார்கள். ஆனால் ஒரு குழுமத்தில் இணைந்து ஒரு ஆன்மீகத்தை கட்டியெழுப்புவது மிகவும் பயன் அளிப்பதும் பலமுள்ளதாக இருப்பது உறுதியாகும்.

ஆகவே திருக்குடும்ப ஆன்மீகம் மறைமாவட்டக் குருக்களுக்கு இலகுவானதும், அர்த்தமுள்ளதாகவும் அமைந்துள்ளது.

இது எல்லாருக்குமே கட்டாயமானதல்ல. சுயவிருப்பத்திலேயே ஒருவர் இந்த அழைப்பை ஏற்றுத் தன்னை அர்ப்பணித்து, திருக்குடும்பத்தை மாதிரியாகக் கொண்டு வாழத் துணை அங்கத்துவம் வழிவகுக்கின்றது.

துணை அங்கத்தவர்களின் கடமைகளும் பணிகளும்

1. ஒரு மறைமாவட்டக் குரு திருக்குடும்பத் துணை அங்கத்தவராக இணைய விரும்பும்போது அவர் தன் ஆயரின் அனுமதியோடு தன் தெரிவைத் தீர்மானிக்கின்றார்.
2. தனது பணிவாழ்விலே திருக்குடும்பத்தின் ஏழ்மை, எளிமை, கீழ்ப்படிவு ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு தன்னை அர்ப்பணிக்கின்றார்.
3. திருக்குடும்பத் துணை அங்கத்தவர்களான ஏனைய குருக்களுடன் தொடர்பும் உறவும் கொண்டவராய் தன் அழைத்தலை ஒரு குழும உறவிலே பலப்படுத்த வழிகளைத் தேடுகின்றார்.
4. திருக்குடும்பச் சபை நிறுவுனர் ஒரு மறைமாவட்டக் குருவாயிருந்து இறைவனில் மட்டும் முழு நம்பிக்கை வைத்து ஒரு பலமுள்ள ஆழமான ஆன்மீகத்தை வாழ்ந்ததுபோல, சவால்கள் நிறைந்த இன்றைய உலகில் ஒரு குரு தன் அழைத்தலிலே பிரமாணிக்கம் உள்ளவராகத் திகழ ஆன்மீகத் தேடலிலே பயணிக்கின்றார்.
5. ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கப் பணிக்கப்பட்டவராக நவீன கவர்ச்சிகள் மிகுந்த இவ்வுலகில் திருக்குடும்பத்தின் ஏழ்மை வாழ்வைப் பின்பற்றி இறையரசின் சாட்சியாகத் திகழ திருக்குடும்பக் குரு தியாகத்திலும், சேவையிலும் சிறந்து விளங்கத் தன்னை அர்ப்பணிக்கினறார்.

முடிவுரை:

மாசி மாதம் கண்டியில் நடைபெற்ற ஒன்று கூடல் திருக்குடும்பக் கன்னியர் சபையின் துணை அங்கத்துவக் குருக்களுக்குப் பெரிதளவு உற்சாகத்தை ஊட்டியது. தமது அழைப்பு, பணிவாழ்வு என்பனபற்றி தெளிவு பெறவும், அவர்களின் கடமைகள், பொறுப்புகள் என்பனவற்றை அலசி ஆராயவும் வாய்ப்புக் கிடைத்தது. திருக்குடும்பச் சபையின் பொதுத் தலைவர், மற்றும் பொது [illegible]சகர்கள், ஊக்குவிப்பாளர்கள் அனைவரும் ஒரு [illegible]றவில் மிகவும் அக்கறையோடு எல்லாத் [illegible]யும் கவனித்து அனைவரையும் அன்போடும் [illegible]தோடும் கவனித்து திருக்குடும்ப மனப்பாங்கைப் [illegible]லித்தது ஒரு மறக்கமுடியாத அனுபவமாக அமைந்தது. [illegible]லாற்றிலே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய இந்த ஒன்று கூடலுக்கு நாம் இறைவனுக்கும் மற்றும் ஒழுங்கு செய்த அனைவருக்கும் என்றுமே கடமைப்பட்டவர்கள்.

உங்களுக்கு தெரியுமா?

மாணவர் மறையறிவுப் பகுதி இல.13

உங்களுக்குத் தெரியுமா என்ற இப்பகுதி தனது ஓராண்டை நிறைவு செய்து இரண்டாம் ஆண்டில் காலடியெடுத்து வைக்கின்றது. இவ் வேளையில் உங்களுடன் சில வார்த்தைகள்: இந்தப் பகுதி மாணவர்களை - சிறப்பாக 9ம் தரம் முதல் 13ம் தரம் கற்கும் மாணவர்களை மையமாக வைத்துத் தான் நடாத்தப்படுகின்றது. அதனால்தான் பரிசுத் தொகை மாணவர்களுக்கு இரட்டிப்பாக்கப்பட்டிருக்கின்றது.

நம்மை இறையியல் அறிவில் அகலப்படுத்துவதுதான் எமது நோக்கம். இது உங்கள் பரீட்சைகளுக்கும் கைகொடுக்கும் என்பது எமது நம்பிக்கை. ஆனால் துர்திஸ்டவசமாக இந்தப் பகுதியில் அனேகர் பங்குகொள்கின்றார்கள் என்ற திருப்தி இன்னும் எமக்கு ஏற்படவில்லை. அதனால்தான் இப்பகுதி பற்றிய உங்கள் கருத்துக்களையும் எழுதுங்கள் என்று பல முறை கேட்டிருந்தோம். இதன் வினாக்களுக்கு விடை தேடுவது சிரமமாக இருக்கின்றதோ என்னவோ? அதனால் வினாக்களைக் கொஞ்சம் இலகுபடுத்தலாம் என்று எண்ணுகின்றோம். இம்முறையும் இதற்கு அடுத்த 14 ம் பகுதியும் சவுலாக இருந்து பவுலாக மாறி தனது வாழ்வு முழுவதும் உழைத்தவரின் வாழ்க்கை வட்டத்தைச் சுற்றி அமைந்துள்ளது.

திருத்தூதர் பணிக்கும் சின்னப்பரின் திருமடல்களுக்கும் செல்லுங்கள். விடை கிடைக்கும்.

கேள்விகள்:

1. புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமடல்கள் எத்தனை?
2. இவரின் இரண்டாவது திருமுகங்கள் கொரிந்தியருக்கு எழுதப்பட்டவை. இரண்டு தொகுதிகளாக அவை பிரிக்கப்பட்டுள்ளன. கொரிந்தியர் என்று இவர்கள் ஏன் அழைக்கப்பட்டனர்.
3. புனித சின்னப்பர் தாம் போதித்த மக்களுக்கு என்ன சிறப்பான கருத்தை எடுத்துச் சென்றார்?
4. கலாத்தியருக்கு அவர் எத்தனை திருமுகங்களை எழுதினார்?
5. இவர் தனிப்பட்ட ஒருவருக்கு எழுதிய திருமுகம் ஒன்று வேதாகமத்தின் ஓர் அங்கமாக உள்ளது. அது யாருக்கு எழுதப்பட்டுள்ளது?
6. இவர் எந்த நகரத்தில் வாழ்ந்தார்?
7. புனித சின்னப்பர் எழுதிய திருமுகங்கள் எத்தனை பகுதிகளாக விவிலியத்தில் இடம் பெறுகின்றன?
8. இவர் அதிகமான திருமுகங்களை யாருக்கு எழுதியுள்ளார்?
9. புனித சின்னப்பர் எழுதிய முதலாவது திருமுகம் யாருக்கு எழுதப்பட்டது?
10. இது எப்போது எழுதப்பட்டது?

மாணவர் மறையறிவுப் பகுதி
இல. 11 இற்கான சரியான விடையளித்து
பரிசுக்குரியவராக தெரிவுசெய்யப்பட்டவர்
எஸ். ஜென்சி குரூஸ், பாடசாலை வீதி, தாழ்வுபாடு

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 11 இற்கான கேள்விக்கு 45 பேர் மட்டுமே விடையளித்திருந்தனர். **அவர்களுள் சரியான விடையளித்திருந்தவர்களுள் அதிஸ்ரசாலியாக தெரிவுசெய்யப்பட்டவர்கள் பெயர் விபரம்.**

1. தி. அன்ரனிற்றா, (யாழினி) தரம் - 12, புதுக்கமம்.
2. ச. செபமாலை, புதுக்கமம், உயிலங்குளம்.
3. ஜெ. டிமல்சன் வாஸ், பெரியபண்டிவிரிச்சான், மடுக்கோவில்.
4. க. றோசி இளசென்ஸ் சோசை, 2ம் வட்டாரம், வங்காலை.
5. ஜே. றோல்மேரி, தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.
6. மி. சுதர்ஷன், முருங்கன் பிட்டி, முருங்கன்.
7. எம். மரியம் ரொசானி, தரம் - 11, தலைமன்னார் பியர்.
8. டே. மரிய கொறற்றி சோசை, 7ம் வட்டாரம், வங்காலை.
9. அ. மேரி தர்மினி, புக்கமம், உயிலங்குளம்.
10. த. உஷாந்தினி (ராதா) தரம் -12, உயிலங்குளம்.

மாணவர் மறையறிவுப் பகுதி
இல. 11 இற்கான சரியான விடைகள்

1. தமாஸ்கு
2. நேர்த் தெரு என்னும் சந்தில்
3. தர்சு நகர்
4. "சகோதரர் சவுலே நீர் வந்த வழியில் உமக்குத் தோன்றிய ஆண்டவராகிய யேசு நீர் மீண்டும் பார்வை அடையவும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்படவும் என்னை உம்மிடம் அனுப்பியுள்ளார்" என்று செபித்தார்.
5. பர்ணபா
6. எலிமா என்னும் பாரேசு
7. பெருகை நகர்
8. விஸ்திரா நகர்
9. தொருபை
10. மத்திய தரைக்கடல்

புனித சூசையப்பர் சபை.... 14ம் பக்கத் தொடர்ச்சி

மேலும், இப்பெருவைபவத்தில் அருட்சகோதரர் கலாநிதி எஸ். ஏ. ஜ. மெத்தியூ, அருட்சகோதரர் கிங்ஸ்லி றெனோல் ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றினார்கள். பெருந்தொகையான குருக்களும், துறவியரும், கல்விமான்களும் பிரமுக்களும் இந்த முக்கியத்துவ மிக்க பெருவைபவத்தில் கலந்துகொண்டனர்.

கடந்த 140 வருடங்களாக இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும், ரங்கூனிலும் பாடசாலைகள், உயர் நிலைக் கல்வி நிலையங்கள், அனாதை மடங்கள், தொழிற்கல்வி நிறுவனங்கள், அச்சகங்கள் என்பன ஊடாக புனித சூசையப்பர் சபை அரும் பெரும் பணிகளை ஆற்றிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாணத்தில் கல்முனை கார்மேல் - பாத்திமாக் கல்லூரி, மட்டக்களப்பு புனித மரியாள் கல்லூரி என்பனவும், ஹட்டன் புனித பொஸ்கோ கல்லூரி, கம்பளை புனித சூசையப்பர் கல்லூரி போன்றவையும் புனித சூசையப்பர் சபையால் திறம்பட நடத்தப்பட்டவையாகும். அன்புச் சகோதரர்கள் சபையுடன் இச்சபை இணைவதன் மூலம் பெயர் மாற்றமுற்றாலும் பணிகள் மேலும் செழிப்புடன் தொடருமெனத் தெரிவிக்கப்படுகிறது.

திருமறைப்பணி நிலையத்தின் செய்தி மடல்

மறைக்கல்வி கல்வி விவிலியப் பணிகள்

அருட்சாதனப் பாசறைகள்

கடந்த மே மாதம் 22, 23ந் திகதிகளில் பண்டிவிரிச்சான் பங்கில் மறைக்கல்வி நிலையத்தின் இயக்குனர் மற்றும் முத்த மறையாசிரியர்களினால் உறுதிப்பூசுதல் அருட்சாதனப் பாசறை இடம்பெற்றது. ஜூன் மாதம் 5ம் 6ம் திகதிகளில் வங்காலையில் நற்கருணை மற்றும் உறுதிப்பூசுதல் பெறும் மாணவர்களுக்கான பயிற்சிப் பாசறைகள் இடம்பெற உள்ளன. இதுபோன்ற பாசறைகளை நடாத்த விரும்பினால் மறைக்கல்வி நிலைய இயக்குனரோடு தொடர்பு கொள்ளவும்.

அடுத்த மன்னாவில் எதிர்பாருங்கள்

அடுத்த மன்னா இதழ் மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் 4 மாதங்கள் வதிவிடப்பயிற்சி பெற்று வெளியேறும் மறையாசிரியர்களின் வதிவிடப்பயிற்சி சிறப்பிதழாக வெளிவர உள்ளது. எதிர்பாருங்கள்.

மறையாசிரியர்களுக்கான பங்கு மட்டப் பயிற்சிகள் தொடர்கின்றன

மறையாசிரியர்களின் வாழ்வு, பணி, அழைப்பு, ஆன்மீகம், ஒழுக்கம், மாண்பு, சவால்கள், பாட ஆயத்தம், கற்பித்தல் முறை, மாணவர்களுடனான அணுகுமுறை போன்ற பல அம்சங்களை உள்ளடக்கிய மறையாசிரியர்களுக்கான பயிற்சி பங்குகள்தோறும் நடாத்தப்பட்டு வருகின்றது. மறைக்கல்வி நிலைய இயக்குனர் அருட்பணியாளர் கிறிஸ்து நேசன் அடிகளாரின் தலைமையில் நிரந்தர மறையாசிரியர்கள் திரு. சவிரி, செபஸ்ரியாம்பிள்ளை, மரிய செல்வம் மற்றும் கென்றி ஆகியோர் இப்பயிற்சிப் பாசறைகளை நெறிப்படுத்தி வருகின்றனர். இறுதியாக இப்பாசறை பேசாலை பங்கில் கடந்த மே மாதம் 15ந் 16ந் திகதிகளிலும் தலைமன்னார் பங்கில் மே மாதம் 22, 23ந் திகதிகளிலும் நடைபெற்றது.

மறைமாவட்ட மறையாசிரியர் ஒன்றிய நிர்வாகக் கூட்டம்

மன்னார் மறைமாவட்ட மறையாசிரியர் ஒன்றிய நிர்வாக சபைக் கூட்டம் கடந்த ஏப்ரல் மாதம் 23ந் திகதி அரிப்புப் பங்கில் இடம்பெற்றது. இதில் மன்னார் மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளில் இருந்து பங்குப் பிரதிநிதிகளும் அரிப்புப் பங்கின் அனைத்து மறையாசிரியர்களும் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் அரிப்பு மறையாசிரியர்கள் இயற்கை மலர்களை கொடுத்து அனைவரையும் வரவேற்றனர். இந்நிகழ்வின்போது ஆசிரியர் திரு. அமலானந்த குமார் உளவியல் தொடர்பான சிறப்புரையாற்றினார். அரிப்புப் பங்குத்தந்தை மாக்கஸ் அடிகளார் மறையாசிரியர்களின் கடமைகளை வலியுறுத்தினார்.

பங்குகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள கத்தோலிக்க ஆசிரியர் சங்கங்களின் விபரங்கள்

வவுனியா பங்கு

தலைவர்: திரு. ஏ.ஏ.பி. பாஸ்கரன்
செயலர் : செல்வி. இ. கில்டா வதனகுமாரி
உபதலைவர் : திருமதி. மேரி கலிஸ்ரா திமோதி ரவீந்திரன்
பொருளாளர்: திருமதி. இ. செபஸ்ரியாம்பிள்ளை
செயற்குழு உறுப்பினர்கள்
திரு. சு. டொன்பொஸ்கோ, திருமதி. எல். எவ். நடேசமூர்த்தி, திருமதி. கிறிஸ்ரின் ஜெயக்குமாரி, திரு. சு. வஸ்தியாம்பிள்ளை, செல்வி. ச. அ. யூலியானா.

பண்டிவிரிச்சான் பங்கு

தலைவர்: செல்வி. எவ். எம். ஜி. லெம்பேட்
உபதலைவர் : திரு. எ. ஜெயசீலன்
செயலாளர் : திருமதி. எஸ். என். நிர்மலராஜா
உப செயலாளர் : திரு. ரி. யேசுதாசன் (கீரிசுட்டான்)
பொருளாளர் : திருமதி. வி. யேசுரெட்ணம்
செயற்குழு உறுப்பினர்கள்
திருமதி. எ. ஜெயசீலன், திருமதி. எம். பி. எக்ஸ். குரூஸ் திருமதி. வை. செபதாசன், திரு. எசார்வே, திரு. எ. ஜெரால்ட் அல்மேடா

தேவன்பிட்டிப் பங்கு

தலைவர் : திரு. எஸ். ஏ. வெஸ்லி
உபதலைவர் : திரு. வி. நாகராசா
செயலாளர் : செல்வி. கி.ஹெவின்றோஸ்
உப செயலாளர் : செல்வி. ஐ. சி. அமிர்தநாதன்
பொருளாளர் : திரு. எஸ். மரியதாஸ்
செயற்குழு உறுப்பினர்கள் :
திரு. எஸ். டனிஸ்ரன், செல்வி. யோ. சுபோதினி, திரு. யேசு நவநீதன், திரு. இ. லோறன்ஸ்

வஞ்சியன்குளம் பங்கு

தலைவர் : செல்வி. ம.ஜெயலற்
உபதலைவர் : திருமதி எம். எ. ஜே. அருள்நேசன்
செயலர் : செல்வி. ஆர். எ. நிரோஜினி
உபசெயலர் : திருமதி. பி. கிறிஸ்தோப்பர்
பொருளாளர் : திருமதி. என். மரியநாயகம்
செயற்குழு உறுப்பினர்கள் :
செல்வி. எஸ். ஜெயசத்திய ஸ்ரீ, திருமதி. ய. ஜெயலின்ரன், திருமதி. ட. அகஸ்ரீன், செல்வி. ஜி. மெக்ரலின்

தாழ்வுபாடு பங்கு

தலைவர் : திரு. ல. அமலானந்தகுமார்
உபதலைவர் : திருமதி. மரியகொறற்றி ஜோசப் பீரிஸ்
செயலாளர் : திருமதி. ஸ்ரான்லி செபமாலை குரூஸ்
உப செயலாளர் : செல்வி. இப்பொலிற் லியோணி குரூஸ்
பொருளாளர் : திருமதி. பிறிசில்லா யோகராஜா மொறாய்ஸ்
செயற்குழு உறுப்பினர்கள்
அருட்சகோதரி. கொன்ஸ்ரன்ரைன், திரு. லூ. பயஸ் ஏணஸ்ட் குரூஸ், திருமதி. சூசைமலர் பயஸ் ஏணஸ்ட் குரூஸ், திருமதி. தேவசகாயம் அந்தோனிக்கம் டயஸ் திருமதி. யசிந்தா மனுவல் றோச், திருமதி. மரிய புஸ்பம் சேவியர் பீரிஸ், திருமதி. இதய சகாயம் டயஸ்

பங்குத் தந்தையர்கள் மற்றும் கத்தோலிக்க ஆசிரியர்களின் கவனத்திற்கு

பங்குமட்டத்தில் கத்தோலிக்க ஆசிரிய சங்கங்களை ஏற்படுத்தி நிர்வாக உறுப்பினர்களின் பெயர் விபரங்களை எமக்கு அனுப்பியவர்களின் விபரங்களை இங்கே பிரசுரித்துள்ளோம். பெயர் விபரங்களை எமக்கு அனுப்பாத பங்குகள் தயவுசெய்து அவற்றை கூடிய விரைவில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். அடுத்துவரும் மன்னா பத்திரிகைகளில் ஏனைய பங்கு கத்தோலிக்க ஆசிரிய சங்க விபரங்கள் வெளியிடப்படும்.



பங்குமட்ட மறையாசிரியர் பயிற்சியில் பங்குகொண்டோரின் அனுபவங்கள்

போதனையும் சாதனையும் இணைய வேண்டும்

மறைவாழ்வுப் பணியாளர் எப்போதும் இறைவனோடு ஒன்றித்திருக்க வேண்டும். போதனையும் அத்தோடு சாதனையும் இணைந்து செல்ல வேண்டும் போன்ற ஆழமான சிந்தனைகள் இப்பயிற்சியின்போது எனக்குக் கிடைத்தது. எனது குடும்பம், எனது பங்கு போன்றவற்றின் ஆன்மீகத்தில் என்னுடைய பங்கு என்ன? என்ற கேள்வி என்னுள் எழுந்தது. பணி வாழ்வில் எனக்கு வரும் சவால்களை எதிர்கொள்ளும் வழிகளையும் இப்பயிற்சி எனக்கு விளக்கிக் கூறுவதாக அமைந்தது. அறியாத பல விடயங்களை நான் அறிந்துகொண்டேன்.

T. S. சுதா பச்சேக், பேசாலை.

ஆழமை உருவாக்கத்தில் ஈடுபட வைத்தது

இரண்டுநாள் கருத்தமர்வுகள் மறையாசிரியராகிய எம்மை ஆளுமை உருவாக்கத்தில் ஈடுபட வைத்தது. மறையாசிரியர் என்றால் யார்? இவர்களின் செயல்பாடுகள் என்ன? மறையாசிரியரின் சவால்களுக்கு எவ்வாறான வழிகளில் சுமுகமாகத் தீர்வு காணலாம் என்பதை இப்பயிற்சினூடாக அறியக் கூடியதாக இருந்தது. இதுபோன்ற பயிற்சிகள் எமக்குத் தொடர்ந்தும் வழங்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

அ. வில்டா மேரி சிராய்வா, பேசாலை.

பாட ஆயத்தம், கற்பித்தல் முறைகளைக் கற்றேன்

மறைவாழ்வுப் பணியாளரின் அழைப்பு எவ்வளவு மேன்மையானது அது எவ்வளவு கடினமானது என்பதை உணரக்கூடியதாக இருந்தது. நாங்கள் எவ்வாறு பணியினை மேற்கொள்ளவேண்டும் எங்களது வகுப்பறை கற்பித்தல் செயற்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்றும் பாட ஆயத்தம், கற்பித்தல் படிமுறைகள் என்பவற்றை மிகத் தெளிவாக அறியக்கூடியதாக இருந்தது. இது எனக்குக் கிடைத்த அரிய வாய்ப்பு. இந்த வாய்ப்புக்காக நான் இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

அ. சிரோமி பீரிஸ், பேசாலை

வேதாகமத்தை வாசிக்க வாழ்வாக்க ஆசை

வேதாகமத்தை வாசிக்க வேண்டும் அதனை எனது வாழ்வாக்க வேண்டும் என்ற ஆசை எனக்கு உருவாகியது. மாணவர்களுக்கு எப்படிக் கற்பிக்க வேண்டும் என்பதைவிட நான் முதலில் எப்படி வாழ வேண்டும் என்ற விடயத்தைப் புரிந்துகொண்டேன். மறைப்பணியாளர்களின் உரைகளிலிருந்து நல்ல விடயங்களை அறிந்துகொண்டேன். இரண்டு நாட்களும் நடந்த பயிற்சியில் எமது பங்கிற்கு நல்ல இறை பணியாளர்களை நீங்கள் உருவாக்கியுள்ளீர்கள். உங்களுடைய கருத்துக்கள் எம்மை சிந்திக்க தூண்டுகின்றது. மீண்டும் இப்படியொரு பயிற்சி நடக்க நான் விரும்புகின்றேன்.

சி. அனற் ஜான்சி ராணி, கீளியன் குடியிருப்பு.

சரியான மனநிலையை பெற்றுக்கொண்டுள்ளோம்

இப்பயிற்சியில் பங்குகொண்ட நாம் அனைவரும் எமது பணிவாழ்வு, அழைப்பு, சமூகத்தில் செய்ய வேண்டிய கடமைகள் பற்றிய சரியான அறிவையும் சரியான மனநிலையையும் பெற்றுக்கொண்டுள்ளோம். இதனையே எமது வாழ்வாக்கிக் கொள்ளமுடியும் எனவும் நம்பிக்கை கொண்டுள்ளோம். உங்களின் செயற்பாடுகள் யாவற்றுக்கும் எமது நன்றிகள்

திரு. எஸ். ஜெபநேசன், கீளியன்குடியிருப்பு.

புதிய உற்சாகம் என்னுள் பிறந்தது

என்னுடைய மறையாசிரியர் பணியில் மிகவும் சோர்வுற்ற மனநிலையில் இருந்தேன். இக்கருத்தரங்கின் பின்னர் உண்மையிலேயே புதிய உற்சாகம் பிறந்துள்ளதை என்னுள் உணர்கிறேன். இவ்வளவு நாளும் இருந்த ஏனோ தானோ என்ற மனநிலை இப்பொழுது மாறியுள்ளது. மற்றும் எப்படி அணுக வேண்டும் அவர்களை எப்படி நம்பால் கவர வேண்டும் என்பதனையும் அறியக்கூடியதாக இருந்தது. மற்றும் அழைப்பு என்ன என்பதை விளங்கிக் கொள்ள முடிந்தது.

அ. விமலதாசன், கீளியன்குடியிருப்பு.

வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டியதை அறிந்தேன்

இப்பயிற்சி மூலம் ஒழுங்கான முறையிலே மறைக்கல்விப் பாடத்தினை கற்பிக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தேன். அதேநேரத்தில் படிப்பிப்பதில் மட்டுமல்ல மறையாசிரியன் வாழ்க்கையில் எவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற விடயங்களை விளக்கமாக அறிந்துகொண்டேன்.

ஜோன்சன் பீலிக்ஸ், மன்னார்

வாழ்நாள் முழுவதும் செய்ய வேண்டிய பணி

இப்பயிற்சி மூலம் ஞாயிறு தினம் மட்டுமே எனது பணி அதாவது மறைக்கல்வி கற்பிக்கும் அந்த ஒரு மணி நேரம் மட்டும்தான் எனது பணி நேரம் என்ற கருத்து நீங்கி மறைவாழ்வுப் பணி என்பது என் வாழ்நாள் முழுவதும் செய்ய வேண்டிய ஒன்று என்பதை உணர்ந்துகொண்டேன். இதன் மூலம் என் வாழ்வு மாறவும் மற்றவர்களையும் நல்வழியில் வழிநடத்தவும் மற்றவருக்கு இறை இயேசுவைப்பற்றி கூறவும் வேண்டுமென்ற தூண்டுதல் பெற்றேன். இதுபோன்ற பயிற்சிகளை தொடர்ந்து எமக்கு தரவேண்டுமென விரும்புகிறேன்.

எ.எம். டயனா, மன்னார்.

புதிய் உணர்வு, மாற்றம் என்னுள் ஏற்பட்டது

மறையாசிரியர் என்ற முறையில் நான் இந்தப்பணிக்காக தெரிவு செய்யப்பட்ட நாள் முதல் இவ்வாறான பயிற்சியில் கலந்துகொள்ளவில்லை. இதுவே முதல் தடவை. இந்த பயிற்சியின் மூலமாக இப்பொழுதுதான் என்னுடைய பணியானது கடமையானது மிகவும் பாரியது என உணர்ந்துகொண்டேன். என்னுடைய பழைய ஆர்வமின்மை, சோம்பல், வேண்டா வெறுப்பு போன்ற பண்புகளைக் களைந்து புதிய மகிழ்ச்சியான நற்பண்புகளுடன் என்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்னும் புதிய உணர்வு, மாற்றம் என்னுள் ஏற்பட்டு புதிய நற்பணியாளராக உருமாற்றம் பெற்று வந்துள்ளேன். இப்பயிற்சி அனுபவத்தை தந்த உங்களுக்கு நன்றிகள்.

எ. யுஸ்ரினா, எழுத்தூர்.

பெரியப்பா பதில்கள்

கே. பெரியப்பா எவ்வளவோ உறவுகள் இருக்கின்றன ஏன் உங்களைப் பெரியப்பா என்று அழைக்கின்றார்கள்? சற்று விளக்கம் தாருங்கள்?

பிரபு பெரேரா, அன்ரனிஸ் வீதி, பேசாலை.

ப. பெரியப்பா ஸ்தானத்தில் இருப்பவர் ஒரு குடும்பத்தில் நாலு பேருக்கு புத்திமதி சொல்லும் நிலையில் இருப்பவர். திருச்சபை ஒரு குடும்பம்! ஆகவே பிள்ளைகளுக்கு ஏற்படும் கேள்விகளுக்கு ஒரு பெரியவர் என்ற ரீதியில், பெரியப்பா என்ற பெயரில் பதில் சொல்கிறேன். அவ்வளவுதான்.

கே. முதுமையை வெல்பவர்கள் யார்?

மேலாதிக்கன், செட்டிகுளம்.

ப. குழந்தை மனம் கொண்டவர்கள்.

கே. பெரியப்பா, சபையை பற்றி புகழ்ந்து பேசுவோருக்கு நீங்கள் கூறவிரும்புவது என்ன?

டெ. செல்வி பாய்வா, 8ம் வட்டாரம், பேசாலை.

ப. சபையை பற்றி புகழ்ந்து பேசுவோருக்கு நான் எதையும் கூறவிரும்பவில்லை. ஆனால் இந்தக் கேள்வியை கேட்கும் உங்களுக்குத்தான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். எல்லாவற்றிலும் நன்மையும் உண்டு தீமையும் உண்டு. கிறிஸ்தவ சபைகளைப் பொறுத்தவரையில் அவற்றின் கோட்பாடுகள் தவறானவையாக இருக்கலாம். அதாவது புனிதர் வணக்கம், மரியாள் பக்தி, திருச்சபையின் தலைமைத்துவம், வேதாக மத்திற்கு அவர்கள் கொடுக்கும் விளக்கம், திருப்பலி போன்றவை குறித்த அவர்களின் வாதங்கள், குற்றச் சாட்டுகள் பிழையாக இருக்கலாம். ஆனால் அவர்களின் அர்ப்பணம், பக்தி, ஆவிக் குரிய வாழ்வு, வார்த்தையில் இருக்கும் ஈடுபாடு போன்றவற்றை நாம் பாராட்டியே ஆகவேண்டும்.

கே. பெரியப்பா நடிப்புக்காரர்கள் இவ் உலகத்தில் நன்றாக நடித்து நல்ல பேர் கேட்கின்றார்கள். நல்லவர்கள் கெட்டபேர் எடுக்கிறார்கள் ஆனால் நீங்கள் இவர்களை பற்றியும் விசேடமாக நடிப்பு சுரேசிகளை பற்றியும் என்ன நினைக்கின்றீர்கள்?

நீ. ஆன் சிந்துஜா, ஒல்லிமடு, நானாட்டான்.

ப. நன்மைக்கும் தீமைக்கும் எதிரான போராட்டத்தில் இறுதியில் நன்மையே வெல்லும்.

▣ கே. தீவிரவாதிகளை எப்படி ஒடுக்குவது?

மரியதாஸ், முருங்கன்.

ப. அவர்களுக்கு நல்ல வேலை கொடுப்பதன் மூலம்.

கே. திரும்ப பெற முடியாதது எது?

மணி, அடம்பன்.

ப. பேசிவிட்ட வார்த்தை, தொடுத்து விட்ட அம்பு, கடந்து விட்ட காலம், இழந்துவிட்ட வாய்ப்பு என்று எங்கோ படித்த ஞாபகம்.

கே. நீதிமன்றங்களில் சில வழக்குகளின் தீர்ப்பைத் தள்ளி வைப்பது ஏன்?

ஜெயகாந்த ரூபன், மன்னார்.

ப. சூடான வழக்குகளை கொஞ்சம் ஆற வைக்கத்தான். ஆறின கஞ்சி பழங்கஞ்சியாகும்.

கே. அனுபவம் என்பது என்ன?

வியாசன், பண்டிவிரிச்சான்.

ப. தோல்விகளிலிருந்து பிழிந்து எடுக்கப்படும் மருந்து.

கே. நீங்கள் ஒரு ரி.வி பைத்தியமா?

கனிவதனி, காத்தான்குளம்.

ப. இந்தப் போதை மருந்துக்கு எப்போதும் நான் அடிமையானது இல்லை. தொடர்கள் பார்ப்பது இல்லை. திரைப்படம் தொடர்பான விஷயங்களில் அதிக ஆர்வம் இல்லை. செய்திக் காட்சிகளில் ஆர்வம் உண்டு. சிந்தனையைத் தூண்டும் நிகழ்ச்சிகள் பிடிக்கும் அறிவு பூர்வ நிகழ்ச்சிகள் பிடிக்கும். இவை நம்மைப் பைத்தியமாக்காத நிகழ்ச்சிகள்.

கே. யாரையாவது பார்த்து நீங்கள் மூக்கில் விரலை வைத்ததுண்டா?

கல்விப்பிரியன், வவுனியா.

ப. ஆம்..... என்னைச் சந்திக்கவரும் சிலர் குளிக்காமல் வருகிறார்கள். அவர்களைப் பார்த்து மூக்கில் விரலை வைத்து சமாளிக்கிறேன்.

கே. 'நட்பு' சிறு குறிப்பு தருக

பற்றிமா,- உயிலங்குளம்.

ப. நல்ல நட்பு ஆரோக்கியத்தைப்போல ஒரு பொக்கிசம். ஆரோக்கியத்தை இழந்த பிறகுதானே அதன் மதிப்பு நமக்குப் புரிகிறது.

▣ இந்த அடையாளமிடப்பட்ட கேள்வி பாராட்டுக்குரியதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

நினைவுகள்

ஆண்டு நினைவு

மலர்வு 27 - 10 - 1953



உதிர்வு 21 - 05 - 2002

செ.அந்தோனிதாசன்
(தலைமன்னார்)

பூவும் மணமும்போல் வீணையும் நாதமும் போல் அன்பும் அறனும் உடைத்தாயின் எங்கள்மேல் அன்புகொண்டு வாழ்ந்த அப்பாவின் அன்பு முகம் எம்மைவிட்டு மறைவதில்லை. நிலவின் வரவை வானம் எதிர்பார்க்கும் மழையின் வரவை மண் எதிர்பார்க்கும் அலையின் வரவை கரை எதிர்பார்க்கும் அப்பா நீங்கள் மடிந்தாலும் எப்போது உங்கள் முகத்தை பார்ப்போம் என்று நாங்கள் அனைவரும் இரண்டாண்டு கழிந்தாலும் எந்த நேரமும் நினைத்து கண்ணீர் வடிக்கின்றோம்.

இரக்கமும் கிருபையும் நிறைந்த உயிர்த்த இயேசுவே, இவ்வுலகை விட்டுப்பிரிந்து சென்ற செல்லையா அந்தோனிதாசனின் ஆத்மா விண்ணுலகில் உம்மோடுகூட வீற்றிருக்க விடை கூர்ந்தருளும்.

பிரிவால் துயருறும், மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

1ம் ஆண்டு நினைவு

மலர்வு 10 - 07 - 1921



உதிர்வு 07 - 06 - 2003

சந்தான் செபமாலை
(கண்டல், அடம்பன்)

"ஆண்டவர் எனதாயன் எனக்கு வேண்டியதொன்றுமில்லை"

அன்பும் ஆதரவும் கொண்ட கணவனாக பாசமும் பரிவும் கொண்ட தந்தையாக நேசமும் நீதியும் வழங்கிய மாமனாராக பிரியமும் பேரன்பும் நிறைந்த பேரனாக எமக்கெல்லாம் நல்வாழ்வளித்து தனக்கென்று வாழாத வள்ளலாக வாழ்ந்த அன்புத் தந்தையே! எமை விட்டுப் பிரிந்து வருடம் ஒன்று ஆனாலும் எம் மனதில் இன்றும் ஒலிக்குதய்யா உம் குரல்.

இவரின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

1ம் ஆண்டு நினைவு

மலர்வு 29 - 08 - 1945

உதிர்வு 13 - 06 - 2003

தி. நீற்றம்மாள்
(புனிதம்)

சீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்

பாவியை மன்னிக்கும் இறைமகன் யேசு ஆவியைத் தந்து சிலுவையை வென்றார். பாரினில் நீயும் செய்த பாவங்கள் போக்கி பரமதில் உனக்கும் ஓர் இடம் தருவார். மரணத்தை வென்று சிலுவையின் மைந்தன் மண்ணினில் செய்த பாவங்கள் பொறுப்பார் விண்ணகம் உனக்கு நிம்மதி அருளும். கண்ணயர்வாய் ஆன்ம ஆறுதல் அடைவாய். அன்னாரின் ஆத்மா சாந்திக்காக 13-06-2004 ஞாயிறு பிற்பகல் 4.30 மணிக்கு SPANICHE MISION, SOPHIE STR – 5, 3072 – OSTERMUNDIGAN – SWISS லும், 14-06-2004 திங்கட்கிழமை காலை 6.15 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்திலும் 15.06.2004 செவ்வாய்க் கிழமை இந்தியா கோவை பூலுவப்பட்டி புனித அந்தோனியார் ஆலயத்திலும் அன்னாரது ஆத்ம இளைப்பாற்றிக்காக திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

1ம் ஆண்டு நினைவு

மலர்வு 08 - 04 - 1950



உதிர்வு 30 - 06 - 2003

ச. யேசுதாசன் சம்பாய்வா
(உரிமையாளர்:- நிர்மலா ஸ்ரோஸ்)

வருடமோ ஒன்றானாலும் உன் வதனத்தை மறக்கவில்லை
வாழ்வினில் எம்மை எல்லாம் வளமோடு வாழவைத்தாய்
உலகினில் வாழ்ந்தபோது உயர்வுடன் வாழலானாய்
உன்னதனாக நின்று ஒளியுமே கொள்ளலானாய்
அன்பினைக் கொண்டு நீயும் அருளுமே பெறவே நின்றாய்
அன்புடன் வாழலானாய் ஏந்தல்போல் விளங்கலானாய்
நன்மைகள் பலவும் செய்து நாட்டினர் மதிக்க வாழ்ந்தாய்

இன்னிலம் தன்னில் நீயும் எழுச்சியும் கொண்டு நின்றாய்
உன்னை நாம் எங்கு காண்போம் உருகுதே உள்ளம் ஐயா
இன்னிலம் தன்னில் நாமும் என்றுமே மறக்க மாட்டோம்
இறைவனின் அருளைப்பெற்று அன்புடன் வாழ்வீராக
என்றுமே நாம் உமக்கு இறைஞ்சியே வேண்டுகின்றோம்
உந்தனை நினைக்கும்போது உள்ளமோ வேகுதையா
இந்தரை தன்னில் நீங்கள் என்றுமே வாழ்வீராக

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள் மருமக்கள், பேரன்.

4ம் ஆண்டு நினைவு

மலர்வு 11 - 03 - 1936



உதிர்வு 05 - 06 - 2000

நீ. சந்தியாப்பிள்ளை
(ஓய்வுபெற்ற அதிபர்)
(ஒலிமடு, நானாட்டான்)

அன்பாய் அணைத்தெடுத்து
ஆதரவாய் மொழி பேசி
விண்போல் உயர்த்திவிட்டு
மண்ணுலகில் மாண்பாய் வாழ்ந்து
மானிடச் சமூகத்தின் மடமையினை
கல்வி என்னும் பயிரால் அழித்து
ஓய்வு எடுத்து உல்லாசமாக
இருக்கும் வேளையில் காலன் - உன்னை
கண் வைத்தானே
காலம் நான்கு ஆண்டுகள் ஆனாலும்
[illegible]வாடுகின்றோம்
[illegible]டைக்க யாருமே
[illegible]என்று ஏங்குகின்றோம்.

[illegible]ரின் பிரிவால் துயருறும், மனைவி, மக்கள், மருமகன், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சுமைதாங்கி... 6ம் பக்கத் தொடர்.....

தங்கள் கணவன்மாருடன் பிரிந்து சென்ற தங்கைமார் தமது அக்கா ஜெனிபரைப்பற்றிச் சிந்தித்ததில்லை. தனிமை ஜெனிபரை மிகவும் வதைத்தது. தங்கைமார் மூவரும் தொலைபேசியில் பேசிக்கொள்வார்கள். இந்த அக்காவைப்பற்றியும் அவர்கள் பேசினார்கள். "பாவம் அக்கா இனி ஏலாத காலம். கலியாணமும் செய்ய முடியாத வயசு, வயோதிபர் மடத்தில சேர்த்துவிடுவம். அக்கா இருக்கும் வீட்ட வித்தால் நம்ம மூண்டுபேருக்கும் கொஞ்சப் பணமும் கிடைக்கும்" என்றார்கள். இதை ஜெனிபரிடம் அவளது மூத்த தங்கை கேட்டபோது இந்தப் பூமியே பிளந்து தன்னை விழுங்கிவிடாதா என்று எண்ணினாள்.

"இவங்க மூண்டு பேருக்காகவா நான் என்ர இளமையின் அத்தனை விருப்பங்களையும் தியாகம் செய்தேன்? அன்றைக்கு சிலுவையில தன்ர உயிரத் தியாகம் செய்த இயேசுவுக்கு நன்றி காட்டாத கொடியவர்கள்போல இன்று என் தங்கைமாரும் எனக்குச் செய்துவிட்டார்கள்" என்று பெரும் எரிமலையே வெடித்து அவள் இதயத்தில் எரிந்துகொண்டிருந்தது. "நான் இப்போது பெறுமதி இல்லாத மனுசி. எனக்காக எந்த நெஞ்சிலும் ஈரம் இல்ல. இப்போது நான் யாருக்கும் தேவைப்படாத பொருள். இவங்கட வாழ்வு வளமாக்க உழைத்ததிற்கு எனக்கு இவர்கள் தந்த பரிசு இதுதான்" என்று சிந்திக்கின்றாள்.

தங்கை ஏஞ்சல் ஜெனிபரின் கரங்களை உலுக்கி "என்னக்கா வயோதிபர் மடம் பற்றி இப்போதே கற்பனையா?" என்று கேலியாகக் கேட்கின்றாள். "இல்லையம்மா ஏஞ்சல் வீதிகளில் இடைக்கிடை சுமைதாங்கிகள் கட்டுவார்கள். வீதியால் போவோர் வருவோர் தங்கள் சுமைகளை இறக்கிவைத்து இளைப்பாறுவதற்கு, மீண்டும் தங்கள் சுமைகளைத் தூக்கியவர்கள் தங்களுக்கு இளைப்பாற்றியளித்த சுமைதாங்கியைப் பற்றிச் சிந்திப்பதில்லை. நானும் உங்கள் மூவருக்கும் ஓர் சுமைதாங்கியாக இருந்திருக்கின்றேன். என்னைப்பற்றி நீங்கள் கவலைப்படாமல், நீங்கள் மூவரும் சந்தோஷமாயிருங்கள். அதுவே எனக்குப் போதுமென்றாள்.

ஜெனிபரின் வாய்முணுக்கிறது. "இயேசுவே மீண்டும் என் கரங்களை உம் கரங்களோடிணைத்து, என் பயணத்தை உம் அடிச்சுவட்டின்மேல் வைத்துப்பயணிக்கின்றேன் என்னை வழிநடத்தும்" என்கின்றாள்.

(யாவும் கற்பனையல்ல)

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - இல.26

திருப்பாடல்கள் 76 - 100

உங்கள் விடைகளை 10. 7. 2004 க்கு முன் எமக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடை[illegible] மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். சரியான விடைகளை எழுதியவர்களில் [illegible]பர் பாராட்டுக்குரியோராகத் தெரிவு செய்யபபடுவர்.



இடமிருந்து வலம்

1) என் ஊழியன் தாவீதைக் கண்டு பிடித்தேன்: என் திருத்தைலத்தால் அவனுக்குத் ..... செய்தேன்.
4) ..... நம் கடவுளுக்கு நிகரானவர் யார்?
5) என் மக்களே என் அறிவுரைக்குச் செவிசாயுங்கள். என் .....களுக்குச் செவி கொடுங்கள்.
6) உம் மக்கள் உம்மில் மகிழ்வுறுமாறு எங்களுக்குப் ..... அளிக்க மாட்டீரோ?
7) வாருங்கள் ..... பணிந்து அவரைத் தொழுவோம்.
8) அதன் கொடிகள் கடல் வரையும், அதன் ..... பேராறுவரையும் பரவின.
10) அவர்கள் உறுதியற்ற ..... கொண்ட மக்கள்: என் வழிகளை அறியாதவர்கள்.
15) ஆண்டவரே திரும்பிவாரும்: எத்துணை காலம் இந்நிலை: உம் ..... இரக்கம் காட்டும்.
20) உமது இல்லத்தில் தங்கியிருப்போர் ..... பெற்றோர்.

மேலிருந்து கீழ்

1) மாட்சியும் புகழ்ச்சியும் அவரது ..... உள்ளன.
2) உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்குப் ..... செய்து அதை நிறைவேற்றுங்கள்.
3) ..... அனைவரும் அவரைக் கொள்ளையிடுகின்றனர்.
5) உங்கள் ..... விரிவாகத் திறங்கள்: நான் அதை நிரப்புவேன்.
7) அனைத்துத் தெய்வங்களே அவரைத் ..... பணியுங்கள்.
9) தெய்வங்களிடையே அவர் ..... வழங்குகின்றார்.
10) தெய்வங்கள் அனைத்திற்கும் மேலாக அஞ்சுதற்கு ..... (3ம், 4ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
15) அமாவாசையில் பௌர்ணமியில் நமது திருவிழா நாளில் எக்காளம் ..... கள்.
16) முதல் பருவ ..... அதனை நீர்நிலைகள் நிறைந்த இடமாக்கும்.

வலமிருந்து இடம்

3) அவனது ..... என்றென்றும் நிலைநிறுத்துவேன்.
5) இனி நாங்கள் உம்மைவிட்டு அகலமாட்டோம்: எமக்கு ..... அளித்தருளும்.
8) ஆண்டவர் தம் மக்களைத் ..... விடார்: தம் உரிமைச் சொத்தாம் அவர்களைக் கைவிடார். (3வது எழுத்து 1வது எழுத்துக்கு முன்னே நிற்கிறது)
9) நீங்கள் தெய்வங்கள்: ..... எல்லாரும் உன்னதரின் புதல்வர்கள், (3ம், 4ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
11) அவருக்கு நன்றி .....அவர் பெயரைப் போற்றுங்கள். (3வது எழுத்து 1வது எழுத்துக்கு முன்னே நிற்கிறது)
13) அவரது பெயரை அவர்கள் போற்றுவார்களாக. அவரே .....
14) உம் உதவியை நாடும் என் .....க் கேட்டருளும்.
17) ..... மீட்டி இனிய குரலில் அவரை வாழ்த்திப் பாடுங்கள்.
19) அவருடைய வலக்கரமும் புனிதமிகு ..... அவருக்கு வெற்றியை அளித்துள்ளன.
21) அவருக்கு அஞ்சி நடப்போருக்கு அவரது மீட்பு அண்மையில் உள்ளது என்பது ..... (குழம்பியுள்ளது)
22) ..... உண்மையும் பெரிதும் கொண்டவர்.

கீழிருந்து மேல்

9) ..... கள் மூலம் நான் பேசுவேன்.
10) என் ..... பாதாளத்தை நெருங்கியுள்ளது (2ம், 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன)
12) ஆண்டவரின் முன்னிலையில், அனைத்துலகின் தலைவர் முன்னிலையில் ..... மெழுகென உருகுகின்றன. (2வது எழுத்து 1வது எழுத்துக்கு முன்னே நிற்கிறது)
14) உம் வலிமைமிகு செயல்களைக் ..... நான் மகிழ்ந்து பாடுவேன்.
15) உம் .....க் காத்தருளும்: நீரே என் கடவுள்: நான் உம்மீது நம்பிக்கை கொண்டுள்ளேன்.
18) .....திகழ் பறவைகளைக் கடற்கரை மணலென வரவழைத்தார்.
20) கடவுளே எங்களை முன்னைய ..... க்குக் கொணர்ந்தருளும்.
21) பேரன்பும் ..... யும் ஒன்றையொன்று சந்திக்கும்.
22) நேர்மையானர் ..... மரமெனச் செழிந்தோங்குவர்.

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 25ற்கான முடிவுகளை ஜூலை மாத மன்னாவில் எதிர்பாருங்கள்

விவிலியகுறுக்கெழுத்துப் போட்டி இல. 24ல் [illegible]யான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்

முதலாம் பரிசு

கே. றோகினி பறுனாந்து,
தரம் - 7, 8ம் வட்டாரம்,
அரிப்பு

இரண்டாம் பரிசு

அ. அலெக்ஸ் லவுசன்,
திருமறைப்பணி நிலையம், கல்லடி,
மன்னார்.

மூன்றாம் பரிசு

ரி. பிரகாசினி,
41. வேவிசிங்கம் வீதி,
புதுமுகத்துவாரம்,
மட்டக்களப்பு.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 176 பேர்
சரியான விடைகளை எழுதியோர் 152 பேர்

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 24ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்

பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1.சந்தான் கொண்சிலா, வண்ணாகுளம், அடம்பன்.
2. ஜெ. பத்ம ஜீவா, ஆட்காட்டிவெளி, அடம்பன்.
3. எ. அனிஸ்ரா, பற்றிமா வீதி, மாதகல்.
4. எஸ். நிஷாந்தினி, 8ம் வட்டாரம், பேசாலை.
5. கே. அசோதா, நறுவிலிக்குளம், வங்காலை
6. எ. சிந்து, பள்ளங்கோட்டை, நானாட்டான், மன்னார்.
7. பவளா சக்காரியாஸ், மறைக்கல்வி நடுநிலையம், மட்டக்களப்பு.
8. எம். வேர்வீளோறன்சி விதானகே, பள்ளிமுனை, மன்னார்.
9. எ.விக்டோறியா டயாந்தினி, தலைமன்னார்பியர், தலைமன்னார்.
10. மை. மரியம் ரொசானி, தலைமன்னார் பியர், தலைமன்னார்.
11. சூ. நொயல் நிராஜ், சியோன் சுபிசேஷ சபை, உப்புக்குளம்.
12. சூ. எவானா, உப்புக்குளம், மன்னார்.
13. ஜீவரெட்ணம் யசிந்தா, 6ம் வட்டாரம், விடத்தல்தீவு.
14. ஜெ. கிருசாந்தினி, ஆஸ்பத்திரி வீதி, கற்பிட்டி.
15. அ. மரியசீலி, ஓலைத்தொடுவாய், பேசாலை.
16. ஜே.போல்ஜான்சன், 12, புனித.பத்திரிசியார்வீதி, யாழ்ப்பாணம்.
17. திருமதி எரிக் சுகந்தி, சுவிஸ்.
18.ஆர்.எல்.ராஜகுமாரி,32,அன்பியம்லேன்,பாலையூற்று, திருகோணமலை
19. அ. கனி, உயிலங்குளம், மன்னார்.
20. கோ. டெய்சிராணி, 384, மூர்வீதி, மன்னார்.
21. யே. கமிலஸ்ரீனா, தரம்-7, மன்.உயிர்த்தராசன் குளம்.றோ.க.
22. ரி.ஜெ. சகாயராணி பெர்னாண்டோ, 8ம் வட்டாரம், பேசாலை.
23. சென. ஆன் நியூசிக்கா துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
24. எஸ். பி. செல்வநாயகம், பற்றிமா வீதி, மாதகல்.
25. அ. சிறோமி, மாதிரிக் கிராமம், நறுவிலிக்குளம், வங்காலை.
26. பே. ஆன், மணற்களம், உயிலங்குளம்.
27. அ. ஜெராட்சன், கறுக்காக்குளம், வட்டக்கண்டல்.
28. எஸ். சற்ளின், தி.கு மடம், யாழ்ப்பாணம்.
29. எ. ஆர். ஜோசப் டில் றுக்சன், மகா கல்கமுவ, கல்கமுவ.
30. ஆ. பேள்சினி, வெளிக்குளம், வவுனியா.
31. வசந்தா தோமஸ், மறைக்கல்வி நடுநிலையம், மட்டக்களப்பு.
32. ச. கவிதா, பிச்சைகுளம், முருங்கன்.
33. ஆ. மெல்சி டயஸ், 8ம் வட்டாரம், கெபி வீதி, பேசாலை.
34. அ. றொக்சி, நறுவிலிக்குளம், வங்காலை.
35. பி. அமிர்தநாதன் கஜனி, இல. 92, பெற்றா, மன்னார்.
36. ம. ரதி, பாப்பாமோட்டை, திருக்கேதிஸ்வரம்.
37. செ. கனிஸ்ரா ஆனந்தி, பொன்தீவுகண்டல், முருங்கன்.
38. ஹ. யூடித் பிகிறாடோ, இல.325, பள்ளிமுனைகிழக்கு, பள்ளிமுனை.
39. இ. கலிஸ்ரா, தி.கு. கன்னியர் மடம், பெரிய பண்டிவிரிச்சான்.
40. ச. திலீபா, திருக்குடும்பக் கன்னியர் மடம், பெரியபண்டிவிரிச்சான்.
41. மி. சுப சிரி ஜீன்ஸ், முருங்கன் பிட்டி, முருங்கன்.
42. பி. அயறின்ஸ்ரெலா பீரிஸ், 5ம்வட்டாரம், கடற்கரைவீதி, அரிப்பு.
43. மை. அமல் சிறிதரன் பீரிஸ், 5ம் வட்டாரம், வங்காலை.
44. ய. ஆரோக்கிய நாயகி குரூஸ், 5ம் வட்டாரம், வங்காலை.
45. இ. அனக்கிளிற்றா மார்க், 6ம் வட்டாரம், வங்காலை.
46. கா. யக்கோவாள் மடுத்தீன், தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
47. பூவதி தாமோதரம்பிள்ளை, தபால் கந்தோர் வீதி, மன்னார்.
48. பி. பர்வின் நிருஷியா குரூஸ், 7ம் வட்டாரம், பேசாலை.
49. எம். எஸ். பெனாண்டோ, ஓலைத் தொடுவாய், கரிசல்.
50. ம. ஜெனீட்டா, இளவாலைமேற்கு, இளவாலை, யாழ்ப்பாணம்.

விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி

இல. 24 (திருப்பாடல்கள் 26 – 50)

சரியான விடைகள்

இடமிருந்து வலம்

1. நிலவறைகளில் (33:7)
4. முன்னிட்டு (44:26)
6. குடியிருக்க (27:4)
9. தூதர் (34:7)
14. திருவுளம் (40:8)
15. பேரன்பால் (31:16)
19. நம்பிக்கை (27:3)
20. சாவின் (44:19)
23. மீட்பு (37:39)

வலமிருந்து இடம்

3. அருஞ்செயல் (40:5)
4. முன்னிலை (41:12)
8. கருணையினால் (30:7)
12. முழங்கிடவே (47:5)
15. பேரன்பை (31:21)
17. நகரினில் (48:8)
18. ஆதரவ (41:12)
21. வழிகாட்டி (31:3)
24. உள்ளத்தார்க்கு (34:18)

மேலிருந்து கீழ்

1. நிலைநாட்டும் (35:24)
2. செயல்களை (43:5)
3. அடைக்கலமும் (46:1)
5. கருவாலி (29:9)
7. வாழ்நாளின் (39:4)
9. தூக்கி (37:24)
[illegible]. பேரன்பு (33:22)
[illegible] பார்வையை (39:13)

கீழிலிருந்து மேல்

10. வலிமை (28:7)
11. ஞானமிகு (49:3)
13. யாழினால் (33:2)
15. பேரன்பில் (31:7)
22. பேரன்பையும் (36:10)
23. மீசார் (42:6)
24. உவகை (37:23)

2வது பிறந்தநாள் வாழ்த்து

செல்வி. ச. அந்தோனியம்மா (சர்மிலா)

கள்ளி கட்டைக்காட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சந்தான் பிரகாசி அம்மா தம்பதிகளின் ஏகபுத்திரி சர்மிலா தனது 2வது பிறந்தநாளை எதிர்வரும் 16.06.2004 அன்று தமது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடவுள்ளார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மார், அம்மையாமார், தொட்டப்பா, தொட்டம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமிமார், மாமாமார், சித்தாமார், சித்திமார், அத்தான்மார், மச்சாள்மார், அண்ணாமார், அக்காமார் மற்றும் உறவினர் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ இறைஆசி வேண்டி வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: அன்பு மாமி இ. மேரி யக்குலின

திருமண வாழ்வின்

வெள்ளிவிழா நிகழ்வு மலரும் மகிழ்வு

திரு. திருமதி. மார்சலஸ், புனிதசீலி

தம்பதியர்

இன்னறும் இல்லறச் சோலைதனில்
இருபத்தைந்தாண்டுகள் மகிழ்வுடனுலவி,
வெள்ளி விழாவதனில் தடம்பதித்த இந்நாளில்
நன்மக்களாம் உம் பிள்ளைகள் நாமும்
நற்சோதரர் சுற்றத்தாரும்
வாழி நலம் சூழவென வாழ்த்துகின்றோம்
இந்நாள்வரை இனிதே காத்த இணையிலா இறைவன்
இனிவரும் எந்நாளும் காத்து ஐம்பதின்
பொன்விழாக்காணும் நற்பேறு நல்கும் வரமருள
இறைவனை இறைஞ்சுகின்றோம் யாம்.

வாழ்த்தும் பிள்ளைகள், சகோதரர், உற்றார், உறவினர், நண்பர்கள்.

சென். திரேசாவீதி, 8ம் வட்டாரம், பேசாலை

அனைத்துத் தொடர்புகளுக்கும்

The Editor,
MANNA
Pastoral Centre,
St. Sebestian's St.
Mannar,
Sri Lanka.

பதிப்பா[illegible]ர்,
மன்[illegible]
திருமறைப்பணி [illegible]
புனித செபஸ்ரி[illegible]
பேராலய வீதி
மன்னார்

மன்னா

கத்தோலிக்க ஆயர் பேர[illegible]ன் புதிய நியனங்கள்

ஆயர் பேரவையின் புதிய உப தலைவராக மன்னார் ஆயர் நியமனம்

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் புதிய உபதலைவராக மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். ஆயர் பேரவையின் அமர்வு அண்மையில் கண்டியில் நடைபெற்றபோது புதிய நியமனங்கள் வழங்கப்பட்டன. இதில் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவராக கண்டி ஆயர் மேதகு வியான்னி பெனாண்டோ ஆண்டகையும் உப தலைவராக மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகையும் நியமிக்கப்பட்டனர். மன்னார் ஆயர் ஏற்கனவே வகித்துவந்த பொதுநிலை ஆணைக்குழுவின் தலைவர் பதவியை தொடர்ந்தும் அவரே வகிப்பார் என்பது குறிப்பிடத்தக்கது. கத்தோலிக்க ஆயர் பேரவையின் உப தலைவர் பதவியை தற்போதைய நியமனம் வரை யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையே வகித்து வந்தார். 6 ஆண்டுகளை கொண்ட இரண்டு பணிக்காலங்களை இடைவெளிவிட்டு இவர் உபதலைவராக பணியாற்றியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை செடேக் மனித நேய ஆணைக்குழுவின் உப தலைவர் பதவியை யாழ் ஆயர் வகிப்பார் என்று அறிய வருகிறது.

திருமலை மட்டுநகர் ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை வகித்து வந்த புலம் பெயர்ந்தோர் ஆணைக்குழுவின் தலைமைப் பொறுப்பு திரும்பவும் அவரிடமே கொடுக்கப்பட்டுள்ளது. செடேக் மனித நேய ஆணைக்குழுவின் தலைமைப் பதவியை ஆயர் மேதகு றேமன் பீரிஸ் ஆண்டகையும் சமூகத் தொடர்பு ஆணைக்குழுவின் தலைவர் பதவியை பேராயர் ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகையும் பெற்றிருக்கின்றனர்.

செபமாலை தாசர் சபையின் முன்னாள் உயர் தலைவர் இறைபதம்

செபமாலை தாசர் சபையின் முன்னாள் உயர் தலைவர் எம். எல். அலோசியஸ் அடிகளார் ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி பெங்களூர் புனித யுவானியார் மருத்துவ மனையில் காலமானார். செபமாலைத் தாசர் சபையின் ஆரம்பக் குருக்களினால் பயிற்றப்பட்ட இவர் இச்சபையின் உயர் ஆலோசனைக் குழுவின் முதல் ஆலோசகராக தோந்தெடுக்கப்பட்டார்.

இவர் தனது துறவு வாழ்வை மகிழ்வுடனும், அர்ப்பணத்துடனும் வாழ்ந்ததுடன் 1985ஆம் ஆண்டிலிருந்து 2000 ஆண்டுவரை 15 ஆண்டுகள் சபையின் உயர் தலைவராகப் பணியாற்றினார். இக்காலத்தில் சபையின் வளர்ச்சிக்காக மிகவும் ஈடுபாட்டுடன் உழைத்தார். அனைத்து உறுப்பினரையும் அளவு கடந்த விதமாக அன்பு செய்து வழிநடத்தியதுடன் இந்தியாவில் ஏராளமான புதிய அழைத்தல்களைப் பெற்று சபை வளர உதவினார். புதிய மடங்களை நிறுவியதுடன் பெங்களூரில் உயர் தலைவர் இல்லத்தையும் அழகுற அமைத்தார்.

இவரின் ஆன்ம சாந்திக்காக மன்னா அன்பு நெஞ்சங்களின் பிரார்த்தனைகளை சமர்ப்பிக்கின்றோம்.

அண்மையில் பேசாலையில் இறைபதமடைந்த செவாலியர் வேதம் பெல்டானொ அவர்களின் நினைவலைகள்! மன்னாரில் முதல் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையையும் இரண்டாவது ஆயர் இரா. யேசேப்பு ஆண்டகை அவர்களையும் செவாலியருக்குரிய அங்கியுடன் வரவேற்கும் நிகழ்வு.

ஜெயசீலன் அடிகளாரின் புதிய நூல்

தேவ தாயின் அற்புத வரலாறு

அருட்தந்தை கலாநிதி ஜெ. இ. ஜெயசீலன் அடிகளார் தேவதாயின் அற்புத வரலாறு என்னும் புத்தகத்தை வெளியிட்டுள்ளார். தேவமாதாவின் அற்புதமான சரித்திரம், என்னும் புத்தகம் இதற்கு முன் ஞானப்பிரகாசர் சுவாமியாரால் வெளியாகியுள்ளதை நாம் அறிவோம். அப்புத்தகம் 1874ம் ஆண்டு சென்னையில் அச்சிடப்பட்டது. ஆகிர்தமேரி என்னும் புனிதைக்கு தேவதாய் ஸ்பானிய மொழியில் கூறிய இவ்வரலாறு நான்கு கண்டங்களாக பரமவிரகசிய பட்டணம் என்னும் பெயரில் ஆங்கிலத்திலும் வேறு பல ஐரோப்பிய மொழிகளிலும் வெளியிடப்பட்டன. இதனை அடியொற்றியே வீரமாமுனிவர் தேம்பாவனியைப் படைத்தார். தேவதாயின் அற்புத வரலாறு என்னும் புதிய புத்தகம் இந்த வரிசையில் வரும் இன்னும் ஒரு படைப்பு.

வெள்ளி விழா அன்பளிப்புகளை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கிய திருத்தந்தை

திருத்தந்தை 2ஆம் அருள்சின்னப்பர் தமது பணியின் 25ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கிடைத்த அன்பளிப்புக்களை பாலஸ்தீன இஸ்ரவேல் பகுதிகளில் அவதிப்படும் மக்களுக்கு நன்கொடையாக வழங்கினார். உலகெங்குமிருந்து வெள்ளி விழாவையொட்டி 12 லட்சம் டொலர்கள் அன்பளிப்பாக கிடைத்தன. 10 லட்சம் யூரோக்களுக்கான காசோலை பாலஸ்தீன திருப்பீடப் பணிக்குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த நன்கொடைப் பணம் முழுவதும் கருதினால்களால் சேகரிக்கப்பட்டு திருத்தந்தைக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனியில் தமிழர் நடாத்திய ஆவணக் கண்காட்சி

ஜேர்மனியின் முன்சன் நகரில் கடந்த ஏப்ரல் மாதம் 1ஆம் திகதி ஆவணக் கண்காட்சி ஒன்று நடைபெற்றது. இந்த ஆவணக் கண்காட்சியில் இலங்கை உட்பட சுமார் 200 நாடுகளின் பழைய புதிய தாள் நாணயங்கள், நாணயக் குற்றிகள், தபால் முத்திரைகள், தொலைபேசி அட்டைகள், தமிழ் பத்திரிகைகள் என்று ஏராளமான ஆவணங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

தாயகத்தில் இருந்து புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வசித்துவரும் ஏ. ஐ. ஜோசப் என்பவரால் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவான அன்றைய தினம் நடைபெற்ற இந்தக் கண்காட்சியை பார்வையிட வந்தவர்களிடம் அறவிடப்பட்ட சுமார் 17 ஆயிரம் ரூபாவையும், கைதடி வயோதிபர் இல்லத்துக்கு வழங்குவதற்காக அவர் அனுப்பி வைத்துள்ளார். கத்தோலிக்க திருச்சபையைச் சார்ந்த இவர் கடந்த 14 வருட காலமாக இத்தகைய ஆவணங்களைச் சேகரித்து பாதுகாத்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இந்தக் கண்காட்சியில் எமது திருச்சபையைச் சார்ந்தவர்களால் வெளியிடப்படும் பல பத்திரிகைகளும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் யாழ் மறைமாவட்ட பத்திரிகையான 'பாதுகாவலன' உட்பட ஜேர்மனியில் இருந்து வெளிவரும் 'தொடுவானம', பிரான்சில் இருந்து வெளிவரும் 'உறவுகள்' மற்றும் மன்னாரில் இருந்து வெளிவரும் எமது பத்திரிகை 'மன்னா' என்பனவும் சிறப்பிடம் பிடித்திருந்தன.

சுவிஸ் வாழ் தமிழ்க் கத்தோலிக்கரின் உரோமை நோக்கிய திருப்பயணம்



இறைமகன் இயேசுவின் உயிர்ப்பு விழா மகிழ்வுடன் 12.04.2004 அன்று மாலை சுவிசிலிருந்து உரோமை நோக்கி 62 திருப்பயணிகள் இணைந்து, சுவிஸ் கத்தோலிக்கப் பணியக இயக்குனர் அருட்திரு பெப்பி சோசை அவர்கள் தலைமையில் சென்றோம்.

13.04.2004 காலை பாதுவா புனித அந்தோனியார் ஆலயத்தில் முதற் காலை ஊன்றியபோது பயணக்களை நீங்கி புத்துயிரும் ஆசீரும் பெற்றோம். புனித அந்தோயாருக்கென ஒதுக்கப்பட்ட செவ்வாய்க்கிழமையான அன்றைய நாளில் திருப்பலியில் பங்குகொண்டதுடன், புனிதரின் அழியா நாக்கு, கல்லறை [illegible] புனித பண்டங்களை வணங்கும் பாக்கியம் பெற்றோம்.

வேளையில் கடலுக்குள் அமைந்துள்ள வெனிஸ் நகர[illegible]கு சென்று புராதன ஆலயத்தையும், பட்டணத்தின் அழகையும் பார்வையிட்டோம்.

ஏழ்மையையும் சிலுவையையும் அன்புடன் ஏற்று கிறீஸ்துவைப் பின்சென்ற புனித பிரான்சிஸ்க்கு அசிசி வாழ்ந்த அசிசி நகரிலுள்ள ஆலயத்தையும் புனிதரின் கல்லறையையும் தரிசித்து தமிழில் திருப்பலி ஒப்புக்கொடுத்து செபித்தோம். ஐந்து காய வரம் பெற்றவர[illegible] புனித அசிசியார் பிரான்சிஸ்கன் துறவற சபையை[illegible]ம். இவ் ஆலயத்திற்கு அருகாமையில் புனித [illegible] ஆலயம் உள்ளது. இங்கே புனிதையின் உடல் [illegible] செய்யப்பட்ட இடம், புனித பிரான்சிஸ்குவுடன் [illegible]தாகக் கூறப்படும் சிலுவை போன்றவற்றை [illegible]வையிட்டோம்.

14.04.2004 அன்று திருத்தந்தை அவர்களை வத்திக்கானில் நேரில் கண்டு அவர் ஆசி பெற்றோம்.

16.04.2004 அன்று ஆதிக்கிறீஸ்தவர்களின் சுரங்க அறைகள், அவர்களை அடக்க செய்த கற்றக்கோம்ஸ் எனப்படும் கல்லறைகளை தரிசித்தபோது அவர்களின் விசுவாச வாழ்வை எண்ணி வியந்தோம்.

வேதசாட்சிகளின் கல்லறையைச்சுற்றி தம் கல்லறையை கட்டியிருந்தனர். அல்பானிய மலைத்தொடரில் அமைந்துள்ள இக் கற்றல்கோம்ஸ் மறுபிறப்பு அனைவருக்கும் உண்டு என்பதைக் காட்டும் விசுவாச சின்னமாக உள்ளது. புனித செபஸ்தியார் கல்லறைமேல் அமைந்த பீடத்தில் தமிழில் திருப்பலி ஒப்புக்கொடுத்து செபித்தோம்.

மாலைவேளையில் கொட்டும் மழையின் மத்தியிலும் தளராது எம் விசுவாசப் பயணத்தைத் தொடர்ந்தோம். பிலாத்து ஆண்டவர் யேசுவை மரண விசாரணை நடத்திய திருப்படிகளில் முழங்காலில் சென்று ஆண்டவரின் திரு இரத்தம் வடிந்ததை தொட்டு செபித்தோம். இப்புனித படிகள் ஜெருசலேமிலிருந்து புனித கெலனாவால் கொண்டுவரப்பட்டு, புனித லத்திரன் ஆலயத்திற்கு அருகாமையில் வைக்கப்பட்டுள்ளது.

புனித கன்னி மரியாளுக்கென முதன்முதல் கட்டிய பனிமயமாதா பேராலயத்தில் பாலன் இயேசு பிறந்த தொட்டிலை ஆராதித்து செபித்தோம். உரோமிலுள்ள இரண்டாவது பேராலயமான புனித சின்னப்பர் பேராலயத்தையும், புனிதரின் கல்லறையையும், புனிதரை சிறையில் கட்டி வைத்த சங்கிலியையும் பார்வையிட்டு வணங்கினோம்.

இவ்வாறாக 5 நாட்கள் இத்தாலியில் தங்கியிருந்து புனிதர் நடந்த திருவடிகளை தரிசித்து ஆசிபெற்ற நாம் அனைவரும் பேறுபெற்றவர்களே.

இவ் யாத்திரைப்பயணத்தில் பயண வழிபாட்டிகளாக சகோதரர் ஜேம்ஸ் கிளறன்ஸ், அருட்திரு. ஜெயசிங்கம் அ.ம.தி., அருட்திரு. யஸ்ரின், அருட்திரு றெக்ஸ் சவுந்திரா, அருட்திரு. ஜெயந்தன் அ.ம.தி., ஆகியோர் பல சிரமங்கள் மத்தியில் தளராது விளங்கப்படுத்தி ஆன்மீக வழிகாட்டினர். நாம் கண்டவை அறிந்தவை அனைத்தையும் சொற்களில் எழுத முடியாத அளவு ஒவ்வொரு ஆலயத்திலும் அமைந்துள்ள சிற்ப, ஓவிய, கட்டடக்கலை வேலைப்பாடுகளும், புனிதத்தன்மையும் எம்மை பரவசப்படுத்தின.

றூபா அன்ரன், சுவிஸ்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு கொட்டாஞ்சேனை அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது.